14 April 1931


DL
211, N15AB
M31.16'10.
187508







# ஆனந்த போதினி

# ANANDA BODHINI.

Vol. 16. ஸ்ரீ ருளடக்கம். No. 10.

8 - MAY 1931


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 721 |
| 2. | அரும்பொருள் விளக்கம் | ... 722 |
| 3. | காரச்சி காங்கிரஸ் | ... 723 |
| 4. | நற்றமிழ் நந்தி, பக்தி விளக்கம் | 729-732 |
| 5. | மூன்றுவது வகுப்புப் பிரயாணம் | 734 |
| 6. | மேனாட்டுத் தத்துவம் | ... 737 |
| 7. | பத்தினிப் பெண்டிர் மாண்பு | ... 742 |
| 8. | பிரபஞ்ச உற்பத்தி | ... 745 |
| 9. | கர்ணன் மாண்பு | ... 750 |
| 10. | மேனாட்டு விழுச் செல்வம் | ... 755 |
| 11. | "எவருக்காகப் பரிவதோ" | ... 759 |
| 12. | உலகத்தினியல்பு | ... 769 |
| 13. | திலகவதியார் | ... 774 |
| 14. | நான்கு தருமங்கள் | ... 778 |
| 15. | கனவின் பலன் | ... 782 |
| 16. | கராச்சி காங்கிரஸ் முடிவு | ... 785 |
| 17. | யசுர்வேதத்திலுள்ள சாரீரகோபநிஷத், ஜீவிய ஊர்ஜிதம் | 788-790 |
| 18. | நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள் | 792 |
| 19. | நாவல். பிரபஞ்ச விநோதம் | 795-798 |
| | பஞ்சாங்கம் | ... 800 |







துவத்துடன், பெண்களுக் குண்
க்கும்.
வயிற்றிலுள்ள இரணங்களை ஆ
தம் அல்லது மோர் சாதம் சாப்
றை சாப்பிடலாம். பாரிசவாய்வுக்

# “ ஆனந்தபோதினி ”

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட : | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—8—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6-அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலே விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரு[illegible] யனவாகவும் எழுதவேண்டும்.

| | |
|---|---|
| **Life Subscription** ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் |
| | அன்னிய நாடுகளுக் |

*Telephone* No. 3005. *Telegram* :-

விலாசம்:—நா. முனிசாமி முதலி

[illegible] ஸாயர் சின்னதம்பி முதலி தெரு, [illegible]


# சகல மேக சித்தாதி எண்ணெய்

196

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு டேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக் கொண்டு பசும்பாலில் கலந்து சாப்பிடல் வேண்டும்.

இ[illegible] [illegible] மேகவாய்வு, கைகால் பிடிப்பு வீக்கம் உடம்பு[illegible] இடுப்புவலி இவைகள் [illegible]ம், வயிற்றில் தங்கிய வாயுவையும் வெளிப்



படுத்துவதுடன், பெண்களுக் குண்டாகும் சூதக வாய்வு; சூதக வலி இவைகளைப் போக்கும்.

வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும். இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர்சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிடவேண்டும். மருந்தை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிடலாம். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த மருந்து. வாதசரீரம்

குழந்தைகளுக்குக் காணும் மாந்தம், கைகால் வீக்கம் இவைகளுக்கு ஒரு தேக்கரண்டி எண்ணெயைப் பசும் பாலில் கலந்து காலையில் கொடுக்க சகலமும் நீங்கும். சுரம் அடிக்கும்போதும் எண்ணெயைக் கொடுக்கலாம். 3 நாளைக்கு காலையில் மாத்திரம் கொடுக்கவேண்டும்.

அண்டவாதம், குடல் வாதம், கருப்ப வீக்கம், இரணம் இவைகளுக்கு இது சஞ்சீவியை யொத்தது.

எண்ணெய் சூடு பண்ணக்கூடியது ஆகையால் தயிர்சாதம் சாப்பிடவேண்டும்.

3 நாள் சேர்ந்தாற்போல் எண்ணெயைச் சாப்பிட்டு விட்டு 3 நாள் தாமதித்து மறுபடியும் 3 நாள் மருந்து சாப்பிடவேண்டும். புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# இன்பசாரம்

இம் மாத்திரையைக் காலையிலும் மாலையிலும் தாள்செய்து வாயில் போட்டுக் கொண்டு பால் சாப்பிட்டுவரின், பசி அதிகரிக்கும், நரம்புகளுக்கு உணர்ச்சியைத் தரும், இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா, முதலான சத்து வஸ்துக்களுடன்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தி யளிக்கும்

விதைத் திணுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது. இதன் முக்கிய குணம் புருஷர்களுக்குப் புருஷத் தன்மையும் பெண்களுக்குப் பெண் தன்மையும் உண்டு பண்ணும் என்பது நிச்சயம்.

இருபாலார்களின் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளச் செய்வதும் தவிர கருப்பம் தரிக்கவும் செய்யும்.

இருமல், க்ஷயம், இருதய வியாதி, சுரம், பித்த சோகை, பசியின்மை, வீக்கம், மதுமேகம், பாரிசவாய்வு இவைகள் நீங்குகின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் புத்தான் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும். 30-மாத்திரை ரூ

சூரணங்கள் ஆகிய பேதிமருந்துகளை உபயோகிப்பதால் மருந்து சாப்பிடும்போது மலம் தள்ளுவதும், மருந்து நின்றதும் மலம் கட்டுவதுமன்றி, சரீரத்தில் உஷ்ணமும் அதிகரித்து மீளா வியாதிகளையும் உண்டாக்குகின்றன என்பது உலக அனுபவம். இம்மருந்து உட்கொள்ளுவதால் ஷை உபத்திரவமின்றி நீடித்த வியாதியையும் நொடிப்பொழுதில் கண்டித்து பூரண சுகத்தை அளிக்கக்கூடியது.

ஒருமுறை மருந்தில் சகல நோய்களும் நீங்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0

# சஞ்சீவிச் சூரணம்

இச்சூரணம் ஒரு அரிசி எடை எடுத்துக்கொண்டு காலை மாலைகளில் தேக உட்கொண்டு வந்தால், மூலத்தில் காணும் பவத்திரம் என்னும் புண், அஜீரண குன்மம், பித்த சுரம் இவை போம்.




இம் மருந்து முக்கியமாய் பாலிய வயதுடைய வர்களுக்கு இரவில் தானாக ஸ்கலிதமாகும் இந்திரியத்தை தடைப்படுத்துவதில் நிகரற்றது.

இவ்வியாதியை ஒரு மருந்தும் குணப்படுத்துவது கிடையாது. இவ் வியாதியால் பெருத்த கெடுதலும் சம்பவிப்பது இல்லை என்றதால் அநேகர் பராமரிக்கையாய் இருக்காதீர்கள்.

ஸ்கலிதத்தின் கொடுமையானது நாளடைவில் பலயீனத்தை உண்டுபண்ணி கைகால் அசதி, சோம்பல், நித்திரை இவைகளால் துன்புறுத்தப்படும்.

வெண்ணெய் அல்லது நெய்யில் ஒரு அரிசி எடை சாப்பிட குணமாய் விடும்.

குழந்தைகளுக்குக் காணும் மாந்த சுரம் வயிற்றுக் கழிச்சல் இவைகளுக்கு தேனில் பாதி அரிசி எடை காலை மாலையில் கொடுக்க நிவர்த்தி யாகும்.

குழந்தைகளுக்குக் காணும் பால் கட்டி என்னும் கொடிய வியாதியை இவ் வொரு மருந்தே கேட்கின்றது. நானும் பல இங்கிலீஷ் டாக்டர்களும் பல இடங்களிலும் பல மருந்துகளிலும் ஆராய்ந்து பார்த்து கடைசியில் இம்மருந்து கிடைக்கப்பெற்று அநேக குழந்தைகள் காப்பாற்றப்பட்டது. புட்டி 1-க்கு விலை ரூபா 3.

**வெளிவந்துவிட்டது!** **வெளிவந்துவிட்டது!!**

டாக்டர்-மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

## அநுபவ வைத்திய நூல்

ஒவ்வொரு வீட்டிலும் இன்றியமையாதிருக்கவேண்டிய களஞ்சியம். வைத்தியர்களுக்கு இஃது ஒரு சிறந்த பொக்கிஷம். வைத்தியரின்றி சிகிச்சை செய்து கொள்வதற்கு இந்நூல் மிக்க உதவியாகவிருக்கும். சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் ஆர்டருக்கு முந்துங்கள். இதன் விலை ரூபா 1. தபாற்செலவு வேறு.

**விலாசம்:—கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

## முந்துங்கள்! முந்துங்கள்!!

# ஆனந்தபோதினி வாரப் பதிப்பு

## 3—வது வருடக் கொண்டாட்டத்திற்காக

### 14-4-31 முதல் 31-5-31 வரை கீழ்க்கண்ட எங்கள் புஸ்தகங்களின் விலை மிகவும் குறைத்துக்கொடுக்கிறோம்.

பிறகு எக்காரணமுங் கொண்டு இவ்வித குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட மாட்டாது. ஆதலால் இச்சமயத்தைத் தவறவிடாதீர்கள், உடனே முந்துங்கள்.

15-ம்
அவ்விவ
விப்போர்
(5)
புது வி
செ

| | பழைய விலை ரூ. | அ. | ப. | குறைந்த விலை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சரித்திரம் ... | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரம் உபதேசம் ... | 1 | 12 | 0 | 1 | 4 | 0 |
| தத்துவ சங்கிரஹ ராமாயணம் ... | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| கம்பராமயண சங்கிரஹம் ... | 2 | 0 | 0 | 1 | 8 | 0 |
| இன்ப வாழ்க்கையின் இரகசியங்கள் ... | 2 | 0 | 0 | 1 | 6 | 0 |
| மதிமோச விளக்கம் ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| கைவல்ய நவநீத வசனம் ... | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| ஞான சூரியோதயம் என்னும் வேதாந்த இரகசியார்த்த வினாவிடை ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| ஞானரத்தினம் ... | 0 | 4 | 0 | 0 | 2 | 0 |
| பகவத் கீதா சங்கிரகம் ... | 0 | 2 | 6 | 0 | 1 | 6 |
| மாதவி மாதவன் 2-பாகங்கள் ... | 2 | 0 | 0 | 1 | 4 | 0 |
| மனமோகன மாணிக்கம் ... | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| அற்புத நவநீத ரம்பை ... | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| மெடீரியா மெடிகா என்னும் அருமையான வைத்திய நூல் ... | 3 | 0 | 0 | 2 | 0 | 0 |

| | பழைய விலை ரூ. | அ. | ப. | குறைந்த விலை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| குணசுந்தரன் ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 | 0 | 0 | 8 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 | 0 | 0 | 10 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| நெட்டாஜி ... | 0 | 10 | 0 | 0 | 6 | 0 |
| கனகரத்தினம் ... | 0 | 8 | 0 | 0 | 6 | 0 |
| மேனுமினுக்கி ... | 0 | 8 | 0 | 0 | 4 | 0 |
| இந்துலீகா ... | 0 | 8 | 0 | 0 | 6 | 0 |
| நளினசுந்தரி ... | 0 | 10 | 0 | 0 | 6 | 0 |
| சதானந்தர் ... | 1 | 4 | 0 | 0 | 10 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 | 0 | 0 | 4 | 0 |
| கோமளவல்லி ... | 0 | 8 | 0 | 0 | 5 | 0 |
| மனோன்மணி ... | 0 | 8 | 0 | 0 | 5 | 0 |
| பூலோகலக்ஷ்மி கதை ... | 0 | 10 | 0 | 0 | 6 | 0 |
| [illegible]வல்லி கதை ... | 0 | 6 | 0 | 0 | [illegible] | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞான செல்வாம்பாள் 5-பாகங்கள் ... | 9 | 10 | 0 | 5 | 0 | 0 |
| இரத்தினபுரி இரகசியம் 4-பாகங்கள் ... | 8 | 0 | 0 | 4 | 8 | 0 |
| பவளத் தீவு 2-பாகம் ... | 3 | 0 | 0 | 1 | 8 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| கனகபூஷணம் 2-பாகம் ... | 3 | 8 | 0 | 2 | 0 | 0 |
| இந்திராபாய் ... | 2 | 8 | 0 | 1 | 4 | 0 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | 0 | 0 | 10 | 0 |
| அமராவதி 2-பாகம் ... | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| ஆனந்தவிங் ... | 2 | 0 | 0 | 0 | 14 | 0 |
| கடற்கொள்ளைக்காரன் 1-ம் பாகம் / ,, ,, 2-ம் பாகம் ... | 3 | 4 | 0 | 2 | 0 | 0 |
| கமலசேகரன் ... | 1 | 12 | 0 | 0 | 14 | 0 |
| மதனம்பாள் 2-பாகம் ... | 3 | 0 | 0 | 1 | 8 | 0 |
| ஆனந்தவிங்கின் அஷ்ட ஜெயங்கள் ... | 1 | 12 | 0 | 0 | 14 | 0 |
| [illegible]த்திருபாய் ... | 1 | 12 | 0 | 1 | 0 | 0 |
| சேர் ... ஜாமணி ... | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| மாத ... பாளபகவதி ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| 2— [illegible]நாதக் கதைத் திரட்டு ... | 0 | 5 | 0 | 0 | 3 | 0 |
| [illegible]யாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை ... | 0 | 5 | 0 | 0 | 3 | 0 |
| மஹா வீரப் பிரதாப விகடவல்லி ... | 0 | 6 | 0 | 0 | 4 | 0 |
| அகட விகட விலாச விநோதக் கதை ... | 0 | 10 | 0 | 0 | 5 | 0 |
| ஓயாச் சிரிப்பு என்னும் அவுட்டுச் சிரிப்பு கதைகள் | 0 | 6 | 0 | 0 | 3 | 0 |
| பத்மாசனி ... | 0 | 14 | 0 | 0 | 8 | 0 |
| வீரநாதன் ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| [illegible] ... | 0 | 8 | 0 | 0 | 4 | 0 |
| [illegible]யரான் கதை ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| வீணாகர்னன் ஞானேந்திரி ... | 0 | 8 | 0 | 0 | 5 | 0 |
| கமலமதி ... | 0 | 8 | 0 | 0 | 4 | 0 |
| சம்பந்தமூர்த்தி அல்லது சகோதர வாஞ்சை ... | 0 | 7 | 0 | 0 | 4 | 0 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 | 0 | 0 | 6 | 0 |
| தபால் கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 | 0 | 0 | 8 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 | 0 | 0 | 12 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 | 0 | 0 | 6 | 0 |
| திருவிளையாடற் புராணம் ... | 2 | 8 | 0 | 1 | 0 | 0 |
| அஸ்வமேத யாகம் ... | 2 | 0 | 0 | 0 | 14 | 0 |
| விராடபர்வம் ... | 1 | 4 | 0 | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் தேவாரத்திரட்டு ... | 1 | 12 | 0 | 0 | 12 | 0 |
| 18 சித்தர் ஞானக்கோவை ... | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| குமாரதேவர் சாஸ்திரக் கோவை ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| ராமாயணச் சுருக்கம் ... | 0 | 6 | 0 | 0 | 3 | 0 |
| ராமாயண ஓடம் ... | 0 | 3 | 0 | 0 | 2 | 0 |
| கண்டிராஜன் நாடகம் ... | 0 | 12 | 0 | 0 | 6 | 0 |
| சம்பூர்ண மஹாபாரதம் (டிராமா) ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| சத்தியவான் சாவித்திரி (டிராமா) ... | 0 | 6 | 0 | 0 | 3 | 0 |
| ஞானசவுந்தரி (டிராமா) ... | 0 | 6 | 0 | 0 | 3 | 0 |
| சம்பூர்ண அரிச்சந்திரா (டிராமா) ... | 0 | 12 | 0 | 0 | 6 | 0 |
| மூவர் அடங்கன் முறை ... | 5 | 0 | 0 | 2 | 12 | 0 |
| சிகாகோ பிரசங்கம் ... | 0 | 4 | 0 | 0 | 2 | 0 |
| கைம்முறை பாக்கெட் வைத்திய நூல் ... | 1 | 0 | 0 | 0 | 8 | 0 |


வியாபாரிகளாவது மற்றெவராவது எத்தனை காப்பிகள் ஆர்டர் (செய்தாலும், கீழ்க்கண்ட குறைந்த விலைப்படிதான் புத்தகங்கள் அனுப்பப் படும்; இக் குறைந்த விலையிலும் மற்றொரு முறை கமிஷன் தள்ளிக் கொடு(க்கப்பட மாட்டாது.

அயல்நாட்டார் புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும்பொழுது புத்(தக விலையோடு உத்தேசமான தபால் செலவும் சேர்த்து முன்பணமாக மணியார்டராகவாவது, அல்லது அவரவரூர் நோட்டுக்களாகவாவது, அல்ல(து போஸ்டல் ஆர்டராகவாவது அனுப்புவது நலம். சி. ஓ. டி. யிலும் அனுப்பலாம். ஆனால் தபால்செலவு மிகவும் ஜாஸ்தியாகும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி மு(தலியாரவர்களால் எழுதப்பட்ட

**புதிய பதிப்பு** — **பகவத்கீ(தை) வசனம்.** — **புதிய பதிப்பு**

எளிய இனிய தமிழ் நடையில் கூடிய சீக்கிரம் வெளிவ(ரும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோம்.

வேண்டுமென்பவர்கள் உடனே எழு(தி ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.

## ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


ஆபரணக் கற்கள்
ஆயிரக்
கணக்கான
வாடிக்கைகாரர்
ஆதரிக்கும்.
டாஸ்லோ டைமண்டு,
ரங்கோன் கமலம்,
செயற்கை புஷ்யராகம,
இமிடேஷன் புஷ்யராகம்,
இமிடேஷன் பட்டை, சி
கப்பு,இச்சை,நீலம்,ப
ச்சை,தங்கரேக்,வெள்
ளிரேக்,முதலியவைக
ள்லியல சகாயமாய்கொ
டுக்கப்படும்.
கேட்லாக் இனம்.
பி.கோபாலஸ்வாமி நாயுடு & சன்ஸ்
பரங்கிமலை போஸ்ட். (மதராஸ்.)

காதலருக்கு இன்பந்தரும் நூதன

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம் வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின்

# - இரகசியங்கள் -

## (மூன்றாம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரிய டைப்பில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகாம், தெலுங்கு, கன்னடம், மாராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், வியன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

## என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். **இதன் விலை ரூபா 3.**

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்கரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் வாழ வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவர்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப் பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

## (இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந் திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்)** **9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண் டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா | 2 | 0 | 0 |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் ,, ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் ,, ,, | 8 | 0 | 0 |

**பவளத்தீவு 2 பாகம்** **3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திரபாய்

### அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், டார்பிடோ குண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரசமொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவன்னமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனும்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனும்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனும்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமூறுத்தி, மதனும்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணு 8

அற்புதமர்மங்கள் அல்லது

**ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டுவிதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாஸையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**[illegible] பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்குய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 4 பாகம் 8 4 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

# நெட்டாஜீ சரித்திரம்.

(பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவம் எழுதியது.)

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக அவனியில் தோன்றி அவதார புருஷராய் விளங்கிய சிவாஜிக்குப் பக்கத் துணையாய் இந் நெட்டாஜீ எப்பொழுதும் நின்று மொகலாயக் கொடுங்கோன்மையினின்றும் தேசத்தை விடுதலை செய்து சிவாஜிக்கு நேரிடயிருந்த பல விபத்துக்களையும் தடுத்து, அவருக்குச் சதிசெய்த பாவிகளின் உயிரைப் போக்கி, அஞ்சா நெஞ்சனாய் அநேக ஆபத்துக்களினின்றும் தப்பி, ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினன். இதில் யுத்த சம்பந்தமான தந்திரங்களும் வீரர்களின் சாமர்த்தியங்களும் வெகுவாக எழுதப்பட்டு தேசபக்தியைப் புகட்டும் விஷயங்கள் நிறைந்திருக்கின்றது. இதன் விலை அணு 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-5-31 வரை அணு 8.

# கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்கநாயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு நேர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**301 கீர்த்தனைகள் கொண்ட 1-ம் பாகம் விலை ரூபா 1.**
**246 கீர்த்தனைகள் கொண்ட 2-ம் பாகம் விலை ரூபா 1.**
**211 பெரிய கீர்த்தனைகளுள்ள 3-ம் பாகம் விலை ரூபா 1.**
**226 பெரிய கீர்த்தனைகளுள்ள 4-ம் பாகம் விலை ரூபா 1.**
நான்கு பாகம் சேர்ந்தது ஒரே கட்டடம் விலை ரூபா 3—4—0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

92 பக்கங்கள் கொண்ட

பிரஜோற்பத்தி வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாஸ்திர ஸௌகர்யமான)

சர்வமுகூர்த்த

"ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. (B. A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாகசக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவநாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஹோரை, சந்திர உதையம், கிரக உச்சம், நவக்கிரக நிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☛ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்கள்.

தனலக்ஷ்மி கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½.

6-பஞ்சாங்கம் அணா 2½. 12-பஞ்சாங்கம் அணா 4.

ஷை வருஷத்திய தெலுங்கு நிம்மகெட்ட பஞ்சாங்கம்.

1-க்கு அணா ½. 6-க்கு அணா 2½. 12-க்கு அணா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | பிரஜோற்பத்தி௵ சித்திரை௴ ௧௨ | பகுதி |
|---|---|---|
| 16 | 1931௵ ஏப்ரல்௴ 14௳ | 10 |

187508

## கடவுள் வணக்கம்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்
குளிர்தீம் புனற்கையள்ளிக்
கொள்ளுகினு மந்நீ ரிடைத்திளைத் தாடினும்
குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும்வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலு மாலைகந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்
சந்ததமு நின்னருளை மறவா வரந்தந்து
தமியேனை ரக்ஷைபுரிவாய்
சர்வபரி பூரண அகண்டகத் துவமான
சச்சிதாநந்த சிவமே. (1)

பொருளைப் பூவைப் பூவையரைப் பொருளென் றெண்ணு மொருபாவி
இருளைத் துரந்திட் டொளிநெறியை என்னுட் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள அன்பர் நெஞ்சம் தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே அறிவா னந்தத் தாரமுதே. (2)

உள்ளத்தி னுள்ளே யொளித்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந் தாலெனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே. (3)

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் எத்தகைய போக போக்கியங்களை நுகரினும் திருவருளை மறவாதிருக்கக் கிருபை செய்யவேண்டும் என்றார்.

(இ-ள்) எல்லாப் பொருள்களிலும் நிறைந்து அகண்ட வஸ்துவாகிய உண்மையறிவானந்த வடிவாகிய மங்களப் பொருளே. கொத்துக்களில் மலர்கள் மலர்ந்து விளங்கும் சோலைகளின் நல்ல நிழலில் தங்கினும், குளிர்ந்த மதுரமாகிய நீரைக் கையில் அள்ளி உட்கொண்டாலும், அந்நீரில் மூழ்கி விளையாடினும், எழில் நலங்கனிந்த மங்கையர் வந்து உலவுகின்றதுபோல் குளிர்ந்த காற்று முற்றத்தின் கண் உலாவும்படி விசாலமான மாளிகைகளை உடையனாகும் காலத்திலும், வெண்மையாகிய பூரண சந்திரன் பட்டப் பகல்போல் நிலவைப் பொழிவதால் மகிழுங் காலத்திலும், தேவாமிர்தம் அறுசுவை உண்டியில் கலந்தது என்னும்படியான உணவை உண்ணுகிற காலத்திலும், பூமாலை, சந்தனம், வெற்றிலை பாக்கு முதலிய இன்பப் பொருள்களை விரும்பி அநுபவித்து இஷ்டம்போல் விளையாட்டுக்கள் புரிந்து கண்ணுறங்கும் சமயத்திலும்—எப்பொழுதும் உன் திருவருளை மறவாத வரத்தினைக் கொடுத்து எளியேனைக் காத்தருளுவாயாக என்க.

கொந்து—கொத்து. புனல்—நீர். சந்தம்—சந்தனம். வேலை—கடல். விந்தை—ஆச்சரியம். வெள்ளிலை—வெற்றிலை. அடைக்காய்—பாக்கு. சந்ததம்—சதா காலம்.

(2) இதனால் அஞ்ஞானத்தைப் போக்கிச் சன்மார்க்கத்தைப் பதியச் செய்யும் காலம் எது? என்று கேட்கின்றார்.

(இ-ள்) தெளியத் தெளிய அடியார்களின் மனத்தின் கண் இனித்து உருகும்படி தெவிட்டாத அருள் மழை பொழியும் குணமேகமே! அறிவு வடிவாகிய ஆனந்த ஆரூடே! பொருளையும் பூமியையும் பூவைமாராகிய மாதரையும் உண்மைப் பொருள்கள் என்று நினைக்கின்ற ஒரு பாவி அஞ்ஞான இருளை நீக்கி ஒளி நிறைந்த சன்மார்க்கத்தினை அடியேனது மனத்தின்கண் பதியச் செய்வது எந்நாளோ அறியேன் என்க.

நிலையாமையும் துன்பமும் நிறைந்த பொருள்கள் பொருள், பூமி, பூவையர். இவற்றினிடம் பற்றுள்ளளவும் அஞ்ஞானம் நீங்காதாகலின் "பொருளை............என்று கொலோ?" என்றனர்.

(3) (இ-ள்) எனது இருதயத்தில் இரண்டறக் கலந்து மறைந்திருந்து என் வஞ்சனையான காரிய மனத்தையும் இறைவன் அறிந்தால் நான் ஒன்றை மறைத்துச் சொல்லுவதற்கு வாயும் உளதோ என்பதாம்.



ஆனந்தபோதினி
பிரஜோற்பத்தி
௵ சித்திரைமீ 1௳

### கராச்சி காங்கிரஸ்.

பர்டோலி வீரர்—ஏழை பங்காளர்—காந்தியடிகளின் உயிர்த்தோழர்—குஜராத்தியர் குலமணிவிளக்கு—உயர் குடிச்செல்வர் சர்தார் வல்லபாய் படேலின் அரும்பெறல் தலைமையின் கீழ், 29-3-31-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காரச்சியில் காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாயிற்று. நாற்பத்து நான்கு ஆண்டுகளாகக் காங்கிரஸ் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் காங்கிரஸ் மகாசபை கூடும்பொழுது ஏதாவது ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூடுவதாகச் சொல்லிக் கொள்ளுவது சம்பிரதாயமாக இருந்து வந்தது. ஆனால் 45-வது காரச்சி காங்கிரஸ் உண்மையில் மிகுந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூடியது என்றே கூறவேண்டும். சரித்திரத்தில் காரச்சி காங்கிரஸுக்கு முதல் இடம் கொடுக்கப்படும் என்பதில் ஐயம் இல்லை. லாகூர் காங்கிரஸுக்குப் பின் இந்திய அரசியல் வாழ்வு உலக அற்புதங்களில் ஒன்றாக மாறிவிட்டது. இப் பெருமைக்கு உரிமை பூண்ட புருஷோத்தமர் மகாத்மா காந்தியடிகள். மகாத்மா காந்தியடிகள் நாட்டு விடுதலையின் பொருட்டு ஓராண்டாக நிகழ்த்தி வந்த சத்தியாக்கிரக அறப்போர் சரித்திரங் கண்டறியாத அற்புத சம்பவம். ஜட நாகரிகத்தில் தோய்ந்து மிருக பலத்தில் நம்பிக்கை வைத்திருந்த மேனாடுகளெல்லாம் காந்தியடிகள் கண்ட சத்தியாக்கிரகத்தை-அஹிம்ஸா தருமச் செந்நெறியை இமை கொட்டாமல் நோக்கி நோக்கி வியந்தன. இறுதியில் ஆத்ம சக்தி-அஹிம்ஸா தருமம் வெற்றி பெற்றது—சர்வ வல்லமை வாய்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் சமாதானத்திற்கு வந்தது. காந்தி-இர்வின் உடன்படிக்கை பிறந்தது. காந்தி-இர்வின் உடன்படிக்கை முழு விடுதலையை அளிக்குமா,

அளிக்காதா? என்பது வேறு விஷயம். இந்த உடன்படிக்கையை பிரிட்டிஷ் வல்லரசின் உள்ளத்தில் ஒரு மாறுதல் உண்டாயிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகவே நாம் கருதுகின்றோம். இந்த அளவுக்குத் தான் மகாத்மா காந்தியடிகளும் திருப்தி அடைகிறார். இந்த உடன்படிக்கையால் விடுதலைக் கதவு திறக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவது இழுக்காகாது.

பகத்சிங்கு முதலியோர்பால் இரக்கங் காட்ட வேண்டும்; தூக்குத் தண்டனையை மாற்றவேண்டும் என்று நாடு முழுவதும் ஒரு முகமாக வேண்டிக் கொண்டது. அரசாங்கத்தார் அவ் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு அவர்களைத் தூக்கிலிட்டனர். இதனால் நாடெங்கும் கொதிப்பு ஏற்பட்டது. அதிதீவிரவாதிகளும் வாலிபர்களும் காந்தி-இர்வின் உடன்பாட்டில் தங்கள் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தினர். காந்தியடிகளையும் காந்தீயத்தையும் வீழ்த்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்பொழுதும் உலகம் உய்விக்க வந்த நம் பெருங் கருணை வள்ளல்—மகாத்மா காந்தியடிகள் தமது உறுதியினின்றும் அணுவளவும் பிறழவில்லை. உடன்படிக்கையைக் காப்பாற்றவே முனைந்து நின்றார். காரச்சி காங்கிரஸில் பிளவு ஏற்படுமோ என்று பலர் அஞ்சினர். ஆனால் காந்தியடிகளின் ஆன்ம சக்தி எல்லா எதிர்ப்புக்களையும் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடுமாறு செய்துவிட்டது. விஷயாலோசனைக் கமிட்டியில் காந்தி இர்வின் உடன்படிக்கை மிக எளிதாக நிறைவேறி விட்டது. ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸ் போன்ற அதி தீவிரவாதிகளும் இந் நிலையில் மகாத்மா காந்தியடிகளின் தலைமையையே பெரிதும் விரும்பி நிற்கின்றனர். மகாத்மா காந்தியடிகள் வாழ்க! காங்கிரஸ் வாழ்க!

காரச்சி காங்கிரஸ் தலைவர் சர்தார்வல்லபாய் படேல் அவர்களும் வரவேற்புக் கழகத் தலைவர் டாக்டர். சோயித்ராம் கித்வானி அவர்களும் காந்தி—இர்வின் உடன்படிக்கையை வரவேற்றனர். காந்தியடிகளின் தலைமையில் முழுநம்பிக்கையை வெளியிட்டனர். சர்தார் வல்லபாய் படேல் அஞ்சா நெஞ்சு படைத்தவர். உண்மைச் சத்தியாக்கிரகி. அஹிம்சா தரும துரந்தரர். இவர் பர்டோலியில் ஆற்றியுள்ள தொண்டு வருணனைக்கு எட்டாதது. அஹிம்ஸா தருமச் செந்நெறி வாயிலாக எத்தகைய போராட்டத்தையும் ஒழுங்காய் வெற்றியுடன் நடத்தலாம் என்ற உண்மையை பர்டோலியில் இவர் நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறார். நம் சர்தார் எழுத்து வாசனை அறியாத பர்டோலி விவசாயிகளை வீரர்களாக மாற்றி இந்திய அரசியல் வாழ்வுக்கு ஒரு புதிய ஒளி தந்துள்ளார். சர்தார் படேல் எளிய விவசாயிகளிடையே தொண்டாற்றி அவர்களிலிருந்தே வீரர்களையும் சூரர்களையும் உற்பத்தி செய்திருக்கிறார். சத்தியாக்கிரகத்தின்போது பர்டோலி

கொடுத்ததைக் கேட்டால் அடுத்ததாம் பகை.



விவசாயிகள் காட்டிய தியாகம் ஒப்புயர்வற்றது. அவர்கள் வீடு துறந்தனர். விளை நிலந் துறந்தனர். பெண்டு பிள்ளைகளோடு ஊரைவிட்டு வெளியேறினர். சுருங்கக்கூறின் உடல், பொருள், ஆவி மூன்றையும்



கராச்சி காங்கிரஸ் தலைவர். சர்தார்-வல்லபாய் படேல்.

அன்னை பணிக்கே அர்ப்பணம் செய்தனர் என்றுதான் கூறவேண்டும். இவர்களை இத்தகைய தியாக மூர்த்திகளாகச் செய்த பெருமை சர்தார் வல்லபாய் படேலுக்கே உரியது. பர்டோலி மக்களின் தியா

கத்தைக் கண்ட உலகம் இனிமேல் பாரத அன்னையின் விமோசனம் வெகு தூரத்தில் இல்லை என்றே மதித்தது. இத்தகைய மக்களின் அரிய சக்தியைப் பின்பலமாகக் கொண்டு சர்தார் படேல் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தியுள்ளார். தம்மை ஒரு சாதாரணக் குடியானவன் என்று சொல்லிக் கொண்டார். இதற்கேற்ப விவசாயிகளின்—ஏழை மக்களின் நலத்தைக் கருத்தில் இருத்தியே அவர் முன்னுரை நிகழ்த்தியுள்ளார். எதிர்கால அரசியல் அமைப்பு விவகாரங்களில் அவர் தமது கருத்தை ஊன்றிச் செலுத்தவில்லை. "சடையைப் பிடித்தால் சந்நியாசி தானே வருவான்" என்று தமிழகத்தில் ஒரு பழமொழி வழங்குவதுண்டு. அதுபோல் விவசாயிகளின்—ஏழை மக்களின் நலம் கைகூடுமாறு செய்துவிட்டால் எல்லா விவகாரங்களும் அடிபட்டுப் போகும் என்பது அவரது முடிவான எண்ணம். எனினும் அவர் தமது தலைமைப் பேருரையில் எல்லா அம்சங்களையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். தற்காலம் மக்கள் மனங்களைக் கவர்ந்து நிற்கும் எல்லா அரசியல் விஷயங்களும் அவரது சொற்பொழிவில் உண்மை உருக்கொண்டு விளங்குகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. சுயேச்சையின் சாரம் முழுதும் அவரது முன்னுரையில் ததும்பி நிற்கிறது. சென்ற ஆண்டில் நாட்டுமக்கள் ஆற்றிய அரும் பெறல் தொண்டுக்கு வல்லபாய் படேல் நன்றி பாராட்டியிருக்கிறார். இத்துடன் எல்லாம் பூர்த்தி அடைந்து விட்டதாக அவர் நினைக்கவில்லை. மக்களின் அறிவும் ஆற்றலும் ஒன்று சேர்ந்து நாட்டு விடுதலையின் பொருட்டுப் போராட எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் வேண்டுகிறார். சர்தார் வல்லபாய் படேல் மகாத்மா காந்தியடிகளின் நோக்கத்தையும் எண்ணங்களையுமே தெரிவித்தார்; புதிதாக ஒன்றும் கூறவில்லை என்று சிலர் கருதலாம். அவர்கட்கு யாம் ஒன்று கூற விரும்புகின்றோம். இந்நிலையில் சுயராஜ்யம் பெற காந்தியடிகள் உபதேசித்த வழியைவிட, வேறு புதிய நல்வழி உண்டா? என்று கேட்கின்றோம். மகாத்மா காந்தியடிகளின் தலைமையைவிட வேறு சிறந்த தலைமை மக்கட்குக் கிடைத்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கமுடியுமா? என்றும் கேட்கின்றோம். மகாத்மாவின் கொள்கைகளையும் யோசனைகளையும் எளிதில் மறுத்துவிடக் கூடியவர்கள் புதிய நற்கொள்கைகளை வெளியிடவேண்டும்-நிலைநாட்ட வேண்டும். இது சாமானிய விஷயம் அல்ல. ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களே இவ்வுண்மையை ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு மற்றவர்களைப்பற்றிக் கூற வேண்டியது அநாவசியம் என்றே எண்ணுகிறோம். இப்பொழுது தலைவர்கள் எல்லாரும் ஒருமுகமாக காந்தியடிகளின் வழி நிற்கவேண்டும். இதுவே இவர்கள் இச் சந்தர்ப்பத்தில் நாட்டுக்குச் செய்யும் தலைசிறந்த தொண்டாகும். மக்கள் மனங்களைக்

மட்டமான போஜனம் மனதுக்கு மகிழ்ச்சி.



கொள்ளைகொண்டு விளங்கும் தலைவர் மகாத்மா காந்தியடிகளே என்பதை எவரே மறுக்கத் துணிவர்?

இத்தகைய காரணங்களாலேயே சர்தார் வல்லபாய் படேல் காந்தியடிகளின் கொள்கைகளையும் முறைகளையும் அப்படியே சுவாதீனம் செய்து கொண்டார். படேலின் மொழிகளில் உறுதி வீறு கொண்டு விளங்குகிறது. ஒருகால் மறுமுறையும் அறப்போர் நிகழ்த்த நேரின் மகாத்மா காந்தியடிகளின் ஆசீர்வாதமும் சர்தார் வல்லபாய் படேலின் படைத் தலைமையும் நாட்டை நல்வழிப்படுத்தி வெற்றியுறச் செய்யும் என்று முழு மனதுடன் நம்புகின்றோம்.

வரவேற்புக் கழகத் தலைவர் டாக்டர். சோயித்ராம் கித்வானி நிகழ்த்தியுள்ள வரவேற்புச் சொற்பொழிவு தன்னம்பிக்கையையே பெரிதும் வற்புறுத்துகின்றது. இந்து முஸ்லிம் ஒற்றுமையை இந்தியா மந்திரி ஆபீஸோ, பார்லிமெண்டோ நமக்குக் கொடுக்கமாட்டா என்று அவர் எச்சரிக்கை செய்கிறார். தேச மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இரண்டொருவர் சேர்ந்து ஒரு முடிவு செய்தால் எல்லாம் சீர்ப்பட்டுவிடும் என்று நம்புகிறார். ஸ்ரீஜத் கித்வானிக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள காந்தி-இர்வின் உடன்படிக்கையில் நம்பிக்கையில்லை. "நமது வீட்டில் நாம் எஜமானர்களாக இருக்கக்கூடிய" ஒரு சமாதானத்தையே அவர் விரும்புகிறார். எது எப்படியிருந்தபோதிலும் காந்தியடிகளின் ஆணைவழி நிற்கவேண்டும் என்பதே அவரது அவா.

கராச்சி காங்கிரஸ் பல முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. அவற்றுள் காந்தி–இர்வின் உடன்படிக்கையைப்பற்றிய தீர்மானமும், மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைப்பற்றிய தீர்மானமும் தலைசிறந்தவை. சத்தியாக்கிரகப் போர் ஓராண்டு நடைபெற்றது. இதனால் நாட்டுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கட்கு எல்லை இல்லை, பிரிட்டிஷ் அரசாங்கம் சமரஸம் பேச முன்வந்தது. அதன் பயனாகவே காந்தி-இர்வின் உடன்படிக்கை பிறந்தது. இந்த உடன்படிக்கையால் ஒரு பயனும் விளையாது என்று பலர் கருதினர். மகாத்மா காந்தியடிகளின் வழியைப் பின்பற்றுவோரே இவ்வுடன்படிக்கை பயனற்றது என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். வாலிபர்கள் ஒரே பிடிவாதமாக இதை எதிர்க்கத் தொடங்கினர். எனினும் மகாத்மா காந்தியடிகளே இறுதியிலும் வெற்றிபெற்றார். காந்தியடிகள் என்றும் சமாதானப் பிரியர் என்பது உலகமறிந்த உண்மை. அவர் சத்தியாக்கிரக அறப்போர் தொடங்கிய நாள் முதல் கௌரவமான சமாதானத்துக்கு வழியுண்டா என்பதைச் சிந்தித்து வந்திருக்கிறார். இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்படிக்கையால் சட்ட மறுப்புமட்டுமே நிறுத்தப்பட்டிருக்கிறது. நிர்மாணத் திட்டங்களை எப்பொழுதும்போல் நடத்திக்கொண்டே போகலாம். அந்நி

கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல.

யத்துணி விலக்கு—மதுவிலக்கு முயற்சிகளை இடையறாது செய்து வரலாம். சட்டமறுப்பு இயக்கத்தைக் கொஞ்சநாள் நிறுத்திவைப்பதால் எத்தகைய நஷ்டமும் இல்லை என்பதே நமது கருத்து. இதனால் காங்கிரஸ் மகாசபை பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. அதை அவர்கள் தகுந்த வழியில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பிரிட்டிஷார் ஒன்றுக்கும் இணங்கிவரவில்லையென்றால் காங்கிரஸுக்குப் பெருமையும் அவர்கட்குப் பழியும் சேரும் என்பதில் ஐயம் இல்லை. பின்னர் நமது விருப்பம்போல் செய்துகொள்ளலாம். இந்திய மக்களின் நோக்கம் வெறும் போராட்டம் அல்ல. சத்தியாக்கிரக இயக்கத்தின் கருத்தும் எப்பொழுதும் போர் நிகழ்த்திக்கொண்டே இருக்கவேண்டும் என்பதல்ல. மக்களின் வாழ்க்கை நலத்தைப் பெருக்குவதே அதன் நோக்கமாகும். சமாதான முறையில் அந்நோக்கம் நிறைவேறும் போலிருந்தால் அதை என் கைவிட வேண்டும் என்று கேட்கின்றோம். கராச்சி காங்கிரஸ் காந்தி—இர்வின் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டு நாட்டிற்குச் சிறிதேனும் ஓய்வுகொடுத்திருக்கின்றமையைக் கண்டு யாம் பெரிதும் மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம்.

காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைப்பற்றிய தீர்மானம் மிகவும் குறிப்பிடத் தக்கது. இந்தியா வேண்டுவது என்ன என்பது இதுகாறும் விளக்கமற்றிருந்தது. இப்பொழுது கராச்சி காங்கிரஸ் அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. இனிமேல் சுயராஜ்யம் என்றால் என்ன? என்பதைக் குறித்து யாரும் மயங்க வேண்டியது இல்லை. காங்கிரஸ் படித்த வகுப்பாருக்கும் பணக்காரர்கட்கும் உரிய சபை—ஏழை மக்கட்கு அங்கு இடம் இல்லை என்ற எண்ணம் வெகு நாட்களாக நாட்டில் வேரூன்றியிருந்தது. கராச்சி காங்கிரஸ் அவ்வெண்ணத்தை அடியோடு மாற்றிவிட்டது. எல்லாருக்கும் எளிதில் தெரியும்படியான மொழிகளில் காங்கிரஸ் தனது கருத்தைத் தீர்மான ரூபமாக வெளியிட்டிருக்கிறது. எல்லாரும் கல்வி கற்க வேண்டும், எல்லாரும் வறுமைப் பிணியினின்றும் விடுபடவேண்டும் என்பதே காங்கிரஸின் லக்ஷியம். கராச்சி காங்கிரஸ் தீர்மானித்துள்ள ஜீவாதாரமான உரிமைகளில் சாதி-சமய வேற்றுமைகளை ஒழித்தலும், பெண்கள் விடுதலையும், தொழிலாளர்களின் நலமும், விவசாயிகளின் கஷ்ட நிவாரணமும் பொன்னேபோல் போற்றத்தக்கவை. இனிமேல் எல்லாரும் காங்கிரஸ் குடைக்கீழ் வந்து சேர்ந்துவிடலாம். தனித்தனி பிரிந்து நின்று கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் எந்தக் கூட்டத்தாருக்கும் இல்லை என்பதே எமது மனப்பூர்வமான நம்பிக்கை. எல்லாம்வல்ல திருவருள் நம்கோரிக்கைகளை இனிது நிறைவேற்றி வைப்பதாக. வந்தேமாதரம். ஓம் தத் ஸத்.

---

போனதை நினைக்கிறவன் புத்திகெட்டவன்.




# நற்றமிழ் நந்தி.

8 MAY 1931

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. [illegible])

பழம்பதியாய பாண்டி நாட்டில் வாழையடி வாழைபோல் வளர்ந்தோங்கிய மன்னர் மரபில் வரகுணன் என்னும் பெயரமைந்த மாறன் தலைசிறந்து விளங்கினான். இம்மன்னன் நீர்வளம் நிறைந்த சோழ நாட்டைக் கவர்ந்து தண்டமிழ் வளர்ந்த தொண்டை நாட்டின் மீது படையெடுத்து, பல்லவ சேனையைப் புறங்கண்டு, பெண்ணை யாற்றின் கரையிலுள்ள அரசூரில் ஆர்ப்பரித்து நின்றான். பல்லவ சேனை பாண்டிய சேனையை வெல்ல இயலாது புறங்கொடுத்த புன்மையை நினைந்து மானத்தால் மனம் புழுங்கிய நந்தி மன்னன், வரகுணனை எவ்வாற்றானும் வென்று மீள்வதாக வஞ்சினங் கூறி, வெஞ்சின வீரரைத் துணைக்கொண்டு காஞ்சிமா நகருக்குத் தென்பாலமைந்த தெள்ளாற்றுப் பறந்தலையில் பாண்டியன் படை வலியைப் பாழாக்கி வாகை சூடிய வரலாறு புலவராற் புகழப் பெற்றதாகும். புயத்திண்மையும் மனத்திண்மையும் வாய்ந்து பண்டவர்க் கன்றிக் கேட்டார்க் குரைப்பரிய கடும்போர் விளைத்த நற்றமிழ் நந்தியின் கொற்றத்தைப் பெருந்தேவனாரென்னும் பழந்தமிழ்ப் புலவர் பாராட்டும் முறை அறிந்து போற்றத்தக்கதாகும்.

"வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரா ளுரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்."

என்று பெருந் தேவர் பாடிய அருங்கவியில் நந்தி மன்னன் பெருமை நன்கு விளங்கக் காணலாம். வரையாது பொருள் வழங்கும் வண்மையும் உலையாத ஊக்கமும் உயரிய கல்வியும் வாய்ந்த நந்தி மன்னன் தெள்ளாற்றில் தென்னவரை வென்று, உயரிய புகழ் மாலை சூடிய பெருமையைப் புகழ்ந் துரைத்த பெருந்தேவர் மொழிகள் என்ஞான்றும் எஞ்சாத இன்பம் விளைப்பனவாம்.

இவ்வாறு மும்முரசும் முழங்க, காஞ்சிமா நகரில் செங்கோலோச்சிய பல்லவ வேந்தன், சிவநேசச் செல்வனாய் விளங்கினான். தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் சிவனடி மறவாச் சிந்தையும் வாய்ந்த நந்தியை "சிவனை முழுதும் மறவாத சிந்தையன்" என்று செந்நாப் புலவர் சீராட்டி மகிழ்ந்தார். பிறவாயாக்கைப் பெரியோன் அருளால் பல்லவ நந்தி பல்லாண்டு நிலமிசை நீடுவாழுமாறு புலவர் பரவும் முறை பண்புவாய்ந்ததாகும்.

"ஒரு பெருங் கடவுள்நிற் பரவுதும் எங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவும் தென்பொதி யளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப
ஒரு பெருந்தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க அருளுகவெனவே."

என்று செம்பொருளாய சிவபெருமானைச் செஞ்சொற் கவிஞர் பணிந்து போற்றுவா ராயினர். மல்லை வேந்தனுகவும், மயிலை மன்னனுகவும், பல்லவர் குல மணியாகவும் திகழ்ந்த பைந்தமிழ் நந்தி, ஊழிதோ றூழியாக உலகங் காக்குமாறு நற்றமிழ்க் கவிஞர் அறவாழி அந்தணனை வழுத்துவா ராயினர். நற்றவம் செய்வார்க் கிடமாய வட இமயமும் தென் பொதியமும் எஞ்ஞான்றும் அதிராப் பெருமை வாய்ந்தன என்று ஆன்றோர்கூறும் அருண்மொழியைப் பொன்போற் போற்றி வடவரை யளவும் தென் பொதியளவும் வையகங் காக்குமாறு பல்லவ நந்தியை நல்லிசைப் புலவர் வாழ்த்திப் போந்தார்.

இவ்வாறு தென்னாட்டிற் பரந்த இசைபடைத்த பல்லவ நந்தியை வசை பாடிக் கொல்லக் கருதிய பகைஞர், நந்திக் கலம்பகம் என்னும் நயம்சான்ற நூலியற்றி அம்மன்னனை முடித்தாரென்று ஓர் வரலாறு வழங்குகின்றது. வில்லே ருழவர் பகையினும் சொல்லே ருழவர்பகை பெரிதென்று கிறுவக் கருதிய மாதவச் சிவஞான முனிவர் 'நந்தி, கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்று இக் கதையினை எடுத்துக் காட்டாக அருளிப்போந்தார். நந்தி மன்னன் நகர்வலம் வரும் பொழுது, செவிக்குத் தேனென இனிக்கும் செந்தமிழ்ச் சுவையமைந்த கலம்பகத்தைக் கேட்டு மதுவுண்டு தேக்கிய வண்டு போல் மயங்கி இருந்தா னென்றும், கலம்பகம் முடிந்தபொழுது காவலன் கனல் வாய்ப்பட்டு எரிந்தா னென்றும் கர்ண பரம்பரைக் கதை கூறுகின்றது.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம் மறிகடல் புகுந்தது உன்கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம் கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள் செந்தழலடைந்த துன்தேகம்
யானும் என்கலியும் எவ்விடம் புகுவேம் நந்தியே நந்தயாபரனே"

என்னும் கலம்பகக் கவியே நந்தியைக் கனலிடை யுய்த்ததென்று தமிழ்க் கவிஞர் கருதுகின்றார்கள். ஆயினும், வேங்கைபோன்ற வீரமும், மதிபோன்ற முகமும், கற்பகம்போன்ற கரங்களும், கடல்போற் பரந்த கீர்த்தியும் வாய்ந்த வீர வள்ளலாய நந்தி இறந்தமைக்கு ஆற்றாது இரங்கிப் பாடும் பான்மையி லமைந்த இம்மொழிகள் நன்றிமறவாத நல்லிசைப் புலவரது நாவினின் றெழுந்த நன்மொழிக ளென்று கருதல் மிகையாகாது. காலனென்னும் கண்ணிலி உய்ப்பக் காஞ்சிமா நகர்புரந்த காவலன் வானேருலகம் புகுந்த நிலை கண்டு வருந்திய புலவர், அம் மன்னனது திண்மையையும் வண்மையையும் திருந்திய மொழிகளாற் புகழ்ந்துரைத்தாரென்று கருதல் தவறுடைய தாகாது. செஞ்சொற் கவிஞரைச் சேர்ந்து வாழக் கருதும் பாசங்கலந்த பசிநோயை வேரறுத்து, வறுமையின் பகைவனாய் விளங்கிய வள்ளல், விதியின் விளைவால் இறந்து பட்டபோது, கனலிற்பட்ட மெழுகுபோற் கரைந் துருகிய கவிஞர் "ஐயனே! இனி யானும் என் கலியும் எவ்விடம் புகுவேம்" என்று ஏங்கிக் கூறும் மொழிகள் கற்போர் சிந்தையைக் கரைப்பனவாம்.



இத்தகைய நந்திக் கலம்பகத்தின் சொல்நயமும் பொருள்நயமும் தமிழ்ச்சுவை தேரும் செவிகளில் தேனினும் இனிப்பதாகும். கார்காலத்து, காதலனாய நந்தியைப்பிரிந்து கண்ணீர் உகுத்துநின்ற தலைமகள் காலக்கொடுமையை நினைந்து வருந்தும்முறை அறிந்து மகிழத்தக்கதாகும்.

மங்கையர்கண் புனல்பொழிய மழை பொழியுங்காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில் குனிக்குங்காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியுங்காலம்
கோகனக நகைமுல்லை முகை நகைக்குங்காலம்
செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன் பெய்மேகத்
தியாகியெனும் நந்தியருள் சேராதகாலம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக்காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங்காலம்

என்றெழுந்த செழுங்கவியின் சுவை, சொல்லாமலே விளங்கும். கைம்மாறு கருதாது மழைபொழிந்து உலகை வாழ்விக்கும் கார்மேகம்போல், செம்பொன் மாரி சொரிந்து செந்நாப் புலவரை வாழ்வித்த நந்தியன்னன் பெருமை இக்கவியில் நலமுற இலங்கக்காணலாம். இடையறாது செம்பொன் சொரிந்து செம்மையுற்ற நந்தியின் கைகளை "செங்கை" யென்று கவிஞர் சிறப்பித்த முறை சாலப்பொருத்த முடையதாகும். அற்றார் அழிபசி தீர்த்தலே தலையாய அறமெனக் கொண்டு, தன் வற்றாத செல்வத்தை வறியார்க்கு வழங்கி இன்புற்றுத் தனக்கென வாழாப்பிறர்க் குரியாளனாய் விளங்கிய நந்தியைத் "தியாகி" என்று கவிஞர் குறிக்குந்திறம் அறிந்து போற்றத்தக்கதாகும்.

இன்னும் கொம்பார்சோலைக் கோலவண்டுகள் பண்ணார்ந்த பாட்டிசைப்ப, நீலமணிக்குயில்கள் தேமார்தளிருண்டு திளைப்ப, இனியதென்றல் அமுதளிக்கும் இளவேனிற் பருவத்தில் தலைமகனாய நந்தியைப்பிரிந்து தங்கிய தலைமகள் காலக்கொடுமையைக் கண்டு கலங்கும் மொழிகள் கனிந்தநயம் வாய்ந்தனவாம்.

"மரச்சூழல் அமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்
வரிக்குயில்கள் மாவில் இளந்தளிர் கோதுங்காலம்
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்
தீவினையேற்கு அத்தென்றல் தீவீசுங்காலம்
பலர்க்கெல்லாம் கோன் நந்திபன் மாடக்கச்சி
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் காலம்
அலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர் தூற்றுங் காலம்
அகன்றுபோனவர் நம்மை அயர்த்துவிட்ட காலம்."

என்று கலம்பகக் கவிஞர் அமைத்த இயற்கைக் காட்சியின் நயம் எண்ணுந்தொறும் பேரின்பம் பயப்பதாகும். இவ்வாறு புயத்திண்மையிலும் மனத்திண்மையிலும் ஒப்புயர்வற்று விளங்கிய பல்லவநந்தி வாழ்ந்த நற்றமிழ்நாடு,

"வண்மையிலே உளத்திண்மையிலே— மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத டலவர்
உணர்வினிலே உயர்நாடு—இந்தப்
பாருக்குள்ளே நல்லநாடு—எங்கள்
பாரதநாடு."

என்று பாரதியார் புகழ்ந்துரைத்த நயமனைத்தும் பொருந்தித் திகழ்வதாகும்.




## பக்தி விளக்கம்

**(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)**

லிங்கபக்தி சிவலிங்காதி சொரூபங்களில் பரமசிவமூர்த்தியை ஆராதித்து வழிபடுவது. அங்ஙனம் வழிபடுங்கால் குருவருளிய உபதேசநெறி தவறாது வழிபடல் வேண்டும். சங்கபக்தியாவது பரமசிவனை வழிபடும் அடியார்களை அந்தப் பரமசிவனாகவே பாவித்து வழிபடுதலாம். பரமசிவ குணாதிசயங்களை வேதபுராணாதி நூல்களாலேயே அறியவேண்டுமாதலால் அதற்குத் தக்கவாறு கல்விப்பயிற்சியும் வேண்டப்படும். அது சமயத்துக் குதவிசெய்து நூல்களிற் காணப்படும் பல சிக்குகளை யறுத்து உண்மையை விளக்கு மாதலா லென்க.

கல்வி யுணர்ச்சி யில்லாத சில அடியார்களும் பக்திபுரிந்து பரசிவானுக்கிரகம் பெற்று மோக்ஷ சாம்ராஜ்யம் கைவரப்பெற்றுப் பெருவாழ் வடைந்தாரென நூல்களினால் கேட்கப்படுதலால் கல்வியுணர்ச்சி மிகையே யாமெனின் அன்று

கீழ்ச் சென்ற பல பிறவிகடோறும் புரிந்த பல புண்யப்பயன் கூடியதாற் பெற்ற பெரும்பேறது வாதலாலும் அவ்வண்ணம் யாவருக்குங் கிட்டுவ தருமை யாதலாலும் சிவபக்தி இடையூறின்றி நிகழ்தற் பொருட்டுச் சிவமகிமாப் பிரபாவமும் அவனை வழிபட்டுச் சீர்பெற்ற மெய்யடியார் தன்மையும் அவ்வாறு வழிபடு முறைமையும் நிலைபெறற்குப் புராணாதி நூல்களைப் பாராயணம் செய்வது அவசியமே யாதலாலும் சிவவழிபாட்டிற் காணப்படும் வழுக்களைக் களைந்து விதிவழுவாதியற்றுதற்கு நூலே கருவியாக நிற்றலாலும் கல்வியுணர்ச்சி ஒருதலையாக வேண்டப் படுமென்றே துணிக. அன்றியும் வழிபடற்குரிய தெய்வத்தின் உண்மை இலக்கணமும் வழிபடற் குரியகாரணமும் வழிபடு முறைமையும் வழிபட்டா லெய்தும் பயனும் வழிபடாமையா லுண்டாகுந் தீமையும் உள்ளத்திற் பசுமரத்தாணியெனப் பதிந்தாலன்றிப் பக்தியிற் சித்தம் நிலைபெறாமையானும் அவை யுணர்ந்து கொள்ளுமாறு கல்வியாராய்ச்சி தடையற வேண்டப்படு மென்க. பூர்வஜனனத்தில் விட்டகுறை முடிக்க வந்த முக்தான்மாக்கள் செய்கை ஏனையர்க்குப் பயன்படா தென்க.

---

கெடுவான் கேடு நினைப்பான்.



உண்மை யுணர்ந்து பின்னொன்று செய்யப் புகுவதற்கும் உணராது செய்வதற்கும் பேதமிகுதியு முண்டென்க. உண்மை தெரியா தியற்றப்படும் செய்கையால் சித்தநிலை தடுமாறு மென்க.

இனித் தெய்வ இலக்கணம் யாது, ஜீவ இலக்கணம் யாது, அவித்தையி னிலக்கணம் யாது?—கவனிப்பாம். சுதந்தர முடையது தெய்வம். அதுவே பிரமம் பரம் சிவம் என வேதங்களாற் புகழப்படுவது. அது சகுண பிரமமெனவும் நிர்க்குணபிரம மெனவும் இருவகையாகக்கொண்டு உபாசிக்கப்படுவது. உமாசகாயத்வம் காளகண்ட திருநேத்ராதி அவயவலட்சண சம்யுக்தமாய் பக்தானுக்ரக மாத்திரமாய் அருள் வடிவங்கொண்டு விளங்குவது. நிரவயவ நிரதிசயாநந்த சின்மாத்திரமாய் நிற்பது. மாயாமயச் சரீரச் சிறைப்பட்ட பத்தான்மாக்கள் சகுணோபாசனை செய்வதே யுசிதம். பந்தங்கடந்த முக்தான்மாக்களா யுள்ள மகான்கள் தம்மில் வேறறக்கண்டு தரிசிக்கத் தகுவது நிர்க்குண சொரூபம். அதுவே மோட்சம்.

மனோவாக்காதிகளுக் கெட்டாத நிலைமையிலுள்ளதே பரப்பிரமம் ஆதலால் அதனை யறிந்து உபாசித்தல் மானிடராதியோர்க் கருமை யாதல்பற்றி அதனுக்குச் சரீரமாக உபசரிக்கப்பட்ட பொருள்களை வழிபட விதிக்கப்பட்டது. அதனால் வேதத்திற்கண்ட தெய்வ வழிபாடுகளெல்லாம் ஏகநாயகன் உபாசனையே யாமென்க. அதனைப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் சூரியன், சந்திரன், ஆன்மாவாகிய எண்பொருள்களும் பரம்பொருளுக்குச் சரீரங்களாகக் கூறப்பட்டவதனால் அறிக. இதுவே பரனுக்கு அஷ்ட தநுக்களெனப்படும். இவற்றுள் ஆன்மா வென்றது ஜீவான்மாவே யாம். அதுபற்றியே குருபக்தி சங்கமபக்திகளும் விதிக்கப்பட்டன வென்று தெளிக. பிரமாதி தேவர்களும் ஈசனது அஷ்ட தநுக்களிலே சேர்ந்தவர்களாதலால் அவர்களை உபாசிப்பதும் பரமசிவனையே யாம்.

வேதவழி நின்று வழிபடுவோர், புராண வழிநின்று வழிபடுவோர். ஆகம நெறியா லாராதிப்போர் எனத் தெய்வவழிபாடு செய்பவர் முத்திறத்தினராவர். அவரவர் தம்தம் நெறிபற்றி யாராதித்தலே சீரியதாம்.

வேதத்தில் குறித்தோதப்படும் தெய்வ சொரூபங்களில் தனக்குப் பிரியமான ஒரு சொரூபத்தை ஆராதிக்கவேண்டுமே யொழிய ஒன்றையுங் கருதாது நாஸ்திகன்போ லிருத்தல் கூடாது.

வேதத்திலே பெறப்படும் யாவும் ஸத்தியமேயாம். அதிலே சகல தேவதா மந்திரங்களும் ஆராதனைகளும் குறிக்கப்பட்டன. அம்முறை பற்றித் தேவாராதனை செயற்பால தென்றதனால் எவ்வெவர் எந்தத் தேவதையை அதிகமாக நேசிக்கின்றார்களோ அதனையே ஆராதிக்க வேண்டுமென்று கொள்க. இதர தேவதா நிந்தனை செய்வது கூடாது.

---

துணை போனாலும் பிணை போகாதே.

# 3-வது வகுப்புப் பிரயாணம்

இந்தியாவிலுள்ள ரயில் கம்பெனியாருக்கு நமது இந்தியர்களில் பெரும்பாலும் ஏழையர்களின் பணத்தாலும் உழைப்பாலுந் தான் பெருத்த இலாபம் உண்டாகிறது. ரயில்வே வர்த்தகம் செய்யும் கம்பெனியார் இந்தியாவிலுள்ள ஏழைகளாலேயே பெரும் பொருள் சம்பாதித்துக் கப்பல் கப்பலாகப் பணங்களைக் கொண்டுபோனாலும் இந்திய ஏழைகளுக்குத் தக்க சவுகரியஞ் செய்வதைக் கவனிக்கிறதே இல்லை. இந்திய ஏழைகள் தான் ரயில் பிரயாணத்தில் பெரிதும் வருந்துகின்றார்கள். இந்த ரயில் வர்த்தகத்தால் தம் நாட்டு மக்கள் கைத்தொழிற்கே பெரிதும் சாதகங்கள் செய்து வருகின்றனர். தம் நாட்டவர் பெரிதும் பிரயாணம் செய்யும் 2-வது வகுப்பு வண்டிக்கும் 1-வது வகுப்பு வண்டிக்குமே தக்க வசதிகளை மிக்க கவனமாகச் செய்திருக்கின்றனர்.

இந்திய ஏழைகள் பிரயாணம் செய்யும் 3-வது வகுப்பு வண்டிக்கு எந்த விதமான சாதகமுஞ் செய்திருப்பதாகக் காணவில்லை. கம்பெனியார், தங்களுக்கு வேர்வை சொட்ட உழைக்கும் தொழிலாளரை மனம் புண்ணாக்கி வருகின்றனர். நம் கருணை அரசாங்கத்தினரும் கவனிக்கிற பாடாகக் காணோம். இன்னுஞ் சொல்லப்போனால் ஐரோப்பிய வியாபாரிகளுக்கே நம் அரசாட்சியார்கள் உதவி செய்கிறார்களோவென்று சந்தேகப்படவும் வேண்டியதாக இருக்கிறது.

இது நம் இந்திய ஏழைமக்கள் செய்துள்ள பாவத்தின் பயன் போலும்!

ஐரோப்பியர்களுக்கே ரயில் வேலையில் உயர்ந்த உத்தியோகம் கிடைக்கிறது. அதற்கடுத்த படியில் ஆங்கிலோ இந்தியர்களுக்குப் பெருஞ் சம்பள உத்தியோகங்கள் கிடைக்கின்றன. தொழிலாளர்க்கும், மற்றவர்கட்கும் சௌகரியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. வண்டி வருவதற்குமுன் ஒரு மணி நேரத்திற்கு முந்தியே டிக்கட்டு கொடுக்கப்படும் என மட்டும் விளம்பரப் படுத்தி இருக்கிறார்கள். சில விடங்களில் அவ்வாறு நடத்துவதே இல்லை. வண்டி வருதற்கு முன் 5 அல்லது 10 நிமிஷங்களுக்கு முன்தான் டிக்கட்டு கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். ரூபாய் கொடுத்தால் மீதம் சில்லரை வருவது கஷ்டமாயிருக்கிறது. டிக்கட்டு 14 அணாவானால் மீதம் இரண்டணா வருவது துர்லபமாக இருக்கிறது. சில்லரை இல்லை டிக்கட்டு தரமாட்டோம் என்று கண்டிப்பாய்க் கூறி விடுகிறார்கள். அல்லது சில்லரை வரட்டும் எனக் காக்கப் போடுகின்றனர். இது பெரும் அநியாயம்! இதைக் கவனிப்பாரே இல்லை! அந்தோ! அநியாயம்! அநியாயம்!!

நம் கருணை அரசாங்கத்தாரும் இதைக் கவனிப்பதாகத் தெரியவில்லையே. இதனை முறையிட்டால் ரயில் அதிகாரிகளும் கவனிப்பதில்லை.

தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.



அரசாங்கமும் கவனிட்பதில்லை என்றால் இந்திய ஏழையர் யாரிடம் சொல்லி முறையிடுவர்! இனியேனும் கம்பெனியாரும் அரசாங்கத்தாருங் கவனிப்பார்களாக! இவ்விதம் டிக்கட் வாங்குவதில் எவ்வளவு இக்கட்டு, அக்கட்டுகள் இருக்கின்றன! எத்தனை இடி! எத்தனை சண்டை! எத்தனை சல்லியம்!




இதோ இந்தப் படத்தைப் பாருங்கள் புக்கிங் ஆபீஸ் என்னும் டிக்கட்டு கொடுக்கும் இடத்தில் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் டிக்கட்டு வாங்கப் படும் பாட்டைப் பாருங்கள்! எத்தனை சண்டை! எத்தனை கூச்சல்! எத்தனை இடிபுடை! தலைப்பாகை ஒரு பக்கம்! மூட்டை ஒரு பக்கம்! முடிச்சொரு பக்கமாகக் கஷ்டப்படுகின்றனர். இதை நம் அரசாங்கத்தாராகிலும் கவனிக்கக் கூடாதா? நம் கருணை அரசாங்கத்தார்க்கு, என்று நம் ஏழை இந்தியர்கள் மேல் இது விஷயமாகக் கருணை பிறக்குமோ என விகடன் வருத்தத்துடன் ஏங்கிக் கதறுகின்றான்! கண்ணீர் விடுகின்றான்!

இவ்வளவு கஷ்டத்துடன் டிக்கட்டு வாங்கிவிட்டாலும் பிளாட்பாரத்துக்குள்ளாகிலும் தாராளமாகப்போக வழியுண்டா? அதற்கும் வழி இல்லை. வண்டி வந்து நின்ற உடனே தான் பிரயாணிகளை பிளாட்பாரத்தில் விடுகின்றனர். அங்கும் இடிபுடையோடு தான் உள்ளே நுழைய வேண்டும். இந்தத் தடபுடலில் எத்தனை பேர் காயப்படுவோர்! எத்தனை பேர் காதறுபடுவோர்! எத்தனை பேர் மூட்டை முடிச்சை இழப்போர்! எத்தனைபேர் பிள்ளை குட்டிகளை இழப்போர்! எத்தனைபேர் கொண்ட மனையாளைத் திண்டாட விடுவோர்! ஏழை இந்தியர் பணத்தில் லாபம் சம்பாதிக்கும் கம்பெனியார் இதைக் கவனிக்கக் கூடாதா? அரசாங்கம் கவனிக்கக்கூடாதா? பாவம்!! இந்த விதமாகப் பகீரதப் பிரயத்தனத்தால் டிக்கட்டு இக்கட்டோடு வாங்கி பிளாட்பாரத்திற்குள் நுழைந்து விட்டாலும் வண்டி ஏறுவது அதிலும் கஷ்டமாக இருக்கிறது. வண்டிக்குள் புகுந்து விட்டால் தாயார் வயிற்றிலிருந்து மறுஜென்மம் எடுத்தது போலவே இருக்கிறது!

தான் திருடி அசல் வீடு நம்பமாட்டான்.

வண்டிக்குள் நுழைந்தால் இருக்க இடம் கிடைப்பது அதிலும் பெருங் கஷ்டம்! ஆடுமாடுகளை ஒரு சிறு கொட்டடியில் அடைப்பதுபோல் அடைக்கப்படுகிறார்கள்! அந்தோ! அந்தோ? இது பெருங் கொடுமை! பெருங் கொடுமை !!




இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்! வண்டிக்குள் புகுந்தவர்கள் இருக்க இடமின்றித் தவிக்கிறார்கள். இந்தக் கஷ்டம் என்று தொலையுமோ? கம்பெனியார்கள் பிரயாணிகளுக்கு ஏன் வசதிகள் செய்யக்கூடாது? இதைக் கேட்பாரில்லையா? இந்த ஏழைகளுக்கு இரங்குவாரில்லையா? என்று பரிதாபப்பட்டு விகடன் கவர்னரைப் பேட்டி காணப் புறப்பட்டிருக்கிறான். இனி விகடன் விடான்! கவர்னரும் கவனிக்காவிட்டால், வைசிராயிடம் செல்வன்? அவரும் அசட்டை செய்தால், நேரே நம் சக்கிரவர்த்தியிடமே செல்லத் துணிந்திருக்கிறான். ரயில் கம்பெனியார்களே! இனியேனும் ஏழைகளுக்கு இரங்குங்கள். உங்களுக்கு கடவுள் இரங்குவர். வேண்டாம்! வேண்டாம்! பாவம் பணம் வந்தாற்போது மென்றிராதீர்கள்! சொன்னேன்! சொன்னேன்!!

நீதி விகடன்.

அறிவுரை.

தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காணவேண்டும். உன்னிடத்தில் ஆயிரம் ஊழல்களை அடக்கிக்கொண்டு பிறனொருவனைப்பற்றி நீ குறைகூறி விட்டமாத்திரத்தில் உன்னை அறிவாளியாகவோ யோக்கியனாகவோ உலகம் மதித்துவிடாது. உனக்காவது உன்னிடம் சம்பாஷிப்பவர்கட்காவது நலம் பயவாத வீண் பேச்சுக்களை எந்தக் காலத்திலும் பேசாதிருப்பதே மரியாதை.

திருடனைப் பிடிக்கத் திருடனே வேண்டும்.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியம், M. A.)

(603-ம் பக்கத் தொடர்ச்சி.)

உண்மை ஞானம் உண்டானவுடன், ஆத்மா தன் துர் அப்பியாஸங்களை அறவே யொழித்து, நித்தியமான பொருளோடு கலந்து தானும் நித்தியத்துவத்தை அடைகிறது. இம்மாதிரி நிலைமையை முழுவதும் இந்த வாழ்வில் அடைதல் கஷ்டம். தேகத்தின் கூட்டுறவினால் ஆத்மா அவஸ்தைப்படுகிறது. ஆனால் இன்னொரு பிறப்பில் ஞான ஒளியை முற்றிலும் அடைந்து ஆனந்திப்போ மென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் ஆத்மா நிரந்தரமானது. ஆனால் ஆத்மாக்கள் தனிநிலையுள்ளனவா அல்லது ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டனவா வென்பது பிளேட்டோவின் ஆராய்ச்சியில் விளங்கவில்லை. ஞானியினுடைய ஆத்மா இவ்வுலகப் பாசம் நீங்கி, புனிதமாகி, குறைவற்ற உலகத்தை அடைகிறது. மற்றவருடைய ஆத்மாக்கள் மறுபிறப்புப் பெற்று பூர்வ ஜென்மபலனால் எந்தப் பிறவிக்கு அவர்கள் அருகரோ அப்பிறவிகளை யடைகின்றன.

மேற் கூறியவற்றால் பிளேட்டோவின் கருத்து இவ்வுலகம் வெறுக்கத்தக்கதென்றும், இதிலுள்ள பொருளும் பதவியும் விரும்பத்தக்கன வல்லவென்றும் ஏற்படுகிறது. உலகப்பற்று ஆத்மாவைக் கெடுக்கின்றது. தேகத்தோடு சம்பந்தப்பட்டதால் அதன் துர்க்குணங்கள் ஆத்மாவுக்கு ஏற்படுகின்றன. ஆகையால் ஞானியானவன் உலகப்பற்றில்லாமலும் ஏனையோர் விரும்பும் விருப்பங்களும் செய்யும் நடவடிக்கைகளும் தன்னை முழுக்கிவிடாமலும் இருக்கச் செய்யவேண்டும். ஸாக்ரடீஸின் அபிப்பிராயத்திற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! ஸாக்ரடீஸ் ஜன சமூகத்திலேயே மனிதன் காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும், தத்துவ ஆராய்ச்சியில் தேர்ந்த மகான்கள் ஜனங்களுக்கு உண்மை நிலையைப் போதிக்கவேண்டு மென்றும் வற்புறுத்தினார். பிளேட்டோ அதற்கு விரோதமாக ஞானி உலகத்தினின்றும் நீங்கி, துறவறத்தை அநுசரித்து தன் முக்தியையே பெரிதாகக் கருதவேண்டு மென்றார். பிளேட்டோவின் முக்கிய தத்துவம் யாதெனக் கண்டோம். இரண்டு சம்பந்தமற்ற உலகங்கள் இருக்கின்றன. ஒன்று நாம் கண்கூடாகக் காணும் இந்த உலகம்; அர்த்தம் மாத்திரம் தங்கியிருக்கும் உலகம் இன்னொன்று. புனிதமான எண்ணங்களும் நற்சிந்தனைகளும் ஒரு உலகம். விஷயேச்சையும் பாசமும் அம்சங்களாயுள்ளது இன்னொன்று. இவ்விரண்டிற்கும் யாது சம்பந்தம்? சம்பந்தமேயில்லாதிருந்தால் பிரபஞ்ச ஒற்றுமையிருக்காது. நாம் பார்க்கும்

ஒட்டினால் தொட்டிலுங் கொள்ளும், ஒட்டாவிட்டால் கட்டிலுங் கொள்ளாது.

உலகம் பொய்யாயிருந்தால் அது இருந்து என்ன பிரயோஜனம்? நம் அங்கங்களே நமக்கு விரோதிகளாயிருந்தால் அவைகள் நமக்கு எதற்கு? நிரந்தர உலகமொன்று உண்மையாக விருந்தால் ஏன் வேறு உலகமும் இருக்கவேண்டும்? இக்கேள்விகளுக்குப் பிளேடோ சமாதானம் கூற முயன்றாரெனினும் அவ்வளவு பொருத்தமுள்ளதாக இல்லை. ஆகையால் இவருக்குப் பின் வந்த தத்துவ ஞானிகள் இவருடைய கேள்விகளுக்குப் பதில் அளிக்க முயன்றார்கள்.

பிளேடோவின் சிஷ்யரான அரிஸ்டாடில் (Aristotle) பிளேடோவைப் போல் இவ்வுலகத்தைப் புறக்கணிக்கவில்லை. இவ்வுலகம் முழுவதும் மெய்யே. உலகத்தின் அம்சங்களை ஒருமிக்கக் கருதக்கூடாது. பிரபஞ்சப் பொருள்களைப் பிரித்து ஒவ்வொரு துணுக்கையும் ஆராய்ந்து விஷயங்களை அறியவேண்டும் என்பதே அரிஸ்டாடிலின் கொள்கை. ஒரு பொருளையும் அதன் அர்த்தத்தையும் பிரிப்பது அசாத்தியம். ஜடப் பொருள் ஓரிடத்திலும் அதன் அர்த்தம் வேறு உலகத்திலும் இருக்க முடியாது. எப்பொழுது நாம் இவ்வுலகத்திலுள்ள விஷயங்களை மாத்திரம் அறியக்கூடுமோ அப்போது அர்த்தமும் இங்கேயே இருக்கவேண்டுமேயொழிய இவ்விஷய உலகங்களினின்றும் ஊகித்தறியும் அர்த்தங்களை வாஸிகளாக உள்ள உலகம் வேறொன்று இருக்காது. உலகத்திலுள்ள உயிருள்ள பொருள் ஏதேனுமொன்றை எடுத்துக்கொள்வோம். மாமரம் என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்? வேர், தண்டு, இலைகள், பூக்கள், பழங்கள் ஒன்று சேர்ந்திருப்பதா? மாமரம் ஒரு விதையிலிருந்து உண்டாகிறது. இந்த விதையே ஒரு சார்பாக மாமரம் எனலாம். ஏனெனில் மாமரத்தின் அம்சங்கள் அந்த விதையிலேயே இருக்கின்றன. பெரிய விருக்ஷத்தை எடுத்துக்கொண்டால் வேறு பொருள் ஏற்படுகிறது. மரம் பட்டுப்போன பின் இன்னொரு அர்த்தம் பெறுகிறது. ஆகையால் மாமரம் என்னும் பதத்திற்கு விதையிலிருந்து, சிறு செடியாகி பெரிய விருக்ஷமாகி, பலிதம் கொடுத்துப் பிறகு வயது முதிர்ந்து பட்டுப்போகிற சரித்திரம் என்று சொல்லலாம். உறுப்புக்களை மாத்திரம் சுட்டிக்காட்டி இதுதான் மாமரம் என்றால் பொருந்தாது. ஏனெனில் உறுப்புக்கள் மாமரத்தின் ஒற்றுமைப்பட்ட முழு நிலைமையை எடுத்துக்காட்டுவதில்லை. பாகங்கள் முழு ஜீவனாக இருக்க முடியாது. முழு ஜீவனும் பாகங்களின்றி இருக்கமுடியாது. மரத்தின் கிளைகளையும் தண்டையும் வேரையும் வெட்டி எறிந்துவிட்டால் மரம் எங்கேயிருக்கும்? ஆகையால் பாகங்களும் முழு ஜீவனும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதன. மரத்தின் அர்த்தம் அதன் வளர்ச்சியும் வளர்ச்சியினால் உண்டாகும் மாறுபாடுகளுந்தான். ஆகவே வஸ்துவின் வளர்ச்சியைக் கொண்டே அதன் பாகங்களின் தொழில்கள் இன்னவையென்று அறியலாம். உலகப் பொருள்கள் வளராமல் ஜடமாயிருந்தால் ஒரு பொருளும் அதன் அர்த்தமும் எவ்வாறு கலக்கிறது என்று தெரியாது. ஆனால் பொருள்கள் எல்லாம் வளர்வதோடு இவ்வளர்ச்சியே அர்த்தத்தைப் பொருள்களுக்குக் கொடுக்கிறது. மரம் வளர்ந்துதான் அதன் பழங்களை நாம் புசிக்கிறோம். பலிதம் தராத மரம் தன் ஜன்மத்தின் பயனை நிறைவேற்றுகிறதில்லை. ஆகையால் எந்தெந்தப் பொருள் என்னென்ன காரணத்தை யுத்

தாயைப்பார்த்துப் பெண்ணைக்கொள்ளு, பாலைப்பார்த்துப் பசுவைக் கொள்ளு.



தேசித்து வளர்கிறதோ அக்காரணமே அதன் வளர்ச்சிக்கு அர்த்தத்தைத் தருகிறது. ஒரு மனிதன் பொருள் சம்பாதித்துத் தன் குடும்பத்தை ஆதரித்து உலகத்திற்கும் தன்னாலியன்ற வரையில் உதவி செய்யாவிட்டால் அவன் ஜன்மம் சாபல்யமாகாது. "குட்டிச் சுவருக்கும் வயதாகிறது. இவனுக்கும் ஆகிறது. அதாவது வீட்டைத் தாங்கி நிற்கிறது. இவனுக்கு அதுவும் முடியவில்லை" என்று அனேகரைக் குறித்து கேள்விப்படுகிறோம். ஆகையால் பிறப்பு, வளர்ச்சி, முக்கிய பயன் இம்மூன்றுமே ஒரு பொருளை பொருளாகச் செய்வது. பிரகிருதி ரீதியாக நோக்கின் தண்டு, இலைகள், விதை, பழம் முதலியன அர்த்தமற்ற தனிப் பொருள்களாயிருக்கின்றன. ஆயினும் இவைகளெல்லாம் அததற்கென்று ஏற்பட்ட இடத்தில் அமைந்த பிறகு மரத்தின் பயன் நமக்குத் தெளிவாகிறது. அரிஸ்டாடில் எப்படி மரத்திற்கு அர்த்தம் அதன் வளர்ச்சியிலேயும் அதன் பாகங்கள் ஒன்று கூடி தங்கள் கடமைகளை முடித்து மரத்தின் பயனை நிறைவேற்றுவதிலும் இருக்கிறதோ அதே மாதிரி அர்த்தங்கள் இவ்வுலகத்திலேயே பொருள்களுடன் இணைபிரியாமலிருக்கின்றன என்றார். ஒரு பொருளும் அதன் அர்த்தமும் வேறு வேறாக இருக்கமுடியாது. பீஜத்திலேயே மரத்தின் அம்சங்களிருக்கின்றன. இல்லாவிட்டால் மரம் அதிலிருந்து உண்டாகாது. பிரகிருதி ரீதியாய் நோக்கின் பீஜத்தை ஜடப்பொருளாகக் கருதலாம். ஆனால் ஜடப்பொருளாயினும் அதன் பிற்காலப் பயனைக் கவனித்தால் அதன் பொருள் விளங்கும். ஆகையால் ஒவ்வொரு பொருளையும் இரண்டுவிதமாகக் கருதலாம். அதன் இருப்பும் அதன் வளர்ச்சியும். ஒரு கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். கடிகாரத்தின் சக்கரங்களும் முட்களும் கம்பிகளும் தனித்தனியே கவனித்தால் அர்த்தமற்ற வஸ்துக்களாக விருக்கின்றன. ஆயினும் இவைகளைத் தக்க இடங்களில் அமைத்த பின் யந்திரம் வேலை செய்ய ஆரம்பிப்பதோடு உறுப்புக்களுக்கும் அர்த்தம் ஏற்படுகிறது. உறுப்புக்களுக்கு அது வரையில் அர்த்தமில்லையென்பதில்லை. ஒரு சிறு சக்கரம் அதன் அமைப்பைக் கருதுங்கால் ஒருவித அர்த்தத்தையுடையதாகவே காண்கிறது. ஏனெனில் அது செய்யப்பட்ட உலோகத்தை நோக்கின் உலோகம் ஜடமாகவும் சக்கரம் அர்த்தமுள்ள பொருளாகவும் கொள்ளலாம். உலோகத்தை உருக்கிச் சக்கரமாக அமைக்கும் வரையில் உலோகத்திற்கு அர்த்தமில்லை எனலாம். ஆனால் உலோகத்திற்கும் ஒருவித அர்த்தமில்லாமலில்லை; ஏனெனில் அதன் அமைப்பிலுள்ள அணுக்களை விட அதற்கு அதிக அர்த்தமிருப்பதாகவே சொல்லவேண்டும். இவ்வாறே உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றையும் கருதலாம். ஒரு சார்பில் வெற்றுப் பொருளாக மதிக்கப்படுவது மற்றொரு சார்பிலிருந்து அர்த்தமுள்ள வஸ்துவாகிறது. அரிஸ்டாடில் வஸ்துவுக்கு ஜடப் பொருள் (Matter) என்றும் அர்த்தத்திற்கு ரூபம் (Form) என்றும் பெயரிட்டார்.

இப்பொழுது உலக முழுவதையும் ஒரு வஸ்துவாக வைத்துக்கொண்டால் அதற்கும் அர்த்தமிருக்கவேண்டும். உலகமும் வளர்ந்துகொண்டு இருக்கிறது. உலகத்திற்கும் ஆதி, வளர்ச்சி, அந்தம் இருக்கின்றன. இவ்வுலகத்தின் பயன் யாதென நமக்குத் தெரியாவிட்டாலும் பயனிருக்கிறதென்பதில்

சொல்லிக்கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த சோறும் எதுவரையில் நிற்கும்?

சந்தேகமில்லை இப்பயனுக்கு அரிஸ்டாடில் ஆதிகாரணம் (Reason) என்று பெயரிட்டிருக்கிறார். ஏனெனில் அது எதிலிருந்தும் உண்டாகவில்லை. அது வெறும் அர்த்தம் மாத்திரம்தான். அதற்குப் பிறகு அதை ஜடப் பொருளாக உடைய வஸ்து எதுவுமில்லை. அப்பொருளுக்கே கடவுள் என்று பெயர். கடவுள் சூக்ஷ்ம சரீரி. ஸ்தூலம் என்பது அவருடைய அமைப்பில் கிடையாது. மனமே அவருடைய ஸ்வரூபம். அவரேதான் அசையாமல் பொருள்களை அசைப்பவர். உலகம் அவரையே காரணமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது.

உலகத்தில் எல்லாவற்றிலும் மேன்மையான நன்மை எது? பொதுவாக சந்தோஷம் எனலாம். இச்சந்தோஷம் என்பது என்ன? மனிதனின் தொழில் என்ன? ஒரு தச்சன் தன் தொழிலைச் செவ்வனே செய்வதே அவனுக்கு சந்தோஷம் விளைவிக்கிறது. இம்மாதிரி, மனிதனின் தொழில் என்ன? கண், காது, மூக்கு முதலியவைகளுக்குத் தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதனின் தொழில் வாழ்க்கை யெனலாமா? கூடாது. ஏனெனில் மரங்களும் மிருகங்களும் கூட உஜ்ஜீவிக்கின்றன. மனிதன் உலகத்திலுள்ள வஸ்துக்களைப் பார்ப்பதும், ஸ்பரிசிப்பதும், அறிவதுமாகிய தொழில்களைச் செய்கிறான். ஆயினும் மிருகங்களும் இவைகளைச் செய்கின்றன. மனிதனுக்குப் பிரத்தியேகமானது அவனுடைய விசேஷ புத்தியும் அதன் சொற்படி நடத்தலுமே. மனிதன் தொழில் மேலான புத்தியின்படி ஒழுகுவதுதான். பாட்டுப் பாடுபவனை பாடகன் என்றும், நன்றாய்ப்பாடுபவனைச் சங்கீத வித்வான் என்றும் சொல்வது போலும், மனிதன் புத்தியின் போதனையைக் கடைபிடித்து ஒழுகுவதால் மனிதனென்றும், மற்றவர்களைக் காட்டிலும் நன்னடக்கையுடனிருப்பதால் 'நல்ல மனிதன்' என்றும் சொல்லலாம். ஆகையால் நன்னெறியோடு நடப்பதே மனிதன் தொழில். ஆனால் நன்னடக்கை ஒருகாலத்தில் மாத்திரம் இருந்தாற் போதாது. எப்போதும் நன்னடக்கையுடனிருந்தால்தான் நல்ல மனிதன் என்ற பெயர் பொருந்தும். நன்னெறி யென்பது மனிதன் உலகத்தில் அடையவேண்டிய பயன். தன் முழுக் கவனத்தையும் செலுத்தி அடையவேண்டிய மேன்மையான நிலை. நன்னடக்கையின் தோழன் ஆகிய சந்தோஷம் தானாகவே அம்மனிதனுக்கு ஏற்படும். இன்பம், உதாரகுணம், சந்தோஷம் எல்லாம் ஒன்றே. இன்பத்தை மனிதர் விரும்புவதில் தவறில்லை. ஆனால் இன்பம் துர்க்குணத்தின் காரணமாக ஏற்பட்டால் பிரயோஜனமில்லை. பணம் விரும்பத்தக்கது. ஆயினும் தன் தேசத்திற்கு துரோகஞ்செய்து சம்பாதித்த பணம் குப்பையில் போடத்தக்கது. சந்தோஷம் சிற்றின்பத்தால் உண்டாவதல்லை. மனிதன் சிற்றின்ப சுகத்திற்காக ஒடியாடி கஷ்டப்பட்டுப் பொருள் தேடுவது பொருந்தாது. சந்தோஷம் மனிதனின் உதாரகுணத்தின் நடவடிக்கையாலே தான் உண்டாக வேண்டும்.

நன்னெறியை இரண்டு வகைகளாக அரிஸ்டாடில் பிரிக்கிறார். ஒன்று சிந்தனையினாலுண்டாவது. மற்றொன்று செய்கையினாலுண்டாவது. சிந்தனையினால் உண்டாகும் நன்னெறியோடு கலந்த இன்பமே எல்லாவற்றிலும் சுத்தமானது. சிந்தனையினால் உண்டாகும் நன்னெறி தெய்விகமானது. இன்

ஈனரை அடுத்தால் மானம் அழியும்.



னொன்று மானுஷிகமானது. கடவுள் நித்தியானந்த ஸ்வரூபி. அவருடைய ஆனந்தம் சிந்தனையினாலுண்டானதே. ஏனெனில் கடவுள் செய்யவேண்டிய தொன்றுமில்லை. மேலும் மனிதனின் பணிகளும் மேலான புத்தியாலே செய்யப்பட்டால் கடவுளின் ஆதரவிற்கு அவன் பாத்திரனாகிறான்.

சாமானிய மனிதர் நற்செய்கைகளைச் செய்தே முன்னேற்ற மடைய வேண்டும். தத்துவ ஆராய்ச்சி மட்டும் போதாது. கற்றறிந்ததை அனுசரித்து நடப்பதே நன்னெறி. மனிதனின் புத்தி உபயோகப்படுத்தப்பட்டு மனோபாவ முழுவதும் செலுத்தப்பட்டுச் செய்யப்படும் வேலைகளினால் தேய்ந்த வழியே நன்னெறி யெனப்படும். பிளேட்டோ மனிதனின் சாதாரண இச்சைகள் அடக்கப்பட வேண்டுமென்றார். அரிஸ்டாடில் இச்சைகளை அடக்கியாளாமல் அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றார்.

அரிஸ்டாடில், நடத்தையில் நடுவு நிலைமை (Mean) இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். அளவுக்கு மிஞ்சியாவது குறைந்தாவது ஒன்றையும் செய்யாமல் திட்டமாக ஒவ்வொன்றையும் நடத்தவேண்டும். தைரியம் மிகவும் கொண்டாடத்தக்கது. ஆனால் முரட்டுத்தனமாயும் குருட்டுத்தனமாயும் செய்யலாகாது. பயங்காளியாகவு மிருக்கலாகாது. இன்ப வாழ்க்கை மனிதனுக்கு இருத்தல் அவசியம். ஆனால் கிடைத்ததெல்லாம் தின்னவாவது குடிக்கவாவது அனுபவிக்கவாவது கூடாது. உலக இன்பத்தையே அனுபவிக்காத துறவியாகவும் இருக்கக்கூடாது. தர்மம் செய்யவேண்டியதவசியம். ஆனால் தன்னிடத்திலிருப்பவற்றை யெல்லாம் கொடுத்துவிடும் கர்ணனாக இருக்கவும்கூடாது. ஒன்றையும் கொடுக்காத லோபியாகவும் இருக்கக் கூடாது.

மிருகங்கள் சாதாரணமாகக் கூட்டங்களாகவே வசிக்கும் தன்மையுடையன. மனிதனும் ஜனங்களினிடையே இருக்கும் தன்மையுள்ளவன்; ஏனெனில் அவனுக்கு வேண்டியவற்றைத் தானே செய்துகொள்ள முடியாது. மற்றவர்கள் உதவியைப் பெறவேண்டும்; மற்றவர்களுக்கு உதவியும்செய்ய வேண்டும். ராஜ்யம் மனிதர் நன்மைக்காகவே உள்ளது; மனிதன் அறிந்ததைச் செய்வதற்கு ராஜ்யமே தக்க பாத்திரம். ராஜ்யமே மனிதனை யோக்கியனாகவும் உதாரகுண முள்ளவனாகவும் செய்வது.

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

ஒரு காசு பேணின் இருகாசு தேறும்.

# பத்தினிப் பெண்டிர் மாண்பு

(பண்டித. பா. பக்கிரிசுவாமி செட்டியார்.)

" முக்கணர்தண்டலை நாட்டில் கற்புடை
மங்கையர் பெருமை மொழியப் போமே?
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்தி; வில்
வேடனை யெரித்தாளொருத்தி; மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தி; எழு
பரிதடுத்தா ளொருத்தி; பண்டு
கொக்கெனவே நினைந்தனை யோகொங்
கணவா வென்றொருத்தி கூறினளே,"

என்ற இப்பாடல் படிக்காசுப் புலவர் பாடியருளிய பழமொழி விளக்கமெனும் தண்டலையார் சதக நூலிலுள்ளதாகும். இச்செய்யுளில் கற்புக்கரசியர் ஐவரையெடுத்தாளப்பட்டுளது. கற்புடைய மங்கையர் பெருமையை மொழிதல் தம்மாலியன்றதல்லவென இச்செய்யுளுரைத்தருளிய தம்பிரான் விளம்பியுள்ளார். ஆகவே, அத்தகைய உத்தம நங்கையர் எத்தகைய உயர் நிலையில் வைத்துப் புகழ்தற்குரிய ரென்பது உய்த்துணற்பாலது. இம்மங்கை நல்லாரைவரும் தங்கள் தங்கட்குத் தாங்களே உவமையுடையவராவர். ஆதலின் இச்செய்யுளைச் சற்று ஆராய்வாம்.

முதன் முதலாக "ஒக்கும்எரி குளிரவைத்தாள் ஒருத்தி" என்றவள் அனைவரும் போற்றும் அரிச்சந்திரனது அரிய சதி சந்திரமதியேயாவாள். தன் நாதன் நாட்டை யிழந்து, காட்டை நோக்கி நடந்த காலத்தில் அவனை நிழல்போற் பின்பற்றிச் சென்று, விசுவாமித்திர முனிபுங்கவர் செய்த சூதினால் காட்டு வழியில் கடுந்தீ யுண்டாகிக் கடுகிவர, அதனால் தங்கட்கு அல்லல் நேராவண்ணம் அவ்வக்கினிப் பிரவாகத்தைத் தன் கற்பெனும் அம்பால் (நீரால்) அவித்தவள்.

இரண்டாவதாக "வில்வேடனை எரித்தாள் ஒருத்தி" யெனக் கூறப்பட்டவள், நிடத நாட்டு நிருபனும் நளச்சக்கரவர்த்தியது நன்மனைவி தமயந்தியாவள். கலியின் கொடுமையால் நடந்த சூது போரின் மூலமாக நால்வகைச் சேனைகள், நாடு நகரங்களனைத்தையுந் தோற்று, நகமும் சதையும்போல எந்நாளும் சேர்ந்துவாழ விரும்பிய சேயிழை தமயந்தியோடு காட்டை அடைந்து ஆண்டு தன் காதலி படுந் துன்பஞ் சகியாத நளன் காரிருளில் உறக்கத்தே கைவிட்டுப் போக, பகலவன் உதித்தபின் தன் காதலன் பக்கத்திராததைக் கண்டு அவனுடைய பிரிவாற்றாமையினால் மனமுடைந்து வாடுமமயம் "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்றாற்போல் அவளைப் பேராவமொன்று விழுங்கத் தொடங்கவே, அது கண்ட வனசரனொருவன் அந்நாகத்

---

மூடனுக்குக் கோபம் மூக்கின்மேல்.



தைக் கொன்று அதனின்று அவளை விடுவித்த பிறகு அவன் தீய சிந்தையனாய்த் தோன்றத் தன் விழிகளால் அவனை நோக்கி, அத்தருணமே தனது கற்புத்தீயால் சாம்பராக்கியவள்.

மூன்றாவதாக "மூவர்பக்க முறவமுதளித்தாள் ஒருத்தி' எனச் சொல்லப்பட்டவள், அத்திரி மஹா முனிவரின் அருமைக் கிழத்தி அனுசூயை என்பாள். நாரத முனிவரால் இவளுடைய கற்பின் பெருமையைக் கேட்ட மும்மூர்த்தியரின் சத்திமார் அவளது கற்பின் திறத்தை உலகத்தார்க்கு உணர்த்த உன்னித் தங்கள் நாயகரிட மறிவிக்க, அவர்கள் ஆண்டி வேடம் பூண்டு பரமபக்தரான அத்திரி மகரிஷியின் பர்ணசாலையை யடைந்து ஐயம் வேண்டினர். கற்பே வடிவாய் வந்த கன்னிகையான அனுசூயை பரிவொடு பலியிடவரவும், தாங்கள் குறிப்பட்ட ஓர் காலத்தே பிச்சை புக வெளியே புறப்படுவதெனவும், அவ்வாறு வெளிவந்த காலத்தில் அவர்கள் நாடும் அகத்துக்குடையாள் நிர்வாணமாய் வந்து ஐயமிட்டால் மட்டுமே தாங்கள் அப்பிச்சையை அங்கீகரிப்பரெனவும் உரைக்க, அம்மடந்தை தன் பதியின் நாமத்தை நினைந்து மூர்த்தியர் மூவரையும் மூன்று பாலகராகச் சமைத்துத் தானும் ஆடைகளைந்து நிர்வாணமாக இருந்து பாலருந்தச் செய்வித்தவள்.

நான்காவதாக "எழுபரி தடுத்தாள் ஒருத்தி" என்றுரைக்கப்பட்டவள் மௌத்கல்ய முனிவரின் காதலி நளாயினி என்பவள். அவளுடைய கற்பைப் பல தடவை சோதித்தும் அவள் முறைதோறும் முன்னணியிலிருக்கவே, அவர் தம் சக்தியால் கண்டோர் வெறுக்கத்தக்க தொழு நோயால் விகாரங் கொண்டு சில தினங்கள் தோன்றினார். அவ்வாறு அவரிருந்த காலை, அவருறைந்து வந்த காட்டகத்தருகேயுள்ள நாட்டகத்தில் வாழும் கட்டழகியான பொது மகள் ஒருத்திமீது தாம் காமுற்றதாகவும், எவ்வண்ணமேனும் அப்பேரவாவை நீக்குவது தன்மனையாளின் கடமை யெனவும் வெளியிட்டார். அம்மகளிர் தன் அரிய பணியால் அவ்விலைமாதின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரப்பட்டு அவளுத்தரவின் மீது ஓரிரவு நடத்தற்கும் வலியற்ற தன்பதியைக் கூடை யொன்றிலிட்டுத் தலையில் சுமந்து அங்குச்சென்று விடியுமுன் தம் ஆசிரமத்திற்குப் திருப்பி எடுத்துவரும்போது, வழியில் கழுவேற்றப்பட்டிருந்த ஒரு தவசியின் காலில் கூடை தாக்கவே அதனால் அதிக வேதனையுண்ட அத்தவத்தோர், அக்கூடையைச் சுமந்தேகும் மாது பொழுது புலர்வதற்குள் புருஷனை இழக்கக்கடவாளெனச் சபித்தார். கணவனே கடவுள் எனக் கருதிய அக்கயல் விழியாள் பொழுது புலராதுபோக என மறு சாபமிட்டாள். முக்கண்ணன் ஆணை தவறினும் கற்புடையாளது கட்டளை தவறாதாதலால் பொழுது விடியாமற் போய்விட்டது. அதன்பின் வானவர் அவள் சுமங்கலியாக வாழ வாழ்த்தவே அவளும் பரிதி தோன்றுமாறு பணித்தருளினள்.

ஐந்தாவதாக "பண்டு கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா" என்று கூறியவள் தமிழ் மறையான திருக்குறளை உலகத்திற்கு உதவிய தெய்வப் புலவர் திருவள்ளுவ நாயனாரது திருமனையாட்டி வாசுகியாவள்; ஒரு காலத்தே கொங்கணர் என்ற தவசியின் தலையில் வானத்தே பறந்த கொக்கொன்று எச்சமிட, அதை அவர் நோக்கிய மாத்திரத்தில் அவரது தவமகிமையால் அக்கொக்கு சாம்பராகியது; பின்னர் ஒருநாள் அவர் பிச்சை பெறும் பொருட்டு நாயனாரகத்தை நாடினர். அவ்வமயம் வாசுகியார் தம் பதியின்

---

உடல் உள்ளவரையிற் கடல்கொள்ளாக் கவலை.

பணியில் நின்றமையால் பிச்சையிடச் சற்றுத் தாமதமாயிற்று. அது கண்டு மனம் பொறாத கொங்கணர் அம்மடந்தையைத் தாம் முன்னர் கொக்கை நோக்கியதே போல் ஒருவிதமாகப் பார்த்தார். அவ்விவரத்தைத் தம் கற்பினுறுதியாலுணர்ந்த அவ்வம்மை 'ஐய' தாங்கள் அடியாளையும் முன்பு தாங்களெரித்த கொக்கென நினைத்தீர்களோ?' என வினவலும், முனிவர் வெகுண்டு அவளுடைய பாதத்தில் வீழ்ந்து பணிந்து சென்றனர்.

இத்தகைய கற்பரசிகளின் சரித்திரங்கள் நம் நாட்டுப் பழம் நூல்களில் அனந்தமாக உள்ளன. பண்டையில் பதிவிரதைகள் விசேஷமாக இருந்தனரெனில் தற்காலத்தில் எங்கேனும் சிலர் இல்லாமலில்லை. பதிவிரதைகளினாலேயே உலகம் உய்கின்றதென்பது மறுக்கொணா உண்மையாகும். அவர்களில்லையேல் உலகமுமில்லை.

ஸ்திரீகள் தங்களுடைய கற்பை உயிரினும் சிறந்ததாகக் கருதித் தாமே காத்துக்கொள்ள வேண்டியது மன்றி, தம்பதியையும் பசுபதியெனப் போற்றி வருவதனால், எத்துணைச் சீரிய சிறப்பையும் எளிதில் எய்தலா மென்பதை மேற் கண்ட நிகழ்ச்சிகள் நிலைநாட்டுகின்றன.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை." —திருவள்ளுவர்.

---

சாஸ்திரீயத் திருமணம்.



இந்த ஜோடி எப்படி?

---

வட்டி ஆசை முதலுக்குக் கேடு.

# பிரபஞ்ச உற்பத்தி

டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.

(ஆனந்தபோதினிக்குப் பிரத்தியேகம்.)

(697-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமான பொருள் ஒன்று இருக்கிறதென்றும், அந்தப் பொருள் பிராணசக்தி யமைந்ததோர் பொருளாகவே இருத்தல் வேண்டுமென்றும் இதுகாறும் கூறியவற்றால் அறிந்தோம். இனி, அந்தப் பொருளுடன் பிரிவற்று நிற்கும் சக்தியானது, ஒரே பொதுமையான வஸ்துவிலிருந்து பலவேறு வகைப்பட்ட அங்கப் பிரபஞ்சங்களையும், அங்கமற்ற பிரபஞ்சங்களையும் கட்புலனுக்குத் தெரியும்படி சூக்கும அணுத் திரள்களை ஒன்றுசேர்த்து, சிருஷ்டிக்கிறது. இந்தப் பொதுமையான மூலகாரண வஸ்துவை உபநிடதங்கள் "அனிர்வசனீயம்" என்னும் பெயரால் கூறுகின்றன. இப்படிப்பட்ட வஸ்துவென்று ஒருவாற்றானும் உரைக்கவும், அறியவும் கூடாதபடி இவ்வஸ்து அத்துணைச் சூக்குமமாக இருக்கும். இவ்வஸ்துவுடன், உணர்வோடுகூடிய அறிவுப் பொருளொன்று இருந்துவருகிறது. அறிவற்ற சடப்பொருளாகிய அவ்வஸ்துவும் அறிவுள்ள சித்துப்பொருளாகிய இவ்வஸ்துவும் தனித்தனி வெவ்வேறாக உள்ள பொருட்களாம் என்னும் பேதந் தோன்றாவாறு இரண்டும் ஒன்றனோடொன்று மிக நெருங்கிய சம்பந்தமுற்றிருக்கும். பின்சொன்ன அறிவுப்பொருள், முற்கூறிய சடவஸ்துவை விட மிகச் சூக்குமமானதாயும், அறிவு நிரம்பியதாயு மிருப்பதாம் என்பது ஈண்டு கவனித்தற்பாலது.

இங்ஙனம் சடப்பொருளாகிய வஸ்துவும் அறிவுப் பொருளாகிய வஸ்துவும் ஒன்றனுக்கொன்று பேதந் தோன்றாவாறு நெருங்கிய சம்பந்தம் பெற்றிருப்பதை அறியாமல், சடப்பொருள் என்பதொன்று அறிவுப் பொருளாகிய வஸ்துவின் வேறாகக் கிடையாதென்று ஒரு சாரார் வாதிப்பர். சடப்பொருளிலிருந்தே அறிவுப்பொருள் உண்டாயிற்றென்று, மற்றொரு சாரார் வாதிப்பர். இவர்களுடைய வாதம் பொருந்தாதாமென்பதை பின்னர் விளங்கக் காட்டுவாம். அதற்கு முன்பு மாயாவாதிகள் இது சம்பந்தமாய் வினவும் ஆட்சேபங்களுக்கு விடை கூறி யவர்தம் வினாக்கள் போலி வினாக்களாமென்பதை நிரூபிப்பாம்.

"பிரபஞ்ச உற்பத்திக்கு அறிவுப்பொருளின் வேறாக அதி சூக்குமமாக இருக்கும் சடப்பொருளே மூல காரணம் என்பதை யாங்ஙனம் விளக்குவீர்? இவ்வுலக சிருட்டிக்கு ஆன்மாவே மூலகாரணமன்றோ? இன்ன தன்மையது என்று ஒருவாற்றானும் விளக்கமுடியாத அதி சூக்குமமான சடப்பொருள் ஒன்று இருக்கிறதென்று வைத்துக்கொண்டு அதைப் பிரபஞ்ச சிருட்டிக்கு

---

இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை.

மூலகாரணமாகக் கூறுவானேன்?'' என்று இன்னோரன்ன பல வினாக்களை மாயாவாதிகள் வினவுகிறார்கள். இவ்வினாக்களுக்கு விடைக் கூறிச் செல்வாம்.

தூலமாயும் கட்புலனுக்குத் தோன்றுவதாயும் உள்ள சடப்பொருளாகிய இந்தப் பிரபஞ்சம் சூக்குமமாயும், கட்புலனுக்குத் தோன்றாததாயுமுள்ள சடப்பொருளிலிருந்தே உண்டாயிருத்தல்வேண்டும். உயிருள்ள அறிவுப் பொருளிலிருந்து உயிரில்லாத அறிவற்ற சடப்பொருள் உண்டாகுமென்றல் எவ்வாற்றாலும் பொருந்தாதாம். ஏனெனில், இவ்விரண்டு பொருட்களும் தம்முண் முற்றும் மாறுபட்ட இலக்கணமுடையன. இப்போது கண்ணுக்குப் புலப்படும்படியாய் தூலமாய் ஒன்றுசேர்ந்திருக்கும் சடப்பொருளின் அணுக்கள் இன்னும் பலகோடி வருஷங்கள் சென்றால் தனித்தனியாகப் பிரிந்து கண்ணுக்குப் புலப்படாத சூக்கும நிலையை யடையும். நீங்கள் ஒரு சிறு விதையைப் பூமியில் விதைக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலில் அது வேரூன்றி, துளிர்த்து வருகிறது. அதன்பிறகு இலைகள், கிளைகள் முதலியன உண்டாகின்றன. இப்படியே அது வளர்ந்துகொண்டுபோனால் கடைசியில் அது காய்த்துப் பழுக்கிறது. பழத்தின் விதையை மறுபடியும் எடுத்து விதைக்கிறோம். இதனால் மூலகாரணமான வஸ்து விதை என்றும், அதிலிருந்து இலை, தளிர், கிளை முதலியன உற்பத்தியாகின்றனவென்றும், அவைகளின் சத்தெல்லாம் கடைசியில் மூலகாரணமாகிய விதையில் ஒடுங்கி விடுகிறதென்றும் புலப்படுகிறதன்றோ?

மற்றோர் உதாரணமுங் கூறுகின்றோம். குயவன் களிமண்ணிலிருந்து மட்பாண்டங்களைச் செய்கிறான். பாண்டங்கள் எதிலிருந்து உண்டாயின? களிமண்ணிலிருந்து உண்டாயின. அந்தப் பாண்டங்கள் உடைந்துபோனால் என்னவாகின்றன? மண்ணோடு சேர்ந்துவிடுகின்றன. மேகமாக மாறிய நீராவி ஆகாயத்தில் பரவியிருக்கிறது. அதன்மேல் குளிர்ந்த காற்றுப் பட்டவுடன் அது மழையாக வருஷிக்கிறது. மழையாக வருஷித்த நீர் மீண்டும் என்னவாகிறது? சூரிய உஷ்ணத்தினால் நீராவியாக மாறி மறுபடியும் ஆகாயத்திற் பரவி மேகமாகிறது. ஒரே இலக்கணமுடைய ஒரே வஸ்துவின் ஒரு பாகத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் என்ன முடிவு பெறப்படுகிறதோ அதே முடிவுதான் அவ்விலக்கணமுடைய மற்ற வஸ்துக்களை முழுவதும் பரிசோதித்துப் பார்ப்பினும் உண்டாகும். இவ்வுண்மை தருக்க நூல் முடிபான உண்மையாகும். ஆகவே விதை, களிமண், நீராவி இம்மூன்றும் மூலகாரணங்கள் எனபதும், இவைகளின் காரியங்கள் முறையே மரமும், பாண்டமும், நீருமாம் என்பதும் கரதலாமலகம் போல் விளங்குவதொன்றாம். காரணத்துக்கும் (Cause) காரியத்துக்கும் (Effect) ஏதாவது வித்தியாசமிருக்கிறதா? ஆம்; இருக்கிறது. ஆனால், அந்த வித்தியாசம் வெளித்தோற்றத்தில் காணப்படும் வித்தியாசமேயன்றி வேறல்ல; குணத்தில் வித்தியாசம் சிறிதும் ஏற்படாது.

களிமண்ணிலிருந்து குயவன் இரண்டு மூன்று குடங்களைச் செய்கின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். களிமண்ணுக்கும் குடத்துக்கும் வித்தியாசமென்ன? களிமண் சரியான ஒரு உருவத்தோடு இல்லாமல் மொந்தாகாரமான மண்ணுருண்டையாயிருக்கிறது. குடம் ஒரு உருவத்தை அடைந்திருக்கிறது. இதுதான் வித்தியாசம். ஆனால், மண், குடமான பிறகும் அந்தக் குடம் அக் களிமண்ணின் இலக்கணத்தைக் கொண்டிருக்கிறதேயன்றி வேறில்லை. இதனால் மண்ணும், குடமும் உருவத்தில் மாறுபட்டிருக்கின்றனவே தவிர குணத்தில் மாறுபடவில்லையென்பது இனிது பெறப்படவில்லையா? ஆகவே காரணம் என்பது காரியத்தின் சூக்கும நிலையாமெனவும், காரியம் என்பது காரணத்தின் ஸ்தூல நிலையாமெனவும் கொள்ளப்படும்.

வஞ்சனை வாழ்வைக் கெடுக்கும்.



இவ்விதியைப் பிரபஞ்ச உற்பத்திக்கும் வைத்துப் பார்ப்போமானால், காரியப்பட்டிருக்கும் கட்புலனான இந்த ஸ்தூலப் பிரபஞ்சம், கட்புலனாயில்லாது சூக்கும நிலையை அடைந்திருந்த காரண வஸ்துவாகிய சடப்பொருளின் ஸ்தூல நிலைமையேயன்றி வேறல்ல என்னும் உண்மை இனிது புலப்படும்.

“ஒரு வஸ்து காரியப்பட்ட பிறகு அதில் காணப்படும் உண்மைகளே அவ்வஸ்துவின் காரண நிலையிலும் காணப்படுதல் வேண்டும்; ஆனால் சிற்சில வெளி வேறுபாடுகளுடன்'' என்று அனுமான அளவையால் பெறப்படும் நியாயத்தை சைவ சித்தாந்திகளும் சாங்கிய மதஸ்தரும் சற்காரிய போதம் என்று கூறுவர்.

இந்தப் பிரபஞ்சங்களைப்பற்றி நமக்கு என்ன தெரிகிறது? பிரபஞ்சங்கள் உயிரற்ற ஸ்தூல வஸ்துக்களால் ஆகிய பெரும் அண்டங்கள் என்று பிரத்தியட்சமாய் அறிந்து வருகின்றோம். பிரபஞ்சங்களில் உள்ள வஸ்துக்கள் சிலவற்றில் மாத்திரம் பிராண சக்தி இயங்கிக்கொண்டிருக்கிறது. பிராண சக்தியின் உதவியினால் இயங்கிக்கொண்டிருக்கும் இந்தச் சிற்சில வஸ்துக்கள் கூட பிராண சக்தியின் தொழில் நின்றவுடன் இயக்கமின்றிப் பிராண சக்தியே இல்லாத சடப் பொருட்களைப் போலவே உயிரற்றுப் போகின்றன. இதனால் உயிரற்ற சடப் பொருளாகிய இந்தஸ்தூலப் பிரபஞ்சத்தின் மூலகாரணம் உயிரற்ற சடப் பொருளாகிய ஒரு சூக்கும வஸ்துவாம் என்னும் உண்மை பெறப்பட்டது. ஸ்தூல பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமாய் அதி சூக்குமமான நிலைமையிலிருக்கும் சடப்பொருளுக்கு பிரகிருதி மாயை என்று பெயர். பிரகிருதி மாயையைவிட அதி நுட்பமாயும் சூக்குமமாயும் இருக்கும் வஸ்துக்கள் பல இருக்கின்றன.

இனி, மனம் (Mird) வேறு, மாயை அதாவது வஸ்து (Matter) வேறு, என்பதை உணராத மாயாவாதிகள் “வஸ்து என்பது ஒன்று தனித்து இல்லை. எண்ணத்தின் பிரதிபலனமே வஸ்துவாம்'' என்று வாதிப்பார்கள். இவர்கள் சொல்லுகிற ஆட்சேபத்தை ஒரு உதாரணத்தினால் விளக்கிக் காட்டுவோம். பந்துபோல் உருண்டையான ஒரு ரசக்குண்டை எடுத்துக்கொள்வோம். அது எவைகளினால் ஆக்கப்பட்டிருக்கிறது? அதில் கனம், உருண்டைவடிவம், பிரதிபலிக்கும் தன்மை இவைகளிருக்கின்றன. ஒரு வஸ்துவை அதனுடைய குணத்தைக்கொண்டு அறியலாமேயன்றி, வஸ்துவே இன்னதென்பதாக அறிந்துகொள்ள முடியாது. இந்த உண்மை எல்லோரும் ஒப்ப முடிந்த உண்மையாகும். இந்த விதியை ரசக்குண்டின் விஷயத்திற்கும் வைத்துப் பார்ப்போம். அதில் அமைந்திருக்கும் குணங்களின் வேறாக ரசக்குண்டு என்பது என்ன என்று நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. ரசக்குண்டு என்னும் பொருளை நினைத்தமாத்திரத்தில், அதனுடைய உருண்டை வடிவம், கனம், பிரதிபலிக்கும் தன்மை, இவைகள் நம் மனத்தில் தோன்றுகின்றன.

இருந்தகால் மூதேவி-நடந்தகால் சீதேவி.

கனம் என்பது என்ன? உருண்டை என்றால் என்ன? பிரதிபலனம் என்பது என்ன? இவைகளெல்லாம் என்னுடைய ஸ்பரிச உணர்ச்சியிலும், கண்ணின் பார்வை யுணர்ச்சியிலும் ஏற்படுகிற வெவ்வேறுவகையான சலனங்களை (Vibrations) மனம் கிரகிப்பதனால் அதற்கு ஏற்படும் பலவகை நிலைமைகளே யன்றி வேறில்லை. ஆதலால் வஸ்து என்பது மனதில் தோன்றும் தோற்றங்களுக்கு வேறாக இல்லை. மனமும் மாயையும் ஒன்றுதான். இவ்விதமாக மாயாவாதிகள் ஆட்சேபிக்கிறார்கள். இவர்களுடைய ஆட்சேபம் பொருந்துமா பொருந்தாதா என்று பார்ப்போம்.

அநுபவசித்தமாய் நம்முடைய பஞ்சேந்திரியங்களினால் அறியப்படும் அறிவினுக்கு வேறாய் ஒன்றைக் கிரகிக்கும் தன்மை மனதுக்கு இல்லை. உருண்டை என்னும் வடிவம் வாஸ்தவத்தில் இல்லை என்றும், மனதில் தோன்றும் ஒருவகை சலனத்தினால் உருண்டை என்னும் ஒரு குணத்தை மனம் கிரகிக்கின்றதென்றும் கொள்ளுவோமாயின் உருண்டை என்பதைப் பற்றிய அறிவு எல்லோருக்கும் நிகழவேண்டும். உருண்டை என்பது இன்ன இலக்கணத்தோடு கூடிய வடிவம் என்பதை அறியாத ஒருவனிடம் போய் எலுமிச்சம்பழம் என்ன வடிவத்தோடு கூடியது என்று கேட்டால் அவன் பதில் சொல்லுவானா? சொல்லமாட்டான். ஏனெனில் முன் பின் உருண்டை வடிவம் இப்படிப்பட்டதென்பதை அவன் அறிந்தவனல்லன். பிறவிக் குருடனை யானையின் உருவம் எப்படி யிருக்குமெனக் கேட்டால் அவன் பதில் சொல்லுவானா? உருண்டை, வட்டம், சதுரம் என்ற தொடக்கத்து வடிவங்களும், கருமை, வெண்மை, சிவப்பு என்ற தொடக்கத்து நிறங்களும் மனதின்கண் நிகழும் வெவ்வேறு வகையான சலனங்களின் பயனால் உண்டாகும் தோற்றங்களாயிருந்தால் பிறந்த குழந்தைக்குக் கூட அந்த உண்மை தெரிந்திருத்தல் வேண்டுமன்றோ? ஏனெனில் குழந்தைகளுக்கும் மனம் இருத்தலினாலென்க. ஆனால் உண்மை அப்படி யில்லையே. குழந்தை வளர வளர உலகியல் அறிவும் உடன் வளர்ந்து வருகிறது. கண்ணால் பார்த்தும், கையால் பரிசித்தும், பிறர் அறிவுறுத்துவது கொண்டும் அது வடிவ வேறுபாடுகளையும் அறிந்துகொள்ளுகிறது. ஆகவே மனத்தின் வேறாக வஸ்து இருக்கிறதென்பதும், மனமும் வஸ்துவும் ஒன்றே தவிர வஸ்துவென்று தனியாக ஒன்று இல்லை யென்று கூறுவோர் உரை பொருந்தாதென்பதும் பெறப்பட்டன.

இனி மாயை என்பது அதி சூக்குமமான அணுத்திரள்களாமென்றும், இவைகளின் சேர்க்கையே கட்புலனாய்த் தோன்றும் இப்பிரபஞ்சமென்றும் முன் சொன்னோமல்லவா? இந்த மாயை சுத்த மாயை அசுத்த மாயை என்று இருவகைப்படும். இவை இரண்டும் உயிரற்ற சடப்பொருள்களே ஆனாலும் அசுத்த மாயையை விடச் சுத்தமாயை அதின் நுட்பமாயும், சூக்குமமாயும் இருக்கும். இறைவனுடைய திருவருட் சக்தியானது அசுத்த மாயையைக் காட்டிலும் சுத்த மாயையில் மிகுந்து தோன்றும். இந்தச் சுத்த மாயையே (Pure and Subtle Matter) அசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்திற்கும் மூல காரணம். இந்தச் சுத்த மாயையை சைவ சித்தாந்திகள் விந்துதத்துவம் என்று கூறுவார்கள். இதனுடைய வடிவம் புள்ளி (Point) வடிவமாகும். இச் சுத்த மாயையை இறைவனுடைய அருட் சக்தி உள்ளிருந்து இயக்குகிறது. அப்படி இயக்கும்போது ஓர் ஓசையுண்டாகும். இந்த ஓசையே நாத தத்துவமெனப்

வருந்தினால் வாராதது இல்லை.



படும். புள்ளி வடிவான விந்து தத்துவத்தை, அதாவது சுத்த மாயையை அதனுட்கலந்து நிற்கும் திருவருட் சக்தி கலக்கும்போது நாத தத்துவமுண்டாகும். இந்த நாத தத்துவம் வரிவடிவமானது. இப்படி நிகழும் இயக்கத்தால் சுத்த மாயையின் அணுக்கள் அலை அலையாய் ஒன்றை ஒன்று தாக்கும். அப்படித் தாக்கும் உழர்ச்சி (Friction) யால் ஒரு நாத முண்டாகும். தயிரை மத்திட்டுக் கடைந்தால் ஒரு விதமான சத்தம் உண்டாவதுடன், அதன்கண் வியாபித்திருக்கும் வெண்ணெய் திரண்டு வருவதை எல்லோரும் பார்த்திருக்கலாம். அதுபோலவே சுத்த மாயையின் கீழ் வியாபித்திருக்கும் அதே மாயை நாத தத்துவத்தால் கடையப்படுகிறது. அப்போது அந்த மாயையின் அணுக்களெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டி பிரகிருதி மாயை உண்டாகிறது. பிரகிருதிமாயையைவிடச் சூக்குமமான வஸ்துக்கள் இருக்கின்றன என்று முன்பு சொன்னோமல்லவா? அவைகள் சுத்த மாயையும், அசுத்த மாயையுமாம். இந்தப் பிரகிருதி மாயையிலிருந்தே பலவித பேதங்களோடு கூடிய ஸ்தூலப் பிரபஞ்சங்கள் உண்டாயின.

ஆகவே விந்து என்னும் சுத்த மாயையில் உண்டாகும் நாதமே இப்பிரபஞ்ச சிருஷ்டிக்கு ஏதுவாம் என்பது பெறப்பட்டது. இனி இந்த நாதத்தோடு உடன் நிகழும் அக்கினியே இப்பிரபஞ்சத்தை ஒடுக்கிச் சங்கார நிலையில் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகும். ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய ஒரு திருக்கரத்தில் இருக்கும் வட்டமான டமருகத்தின் வாயே சுத்த மாயையாம். அந்த டமருகத்தில் பெருமான் தமது திரு விரல்களை வைத்திருப்பது சுத்த மாயையைக் கலக்கும் திருவருட் சக்தியைக் குறிப்பிடுகிறது. டமருகத்தில் நடராஜரின் விரல்கள் பட்ட மாத்திரத்தில் உண்டாகும் நாதமே பிரபஞ்ச சிருஷ்டிக்கு ஏதுவான நாத தத்துவமாம். பெருமான் ஒரு கரத்தை அமர்த்துங் குறிப்புத் தோன்ற வைத்திருப்பது சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் சிறிது காலம் நிலைத்திருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது. இறைவனின் மற்றொரு கரத்தில் இருக்கும் அக்கினியே பிரபஞ்சங்களைச் சங்கரிக்கும் அக்கினி தத்துவமாம். இங்ஙனம் பிரபஞ்ச சிருஷ்டி நடைபெறுகிறதென்பதை ஸ்ரீமத் குமரகுருபர ஸ்வாமிகள் பின்வருமாறு கூறி நமக்கு உண்மை புலப்படுத்தி யிருக்கிறார்கள்.

பூமலிகற்பகப் புத்தேன் வைப்பும்
நாம நீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைய புவனமும் எண்ணீங்கு யிருந்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழலமைத்த தோர்கரமே
ஈட்டிய வினைப்பய னைவற்றையு மறைத்துநின்
றூட்டுவதாகு நின்னூன்றிய பதமே
அடுத்த வின்னுயிர்கட் களவில் பேரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே.

இரவற் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே.

# கர்ணன் மாண்பு.

(எம். சுப்பிரமணியம், பி. ஏ.)

(581-ம் பக்கத் தொடர்ச்சி.)

வள்ளன்மைக்கோர் உறைவிடமாயும் நன்றிமறவாமைக்கோர் நாயகமாயும் தோன்றித்திகழ்ந்த கர்ணன்பால் அமைந்திலங்கிய வீரத்தன்மை 'அளவிடற்கரிது; வீரச் சுவையை விரும்புவோர்க்குத் தெவிட்டா விருந்தளிப்பது. கர்ணன், வீரத்தின் பிறப்பிடமெனக் கூறுதல் மிகையாகாது. சுத்த வீரர்க்குச் சுவாசம்போன்ற ஆண்மையும் மனோ திடமும் அவனிடம் முற்றுங் குடிகொண்டிருந்த குணங்களாம். போரெனிற் கழிபேருவகைபூண்டு போர்க்களத்தில் இறுதிகாறும் எதிர் நின்று புறங்காட்டியோடாது போர்புரிந்து ஆற்றற் கருஞ் செயல்களை யாற்றுதலே சிறந்த அறமெனக் கருதும் குழாத்தைச் சேர்ந்தவன் கர்ணன். க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்த உத்தமனுதலால், போருக்கும் அதன் தொடர்பாகிய பல கோரக் காட்சிகட்கும் சிறிதுஞ் சலியா மனமாண்பு பெற்றவன். இவனது க்ஷத்ரிய மனவலிமை, இவன் இள வயதில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தால் விளங்கும். இவன் வளர்ந்து வில்வித்தை கற்பான் துரோணரை யடுத்து வேண்டியும் அவர் மறுத்தது கண்டு, பரசுராமரிடஞ் சென்று, தன்னைப் பிராமணனெனக் கூறி, வில்வித்தை கற்று வருநாளில், ஒரு சமயம் பரசுராமர் இவன் தொடையில் தலைவைத் துறங்கினராக, இந்திரன் வண்டுருவாக இவன் தொடையைத் தொளைத்தனன். அவ்வாறு உதிரம் பெருகத் தொளைத்தும், தன் குரு நித்திரையினின்றெழுந்து அக்காட்சியைக் காணுமளவும் கர்ணன் வாளாவிருந்த தன்மையானது, அவன்பாலமைந்த சிறந்த குருபக்தியையும், அவனது க்ஷத்ரிய வீரத்தன்மைபொருந்திய மனவன்மையையும் நன்கு விளக்குவதாகும்.

இவன், துரோணர் தனக்கு வில்வித்தை கற்பித்துக் கொடாததால் அவரது மணுக்கரில் வல்லவனுகிய அருச்சுனன்பால் பகைமை கொண்டான். போரில் தனக்கு நிகர் அருச்சுனனே யெனவும், அவனுக்கு நிகர் தானே யெனவும் கர்ணன் முற்றுமறிந்தவன். இது

"எனக்கெதிர் விசயனல்ல தில்லையவ் விசய னென்பான்
றனக்கெதிர் என்னையன்றித் தாணிபர் யாருமில்லை"

என்பதால் விளங்கும். இதனையொட்டியே கண்ணனும்,

"அந்தகின் மைந்தன் றனே யருஞ்சிலை விசயனோடு
வந்தெதிர் மலைய நின்றால் உறவுமற் றறியமாட்டான்"

எனக் குந்தியிடம் கூறினன்.

---

இடுவது பிச்சை ஏறுவது மோக்ஷம்.



187508

இத்தகைய வலிமை கர்ணனுக்குப் பிறப்புரிமையாகும். அவன் பிறக்கும்போதே கவசமும் குண்டலமும் கதிரவ னருளால் உடன் பிறந்தனவாம். அவற்றின் வலிமை வரையற்றது.

"கவசங் கனக குண்டலமென் றிரண்டு புனையிற் கற்பாந்த
திவசம் பொரினுங் கண்ணனுயிர் செகுப்பார் மண்ணிற் சிலருண்டோ"

எனும் அத்துணை உயர்வு பெற்றவை. அவற்றினுதவியையும், தன் ஆசிரியன்பால் தான் கற்ற அருங் கலைகளின் உதவியையுங் கொண்டு கர்ணன் தன் ஜீவியகாலத்தில் நிகழ்த்திய வீரச் செயல்கள் அளவிலடங்காதனவாம். இச் செயல்கள், கர்ணனை இளமைமுதல் ஆதரித்துப் பெருஞ் சீருஞ் சிறப்புமளித்த துரியோதனன் சார்பாகவே நிகழ்ந்தன. அம்மன்னனுக்கு எவ்வகையானும் உதவி செய்தலையே பொருளாகக் கொண்டு கர்ணன் தன் உயிரையும் திரணமாக மதித்துத் தன் ஆயுளுள்ளளவைகாறும் வெம்போர் நிகழ்த்தினன். ஒவ்வொரு சமயமும் தன் புயவலியைத் துரியோதனனுக்கும் மற்றையோர்க்கும் சொல்லாலும் செயலாலும் எடுத்துக் காட்டிவந்தான். வில்வித்தை யரங்கத்தே தத்தம் திறத்தினைக் காட்டுவான் குழுமியிருந்த வீரர் முன்னே கர்ணன் அருச்சுனனை விளித்து

"நாமிருவரும் தநுக்கொள் போரியற்ற வம்மின்"

என்று அழைத்ததற்கண் வெளித்தோன்றும் வீரம் பொருந்திய மன நிலையும்

"முனைந்த போரின் முடிதுணித்துன் முக சரோருகத்தினுற்
சினந்தணிந் தரங்க பூசை செய்வன்"

எனச் சீறிப் புகன்ற வீர மொழிகளும், வீரச் சுவையை வெளிப்படுத்தி இன்பமூட்டுவனவாம்.

.........மற்றும், திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிட்டது கண்டு அழுக்காறுகொண்ட மன்னர்முன் அருச்சுனன் எதிர்த்து நின்ற காலையில், கர்ணன் அவனை ஒரு பொருட்டாக மதியாது, புகைத்த கனல் விழியுடையோனுகி அவனை அவமதித்து நின்ற நிலை அவன் போர்த்திறத்தினைக் குறிப்பதாகும்.

இராயசூய யாகம் இனிது நிறைவேறிய பின், பாண்டவரை வஞ்சனையாலாதல், படையாலாதல் அழிக்கவேண்டுமெனத் துரியோதனன் கூறியகாலத்தில், கர்ணன் எதிர்த்துக் கூறும் மொழிகளில் சிறந்த வீரத்தன்மையின் ஊற்று விளங்கக் காணலாம்.

"வெஞ்சிலை குனித்தோ ரம்பி யான்விடின் வெகுண்ட வேந்தர்
எஞ்சிவிண் புகுவ ரல்லால் யாவரோ எதிர்க்க வல்லார்;
வஞ்சனை கொண்டு வெல்ல மதிப்பது, வாளால் வெல்ல
அஞ்சின மாயி னன்றோ" என்றனன்.

பகைவரை வஞ்சனையால் வெல்லுதல் தகாதெனவும், அது வலிமைக்கு இழுக்காமெனவும், தன் சிலைக்குமுன் எஞ்சி நிற்போரிலர் எனவும் கூறித் துரி

---

இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை.

யோதனனுக்கு ஊக்கமளிக்கு முகத்தால் வெளிப்படுத்திய கர்ணனது வீரந்தானென்னே!

பாண்டவர் அஞ்ஞாதவாசத்தின் இறுதிக்காலத்தில் அன்னோ ரிருப்பிடமறிய வியலாது மயங்கிக்கிடந்த துரியோதனனுக்குக் கர்ணன் கூறிய உபாயமும் அவன் வலிமையையும் மனோநிலையையும் விளக்கிக் காட்டுவதாகும். வஞ்சனையால் அவரை யொழிக்கலாமெனக் கர்ணன் கருதினானல்லன். அல்லும் பகலும் போரெனிற் பேரவாக்கொள்ளும் அவன் மன நிலையானது அக்காலத்தும் போரின்பாலே சென்றதால், விராடன் வளநாட்டைத் தண்டால் மலைதலே அன்னோரை வெளிப்படுத்தற்குத்தக்கதோர் உபாயமெனப் புகன்றான்.

நிரை மீட்சிக் காலத்தில் கர்ணன் அருச்சுனனுடன் செய்த கடும்போர், கண்காணிப்போரைக் கதிகலங்கச் செல்யுந் தகைமைத்தாயிருந்தது.

"மன்னுட னிகல்வது வார்த்தையன்றினி
என்னுடன் மலைதி நீ"

எனக் கர்ணன் அருச்சுனனிடம் கூறியமொழிகளில் அஞ்சாநெஞ்சம் அமைந்திலங்கக் காணலாம். அப்போரில் இரதமும் இரதமும் எதிர்ந்தன; துரகதங்களும் குமுறி யார்த்தன; இரு வீரரும் விரைதனு வளைத்தனர்; நெடுநேரம் பொருதும் ஒருவர்க்கொருவர் இளைத்திலர். பின்னர் அருச்சுனன் கர்ணன் தேரை யழிக்க, கர்ணன் மனஞ்சலியாது ஓடி மற்றொரு தேர்மிசை ஏறி எதிருறவந்து மோதினான். இவ்வாறு பன்முறை நிகழ்ந்தும் கர்ணன் இறுதிகாறும் மனந்தளராது பொருதான். இறுதியில் கர்ணன் அருச்சுனன் வலிமைக்காற்றாதபோதினும், அவன் போரின்கண் தோற்றுவித்த வீரத்தன்மை உயரிய தொன்றாம்.

கர்ணன் தன் ஆண்மையை உயிரினும் பெரிதாக மதித்திருந்தானாதலால், அதனைப் பிறர் பொருட்படுத்தாது இழுக்குரைத்தலை ஒரு சிறிதும் சகியாதவன். உலூகன் தூதுசென்ற காலத்து வீடுமன் திருதராட்டிரனை நோக்கி

"..............வெஞ்சமர்பொர நாடினையெனி னாளைக்
கோடுமன்னுவி லருச்சுனற் கெதிரெவர் குனிக்கவல்லவர்"

எனக் கூறியதைக் கேட்ட கர்ணன் அதைப் பொறாளாய்

"என்ன சேவகங் கொண்டு நீ யாரையு மிகழ்ந்துரைப்பது"

எனக் கண் சிவந்து சீற்றத்துடன் செப்பிய தன்மை, அவனது மானம் பொருந்திய வீரத்தன்மையை மாண்புற விளக்குவதாகும்.

"பாராளக் கன்னன், இகல் பார்த்தனை முன் கொன்று"

எனச் சகாதேவன் கண்ணனிடம் கூறிய மொழியினும், கர்ணனது வீரத்தன்மை ஆழ்ந்தமைந்து கிடத்தல் காணலாம்.

கிருஷ்ணன் தூதுசென்ற காலத்து, துரியோதனன் கூறிய கடுமொழி பொறாது விதுரன் வில்லிறுத்ததைக் கண்ட அவை மன்னர்.

---

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?



"..............விசயன் வந்தமரின் முடுகினால்
எந்தவில்லி யெதிர் நிற்கும் வில்லியினி"

என இரங்கிக் கூறியதைக் கேட்ட கர்ணன், அம்மொழி தன் வலிமைக்குப் பழுதாமெனக் கருதி, மனம் பொறானாய்,

"....................யானிருக்க இகல் விசயனைச்
சென்று சீறியுயிர் கொள்ள வல்லவர்கள் யாவரென்று நனி செப்புவீர்
அன்று போரினிடை காணலாகுமென தாடல் வெஞ்சிலையி னாண்மையே"

எனவும்,

"அம்பரத்தவ ருடன்று சீறினு மொரம்பிலே யழிவர், திண்ணம்; யான்
வெம்பணிப் பகழியேவிலாவியுடன் மீளுவானமரில் விசயனோ
விம்பரிற்புகல விருதளத்தினு மெனக்குநே ரொருவரில்லை"

எனவும்,

"சிவனு மென் கணையை யஞ்சும்" எனவும் கனன்று கூறிய உறுதிமொழிகளில் கர்ணன் மனவன்மையோடு பொருந்திய வீரத்தன்மை வரையிலாது விளங்கக் காணலாம்.

தூதுவந்த கண்ணனை யொழிக்கும் உபாயந் தேடிய துரியோதனனை நோக்கி:

"இங்கிவ னிருந்த வில்லி லெரியிட வேண்டுமோ தான்
வெங்கணை யொன்றினாலே வீளிந்திட வென்று மீள்வேன்
கங்குலி னெழுமின்"

என்று கூறுமுகத்தாலும் கர்ணன் தன் வலிமையை வெளிப்படுத்தினான்.

கண்ணன் ஏவலால் தன்னை நாடிவந்த தன் தாயாகிய குந்தி வேண்டிய வரங்களைத் தருங்காலத்தில் கர்ணன் மொழிகளில் தோன்றும் வீரத்தன்மை முன்னிலும் சிறப்பாகத் திகழ்கின்றது. பாந்தளம் பகழியை ஒரு முறைக்குமேல் மறுமுறை பார்த்தன்மேல் தொடுக்கலாகாதெனக் குந்தி வரங் குறித்தாள். அது கேட்ட கர்ணன் மனஞ்சகியானாய்:

"தெறுகணையொன்று தொடுக்கவு முனைந்து செருச்செய்வோன்
[சென்னியோடிருந்தால்
மறுகணை தொடுப்ப தாண்மையோ வலிமையோ மானமோ
மன்னவர்க்கறமோ"

என மறுமொழி புகன்றான். இதனின்றும் இரு அரும்பெரும் பொருட்கள் புலனாகின்றன. ஒன்று—தன் கணை, இலக்குக் குறித்த இடத்தைத் தவறாது சென்றடையும் என உறுதிகொண்டிருந்த கர்ணன் கணை வலிமை-இதுவே சுத்த வீரர்க்குரிய தவறாக் குறிக்கோளாகும். மற்றொன்று; இலக்காகக் குறிக்

---

எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.

கப்படும் பொருள் முதற்கணைக்குத் தப்புமாயின், அதன்மேல் மறுகணை தொடுத்தல் ஆண்மையும், வலிமையும், மானமும், மன்னவர்க்கறமும் அன்று எனக் கர்ணன் கருதிய—உயர்ந்த — அறப்போரின்பாற்பட்ட — மனப்பான்மையாகும். இதுவன்றோ உயர்நெறியின் வழித்தாகிய போர்முறை!

கடோற்கசன் தூதுசென்ற காலத்தில் 'துரியோதனன் மனங் கவல, கர்ணன் அவனைத் தேற்று முகத்தால் புகலும் மொழிகள் அவன் வீரத்தன்மையை நன்கு வெளிப்படுத்துவன. கர்ணன் கடோற்கசனை நோக்கி,

"சயத்திரதன் கொடுங்கணையால் தான் படுதலுறுதியெனச் சாற்றுவாயே" எனக் கூறினான். மற்றும்,

"....................அணிந்த போரில்
நாளை யார் வெல்வரெனத் தெரியுமோ"

என நவின்று நகைத்தான். மேலும்

"பங்கிருந்த உமாபதிபால் பணிந்து வரம் பெறச் சென்றான்
பார்த்தனாகில், நின்குடைக்கீழ் துகாலங் கூட்டங் கூடி
இங்கிருந்த ஏழையரோம் என்செயமற்றிருக்கின்றோம்"

எனவுங் கூறித் தன் ஆண்மையை நன்கு வெளிப்படுத்தினான். பின்னும்

"சயத்திரதன் றன்னுயிர் காப்பல்யான்" என்றான்.

## விதவைக்கட்கு விமோசனம் என்ன ?



இவள் எப்படியோ கர்ப்பமாகிக் குழந்தையைப் பெற்றுவிட்டாள்—குழந்தை சாக்கடைக்கு இரையாகிறது—இயற்கையின் வலிமையை யாரே எதிர்ப்பார்?

பணம் உண்டானால் மணம் உண்டு.

## மேனாட்டு விழுச் செல்வம்

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

1 பணத்தை வீணாக அழிப்பதைவிட பணத்தில் பேராசை வைப்பதே மனிதனை அதிகமாக நாசம் செய்யும். கோல்டன்.

2 அழகே இளைஞர் உள்ளத்தின் வழிகாட்டி. எமர்ஸன்.

3 இரண்டு இதயங்களைத் துக்கத்தில் தோழமை இறுக்கமாய்ப் பிணிப்பது போல் வேறெதுவும் பிணிப்பதில்லை. ஸதே.

4 உன்னில் உயர்ந்த சிலரோடு உன்னை ஒப்பிட்டுப் பாராதே. உன்னில் தாழ்ந்த பலரோடு உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள். ஜான்ஸன்.

5 சமயம் மாறுபவன் தலைபோனபின் இன்னதெனத் திரும்பிப் பார்க்கும் ஈயை ஒப்பான். பட்லர்.

6 சண்டை தனக்குள் ஆரம்பிக்கும்பொழுதுதான் மனிதன் ஏதோ சிறிதேனும் மதிப்புடையவனாகின்றான். ப்ரௌனிங்.

7 அறிவில்லாத சமயவாதிகள் சமயக் கொள்கைகளுக்காக சண்டையிடட்டும். ஆனால் அறத்தாறு ஒழுகுபவன் ஒருநாளும் தவறியவனாகான். போப்.

8 பிறர் குணங்களை மெச்சும் இயல்பைவிட அதிகமாக வேறெதுவும் நமக்கு நண்பர்களைத் தேடிவிடாது. பாஸ்வெல்.

9 பகிரங்கமாகப் பகைப்பவனால் கேடு விளையலாம். ஆனால் நண்பனாக நடிப்பவனாலேயே அதிகக் கேடுவிளையும். கே.

10 உண்மையான நட்பு மெதுவாக வளரும் செடியாகும். நட்பு என்றும் பெயர்பெற உரியதாகுமுன் அது பல கஷ்டங்கள் வந்தாலும் ஈடழியாதிருத்தல் அவசியம். வாஷிங்க்டன்.

11 உண்மையாகவே உயர்ந்தவன் ஒருவன் உலகத்தில் உதித்தால் அவனை அறிந்து கொள்வதற்குரிய அடையாளம் யாதெனில்—அவனுக்கு விரோதமாக அறிவிலிகள் அனைவரும் கூடிக்கொள்வர் என்பதே. ஸ்விட்.

12 செய்ந்நன்றி செலுத்த அதிகமாய் ஆத்திரப்படுவதும் நன்றிக் கொலையில் ஒருவிதமாகும். லாரோஷே.

13 இருளின் இடையிலேயே தெளிவாய்த் தெரியும் "பாஸ்பரஸ்" என்னும் பொருளைப் போன்றது நட்பு. கிராம்வெல்.

14 நட்பை இடைவிடாது பழுது பார்த்துக்கொண்டே இருத்தல் அவசியம். ஜான்ஸன்.

வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?

15 காதலர்க்கு ஒன்றாயிருப்பதில் ஒருபொழுதும் வெறுப்புத் தோன்றாதிருப்பதற்குக் காரணம் என்ன? எப்பொழுதும் அவர்கள் தங்களைப்பற்றியே பேசிக்கொண் டிருப்பதே. லாரோஷே.

16 மனைவியாதி பிறரிடம் முறையிடுவதிலும் பிறரிடம் அந்தரங்கம் கூறுவதிலும் உடனே அதிக ஆறுதலைக்காணும். கதே.

17 கள்ளரில் கள்ளன் லோபி—அவன் தன்னையே கொள்ளையடித்தான். (லோபியின் கல்லறையில்).

18 இன்பமும் துன்பமும் நேர்விரோதமா யிருந்தாலும் அவை எப்பொழுதும் இணைபிரியா நண்பர்களாக இருக்க வேண்டுமென்பது இயற்கையின் ஏற்பாடு. சாரன்.

19 மனிதனைக் கெட்டவழிகளில் உபயோகித்துக் கொள்வதில் முதன்மை பெற்றது அவனைத் தூக்குமரத்தில் இடுவதே. ஸர். ஹெச். வொட்டன்.

20 நட்பு விஷயத்தில்போலவே மத விஷயத்திலும் யார் அதிகப்பற்றுடையவர்களாகக் கூறிக்கொள்கிறார்களோ, அவர்களே அந்த அளவிற்கு உண்மை நம்பிக்கையில் குறைந்தவர்க ளாவர். ஷெரிடன்.

21 ஸ்நேகம் முறியும்போல் இருந்தால் சிந்தையிலுள்ளதைத் திறந்து கூறிவிட்டால் போதும் ஸ்நேகம் முறியாது நின்றுவிடும். ஸிட்னி ஸ்மித்.

22 ஒருவன் அநேக விஷயங்களில் வைதிகமாயிருக்க வேண்டும். இல்லையெனில் அவனுக்குத் தன்சொந்த அவைதிகக் கொள்கையைப் போதிக்க ஒரு பொழுதும் நேரமிராது. செஸ்டர்டன்.

23 ஷேக்ஸ்பியர் என்னைவிட அதிக உயரமுள்ளவரே. ஆனால் நான் அவருடைய தோள்களின்மேல் அல்லவோ நிற்கின்றேன். பெர்னார்டுஷா.

24 கூடியமட்டும் துன்பம் விளையாமல் தடுத்துக்கொள்வதும், தடுக்கமுடியாத துன்பத்தைக் கூடியமட்டும் பயன்படுத்திக் கொள்ளுவதுமே அறிவு ஆகும். ரஸ்கின்.

25 மனிதனுடைய கொடிய பகைவன் அவனுடைய நெஞ்சிலேயே யுள்ளான். ஸெனீக்கா.

26 சாஸ்திரிகளைப்போல் சாமர்த்தியமாய் அஞ்ஞானம் பேசுவதிலும், சான்றோர்களைப்போல் சாமர்த்தியமின்றி ஞானம் பேசுதலே சாலச் சிறந்ததாகும். செஸ்டர்டன்.

27 தரையோடு தரையாய் நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும். ஆண்டவனுடைய அந்தமில்லா ஆண்டுகள் அதனுடையது மாகும். பிரையண்ட்.

28 நம்மில் உயர்ந்தோரிடமும் எவ்வளவோ தீமை இருக்கின்றது. நம்மில் தாழ்ந்தோரிடமும் எவ்வளவோ நன்மை இருக்கின்றது. ஆகையால் பிறரைப்பற்றிப் பேச நம்மில் எவர்க்கும் தகுதியுடைமை அரிது. ராக்பெல்லர்க்கு உகந்த கவி.

29 என் மகனுக்கு அரண்மனையும் அளித்தேன். அரசும் அளித்தேன். அவ

வேளை அறிந்து பேசு, நாளை அறிந்து பயணம் பண்ணு.



னுடைய யாக்கையே அரண்மனை, அவனுடைய ஆன்மாவே அரசு—அழிவதானலும் ஸ்ரீமதிஹோ.

30 இவ்வுலகத்தை நன்கு பயன்படுத்தியே அவ்வுலகத்தை அடைதல் இயலும். நம் இயல்பைப் பூரணமாக்கும் வழி அதை அழித்துவிடுவதன்று. அதற்கு அதிகமாக அதோடு சேர்ப்பதும், அதன் இலட்சியத்திலும் உயர்ந்த இலட்சியத்தை நாடச் செய்வதுமே. நியூமன்.

31 நான் உண்மையைப்போல் கர்ணகடூரமா யிருப்பேன். நீதியைப்போல் நெறிபிறழா திருப்பேன். எந்தக் காரியத்திலும் வேஷம் போடேன். உண்மையாகவே உழைப்பேன். இரண்டுபடப் பேசேன், சாக்குப் போக்குக் கூறேன், அணுவளவும் பின்வாங்கேன். அதனால் நான் கூறுவதற்கு யாரும் செவி சாய்க்காமல் இருக்க முடியாது. காரிஸன்.

32 கர்வங் கொண்டவர்கள் சம்பந்தமான கஷ்டம் எல்லாம் அவர்கள் தாங்கள் வீண்பெருமை பாராட்டுகிறவர்கள் என்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதே. செஸ்டர்டன்.

33 "காலம்"—சிலர் முழுவதும் வீணாக்குகின்றனர், அநேகர் பெரும்பாகம் வீணாக்குகின்றனர், ஆனால் அனைவரும் சிறிதேனும் வீணாக்காதிருப்பதில்லை. மாதியூ ஆர்னால்டு.

34 அதிக ஆனந்தம் அனுபவிக்க ஆற்றல் இல்லாதவன் உயர்ந்த ஒழுக்கமுடையவனாய் இருக்க இயலாது. வால்டர் ராலீ.

35 இலட்சியமில்லாத மனிதன் திசையறி கருவி யில்லாத கப்பலை யொப்பான். ஆவ்பரி.

36 மக்கள் உடம்புக்கு வேலை கொடுப்பதுபோல் மூளைக்கும் வேலை கொடுத்தால், சந்தோஷமாயிருக்கச் சிரத்தை எடுத்துக் கொள்வதுபோல் ஒழுக்கமாயிருக்கவும் சிரத்தைஎடுத்துக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஸெனீக்கா.

37 "துக்கவழி"—ஆம்; துக்கவழியொன்றே துக்கமறியா தேசத்திற் கொண்டுபோய் விடும். கௌப்பர்.

38 இன்பம் காணும் வழி ஆசைகளைக் குறைப்பதே. ஆசைகளைத் திருப்திசெய்ய முயல்வதன்று. டேக்கார்ட்.

39 இன்பப் பேற்றின் இரகசியம் நமக்கு ஏற்றபடி வெளி விஷயங்களை அமைக்கச் சிரமப்படுவதினும் வெளி விஷயங்களுக்கு ஏற்றபடி நாம் நடந்து கொள்வதே யாகும். டேகால்டு ஸ்டூவார்ட்.

40 உலகம் ஒரு கண்ணாடியை ஒக்கும். நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும், நாம் முகஞ் சுளித்தால் அதுவும் முகஞ்சுளிக்கும். ஆவ்பரி.

41 இயற்கை மேல் குற்றம் கூறாதே. அவன் கடமையை அவன் செய்துவிட்டான். நீ உன் கடமையைச் செய்தால் போதும். மில்டன்.

42 தான் அறத்தில் நிற்பதால் பிறர் அடையும் சாந்தியும் சந்தோஷமும் இவ்வளவென்று கணித்தல் அநேகமாக இயலாத காரியமாகும். அக்கம்பிஸ்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.

43 வாழ்விலும் சரி, மாணத்திலும் சரி, சான்றோர்க்கு எவ்விதத் தீமையும் விளைத்துவிட முடியாது. — ஸாக்ரட்டீஸ்.

44 நன்னெறி அதிகக் கரடுமுரடென்றாவது அதிகக் கஷ்டமென்றாவது கூறப்படக் காணோம். கூறப்பட்டிருப்ப தெல்லாம் அது குறுகியது என்றும் கண்டு பிடிக்கக் கடினமானது என்றுமே. — ஆவ்பரி.

45 பிறரிடம் தாட்சண்யம் காட்டு, உன்னிடம் மட்டும் தாட்சண்யம் காட்டாதே. — ஆவ்பரி.

46 நயனம் ஒன்று சொல்ல நாவொன்று சொல்லுமானால் நன்றாய் விஷயத்தை அறிந்தவன் நயனத்தின் மொழிகளிலேயே நம்பிக்கை வைப்பான். — எமர்ஸன்.

47 குதிரையைச் சீக்கிரமாகக் கொழுக்கச் செய்வது அதன் சொந்தக்காரனுடைய பார்வையே யாகும். — ஜெனோபன்.

48 இன்சொற்களின் விலை அற்பம், ஆனால் அதன் மதிப்போ அதிகம். — ஹெர்பர்ட்.

49 ஊழியத்திலும் அனுதாபமே மக்களுக்கு அதிக உதவி அளிப்பதாகும். — ஆவ்பரி.

50 நல்ல மனைவியிலும் உயர்ந்த வரமில்லை. பொல்லா மனைவியிலும் தாழ்ந்த சாபமுமில்லை. — ஸைமனடீஸ்

51 மனோ வேலையே மனிதனுக்கு ஆத்மசாந்தி அளிக்கும். — ஜான்சோர்ட்

52 மொழிகள் மண்ணுலகின் புத்திரிகள். செயல்கள் விண்ணுலகின் புத்திரர்கள். — ஜான்ஸன்.

53 முழங்காலிட்டு வணங்கும் பிரபுவைவிட பாதத்தில் நிற்கும் உழவனே உயர்ந்தவனாவான். — பிராங்க்லின்

54 ஒரு காரியத்தை நன்றாய்ச் செய்தற்குரிய வெகுமதி அதைச் செய்து முடித்ததே. — எமர்ஸன்.

55 அறிஞனுக்கு அனைத்துலகும் அன்னை நாடே. சாந்தமான மனதிற்கு எந்த இடமும் அரண்மனையே. — வில்லி.

56 செய்வதற்கு ஏதேனும் ஒன்று—அன்பு செய்வதற்கு ஏதேனும் ஒன்று—நம்பி எதிர் பார்ப்பதற்கு ஏதேனும் ஒன்று—இம் மூன்றும் அடையப் பெறுவதே இன்பவாழ்வின் இரகசியம். — சாமர்ஸ்.

57 மனோதைரியம் இழந்தாலன்றி எவனையும் எந்தக்காலத்தும் உண்மையிலேயே தோற்கடிக்கப்பட்டான் என்று கூற இயலாது. — ஆவ்பரி.

58 வேலை செய்வதில் அவசரமும் கூடாது, இடையில் நிறுத்தி இளைப்பாறுவதும் கூடாது. — கதே.

59 வாழ்வில் இருளான சமயம் ஏற்பட்டால் ஒளியான சமயங்களை ஞாபகப் படுத்திக்கொள். — ரிக்டர்.

60 அறிஞர் நஷ்டம் வந்தால் ஒரு பொழுதும் அழுது கொண்டிரார். உடனே துன்பத்தைத் துடைக்கும் வழியைச் சந்தோஷமாய்த் தேடுவதிலேயே கருத்தைச் செலுத்துவர். — ஷேக்ஸ்பீயர்.

---

கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.

# சிறுகதை

## "எவருக்காகப் பரிவதோ"

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

"ஏண்டீ கமலம்! நேக்கு இன்னக்கி முக்கியமான ஜோலி இருக்குன்னு காலேலிருந்து அடுப்புப் பக்கமே வராது போயிட்டதனால், இப்படியும் சாமான்களைப் பாழாக்கி வைக்கலாமாடீ? இப்படி ஆத்து சாமான்களை யெல்லாம் உன் மனம் போனபடி பாழாக்கிண்டிருக்க உன் செல்லப் புருஷன் என்ன மாஸம் நூத்துக் கணக்காகவா சம்பாதிச்சு போட்டிண்டுருக்கான்? இன்னும் என்ன நீ மாரப்பாச்சி வச்சி வெள்ளாடிண்டிருக்கும் பாப்பாவா என்ன? வயசு ஆகலையோ மாட்டுக்கு ஆறுப்போலே பதினாலு வயசு! இன்னும் எத்தன நாளைக்கிடி கிளிப்பிள்ளைக்கு சொல்றாப் போலே படிச்சு படிச்சு சொல்லிண்டிருப்பா? உன் புறந்த ஆத்திலே எல்லாரும் உன்னை இத்தனை வயசு வரைக்கும் மடிமேலேயே வச்சிண்டு கொஞ்சிண்டிருந்தாளா என்ன? பூமியிலே பொண்ணா புறந்துட்டுதுக்கு, சிரா சமையல் பண்ணவாவது கத்துக்கொள்ள வேண்டாமா என்ன? இந்த ரெளியமுதிலே புளியை கரைச்சு சரிபாதியாய் விட்டிட்டிருக்கியே! இந்த மாதிரி சாத்தமுது வைக்க எங்கேருந்தடீ கத்துண்டு வந்துட்டாய்? இத்தை குத்திக்கிறதைவிட தேமேன்னு வெந்நீர்த்தத்தை வாத்துண்டு சாப்பிட்டுடலாம் போலிருக்கே! ஏண்டீ! இந்த கறியமுதிலே ரெண்டு உப்பை போடரத்துக்குக் கூடமா உணத்தியில்லே? பாவி! இன்னக்கி என்னை உபவாசம் போட்டுட்டாயே!"—என்று இரைந்தாள் சுப்புலட்சுமி.

அவளது பிரசங்கத்தைக் கேட்டு அகம் கலங்கி நடுங்கி நின்ற பூங்கொடி போலும் மெலிந்த உடல் வாய்ந்த ஒரு சிறு பெண், பயத்துடன் கூடிய மெல்லிய குரலில், "இல்லே மாமீ! நேக்கு தெரிஞ்ச வரையிலே வஞ்சனை இல்லாததான் தளிகை பண்ணிருக்கேன். ஏதோ அறியாத சிறுசு குற்றம் பண்ணிட்டிருந்தாலும் என்னை மன்னிச்சுக்கிணும். இன்னுமே ஜாக்கிரதையா நடந்துகிறேன். நீங்களும் இன்னம் கொஞ்ச நாளைக்கி கிட்டே இருந்து காட்டிக் கொடுத்துண்டு வந்தேன்னா, நன்னா தெரிஞ்சண்டுடறேன்"—என்று உள்ள நடுக்கத்துடன் உரைத்து நின்றாள்.

"சிறுசாம் சிறுசு! குட்டிச் சுவராட்டமா பதினாலு வயசு ஆச்சு; இன்னும் அம்மாகிட்டே பால் குடிச்சண்டிருக்கியா என்ன? நன்னாருக்கு! உன் வயசிலெல்லாம் நான் எவ்வளவு திவ்யமா தளியல் பண்ணி சாதிச்சிண்டிருந்தேன் தெரியுமா? ஒன்னைச் சொல்லக் குத்தமில்லடீ! ஒன்னைப் பெத்துப் போட்டவன், பொண்ணாப் புறந்த கட்டைக்கு இத்தன வயசு வரேலே தளியல் பண்ணக்கூட தெரியாம செல்லங் கொடுத்து வளத்துண்டிருந்ததில்லே

பெரிய வெக்கக் கேடா இருக்கு! இத்தனை வயசு வரேலே உடம்பு வளையாதவளுக்கு, இன்னுமே கத்துக்குடுத்தா வரப்போவுது? 'அடியாத மாடு படியாது' என்பா பெரியவா. பத்திரம்! இன்னமேயாவது ஜாக்கிரதையா நடந்துக்கோ! இல்லாவிட்டால், என்ன செய்வேன் தெரியுமோ இல்லியோ?"—என்று சொல்லிக்கொண்டே சுமார் நாற்பது வயதுண்டிய வடகலை வைஷ்ணவ ப்ராம்மண விதவையான சுப்புலட்சுமி என்னும் அச்சிறு பெண்ணின் மாமி, அவளருகிற் சென்று நின்று அவளது தலையில் தனது முழு பலத்துடன் ஓங்கி ஒரு குட்டுக் குட்டிவிட்டுத் தாடையிலும் ஒரு இடி இடித்துவிட்டு கண்களை உருட்டி ஒரு 'கடும் பார்வை' பார்த்துவிட்டு திரும்பிச் சென்றாள். பாவம்! அச்சிறு பெண் இதன் முன் என்றும் எவரிடமுமே அத்தகைய. குட்டைப் பட்டறியாதவளும் அவ்வளவு கொடிய வசை மொழிகளைக் கேட்டறியாதவளுமாதலின், சிறிதுமே எதிர்பார்த்திராவாறு அக்குட்டையும் இடியையும் பெற்றுத் திகைத்துக் கலங்கி, சிறிது நேரம் தனது நிலைமை நினைந்து தாரைதாரையாகக் கண்ணீர் வடித்துக்கொண்டே வருந்தி நின்றாள்.



அச்சிறுமி தனது பெற்றோர்க்கு ஒரே அருமை மகளாதலின், அவர்களால் வெகு செல்வமாக வளர்க்கப்பட்டு வந்திருந்தாள். அவர்கள் நல்ல அந்தஸ்திலேயே இருந்துவந்தவர்களாதலால், தங்களது மகள் கேவலம் வாழ்நாள் முழுவதும் அடுப்பங்கரையிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்துவிட்டு, கிடைக்கும் சிறிது ஓய்வு நேரத்தையும் ஊர்வம்புகள் அளந்துகொண் டிருப்பதில் போக்கிவிட்டு கல்வி வாசமே வீசப்பெறாத பயனிலாப் பிறவியாக இருந்துவிடாமல், கல்வி அறிவை உடையவளாய் குடும்ப நிர்வாகத்திற்கும் ஆன்ம நலத்திற்கும் சிறந்த விதத்திற் பயன்படக்கூடிய பல அரும்பொருள்களையும் ஆராய்ந்து அகத்தில்கொண்டு தனது பிற்கால வாழ்வைச் செவ்விதில் நடாத்திவரப் போதிய திறம் பெற்றவளாய் விளங்குமாறு அவளைச் சிறந்த முறையில் படிக்க வைத்திருந்தனர். அவளது மணவாளனையும் படிப்பில் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் சிறந்த ஒருவனாகவே தெரிந்தெடுத்து, தங்களது மகளிடம் வைத்திருந்த அன்புப் பெருக்கினாலே, மூவாயிர ரூபாய் வரதட்சணையாகவும் நகைகளில் ஆயிரமும் மற்ற செலவுகளில் ஐந்நூறுமாகச் செலவுசெய்து மிக்க சிறப்பாகத் திருமணம் செய்துகொடுத்தார்கள். அச்சிறுமி தனது கணவன் அகத்திற்கு வந்த ஒரு மாதத்தில், திருமணத்தின் முன்பே பல மாதங்களாக நோயாய்ப் படுத்துக்கிடந்த அவளது மாமனார் மண்ணுலகம்விட்டு விண்ணுலகம் சென்றார். அவளது மாமியோ, தனக்குமேல் தன்னை அதிகாரம் பண்ண அப் புருஷன் ஒருவன் இருந்த காலத்திலேயே பெரியதொரு வாயாடியாக விளங்கியவள். அவனும் கண்மூடிக்கொண்டு இனி என்றும் திரும்பி வாராத இடத்திற்குச் சென்றுவிடவே, அதன்பின் தனக்கு 'சுமங்கலிப்பட்டம்' கொடுத்திருந்த திருமங்கல நாணை இழக்க நேர்ந்தாலும், தன்னை அதிகாரம்பண்ண மேலுக்கு எவரும் இன்மையால் தான் ஒருத்தியே அவ் வீட்டில்



அதிகாரம் செலுத்த உரியவள் என்று அவள் தீர்மானித்துக் கொண்டுவிட்டாள் எனலாம்.

மேற்குறித்த சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பகல் இரண்டு மணிக்கெல்லாம் சுப்புலட்சுமியின் வீட்டிற்கு, அவ்வூரில் சிறந்த வாயாடிகள் என்று பெயர் பெற்றிருந்த ஐந்தாறு 'பெண்மணிகள்' விஜயம் செய்திருந்தனர். அவளது கணவன் இறந்தபின், அவ்வூரின் 'வம்பர் மகா சபை' கூடும் இடமாக அவளது வீட்டையே அவர்கள் தெரிந்தெடுத்துக்கொண்டு விட்டனர். அவள் எதிரில்நின்று அவளை அதிகாரம் செய்யக்கூடியவர் எவரும் இல்லாதபோது, அவளது தர்பாருக்கு என்ன தடை இருக்கப் போகின்றது! அப் பெண்மணிகள் ஐந்துமணி ஆனதும் அவளிடம் விடை பெற்றுத் தத்தம் அகங்கட்குப் புறப்பட்டனர். தனது மருமகள் அவர்களை நமஸ்காரம்செய்து ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ளச் செய்யவேண்டுமென்று எண்ணிய சுப்பு, அவளை 'அடியே கமலம்! அடீ கமலம்!! உன்னைத்தாண்டீ கமலம்!!!'—என்று நிறுத்தி நிறுத்தி மும்முறை கூவியழைத்தாள். வழக்கம்போல் அச் சிறுமி தன் முன்வந்து நிற்கக் கண்டிலள். அவ்வளவே! மறுகணமே மகிடாசூரனை மடிக்கப் புறப்பட்ட துர்க்கா தேவியேபோல், கொடுங் கோபத்தோடுங் கூடியவளாய் உட்சென்று தன் மருகியைத் தேடினாள். அவள் அறைகள் எவற்றிலும் காணப்படவில்லை; பின் தோட்டத்தை நாடிச் சென்றாள். அவ்விடத்துத் தாழ்வாரத்தில் தலைவிரிகோலமாய்த் தரையில் குப்புறப் படுத்துக்கொண்டு தனது மருகி தேம்பித் தேம்பி அழுதுகொண் டிருக்கக் கண்டாள். சீறிக்கொண்டு மேலே விழுந்திடும் பாம்பேபோல், குனிந்து அவளது தலைமயிரைப் பற்றி இழுத்துக்கொண்டே தனது தோழிகளிடம் வந்து சேர்ந்தாள்.

"ஆத்துக்கு வாழவந்து இன்னும் ரெண்டு மாஸம் ஆகலே! அதுக்குள் இவளுக் கிருக்கும் நீலித்தனத்தைப் பாருங்களேன்! நன்னு தளியல் பண்ணத் தெரியலேன்னு, காலேலே ஒரு குட்டு குட்டி விட்டேனும்! அதுக்கு தரையிலே கிடந்து மாயக் கண்ணீர் வடிக்கிறு இந்த சின்னஞ் சிறுக்கி!"—என்று கூறிக்கொண்டே அச் சிறுமியின் அழகிய சிவந்த கன்னங்களில் பளீர் பளீரென்று ஐந்தாறு அறைகள் கொடுத்தாள் அக்கொடியவள்! அருகில் நின்ற அவளது தோழிகள் "அடிக்காதேள் பாவம்! வந்து ரெண்டு மாஸம்தானே ஆகிறது! 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்பா பெரியவா. இன்னுமே சீர்திருந்திடுவா. பாவம் சிறுசுதானே"—என்றுரைத்து அவளை ஒருவாறு சமாதானப்படுத்திவிட்டு விடைபெற்று தத்தம் இருப்பிடம் சென்றனர்.



கமலத்தின் கணவனான கோபாலாசாரி பீ-ஏ-சீனியர் வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்கும் மாணவர்களில் ஒருவன். அவன் படித்துக்கொண்டிருந்த அவ் வகுப்பிலே, அக் கல்லூரியில் அவனே முதன்மையாக விளங்கினான். தனது வகுப்புக்கு உரிய பாடபுத்தகங்களோடு திருப்தி கொண்டு விடாது, பெண்மணிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகளையும் குடும்ப வாழ்க்கையில் அவர்கள் எவ்வளவு மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் அவர்களது காதலின் உயர்வையும் பெரிதும் விரித்துரைக்கும் மேனாட்டுக் கலைஞர்களின் அரிய நூல்கள் பலவற்றையும் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்ததோடு, தான் படித்ததற்கிணங்க தனது குடும்ப வாழ்வில் நடந்துகொள்ளவும் தீவிர உறுதி கொண்டான். ஆசார சீர்திருத்தச் சங்கத்தின் அங்கத்தினர்களுள் அவனும் ஒருவன். பெண்களுக்கு உயர்தரக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்பது அவனது தீவிர கொள்கை.

அவனுக்கு நமது கதாநாயகியான கமலம் தனது பத்தாம் வயதிலேயே வாழ்க்கைப்பட்டிருந்தும் (!). புஷ்பவதி ஆனபிறகே கணவன் வீட்டில் வாழத் தகுதியுடையவளாதலின், அதன்பின்னரே தனது மாமியார் அகத்திற்கு 'குடித்தனம்' செய்ய வந்திருந்தாள். அவள் புஷ்பவதியாகி இரண்டு மாதங்களே ஆயின. அவளது மாமியான சுப்புலட்சுமி, தன் மருகி புக்ககத்திற்கு வந்தவுடனே தனது சொரூபத்தைக் காட்டிக்கொள்ளாமல் இரண்டு மாத காலம்வரை அடங்கியிருந்தது ஆச்சரியமே! மேற்குறித்த சம்பவம் நடைபெற்ற தினத்தன்றே, 'மாமியார்' எனும் பதவிக்கு உரியதாக கருதிக்கொண்டிருந்த தனது அதிகாரத்தை அவள்மேல் செலுத்தத் தொடங்கினாள். கமலம் புக்ககத்திற்கு வாழவந்து இரண்டு மாதங்களாகியும், கவலை கொள்ளத்தக்க விசேஷ சம்பவங்கள் எவையும் விளையாதிருந்து வந்ததால், தான் நெடுநாட்களாகப் பலர் சொல்லக்கேட்டும் நேரில் சில இடங்களில் கண்டும் தெரிந்துகொண்டிருந்த 'மாமியின் கொடுமை' என்பது தனது மாமியிடம் இருக்காது என்று எண்ணியிருந்தவளாதலின், அவளது பொழுதுபோக்கு அச்சம்பவம் நிகழ்ந்ததற்குமுன் தினத்தன்றுவரை சந்தோஷமாகவே இருந்து வந்தது. தான் மிக்க தாழ்மையுடன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தும், அற்பகாரணத்திற்காக ஒரே நாளில் இருமுறைகளில் தனது மாமியிடமிருந்து பெற்ற குட்டு, இடி, அடி முதலிய மூன்றையும் எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணாகியவளாய், எதிர்காலத்தில் என்னென்ன கொடுமைகட்கு உட்படக் கலங்கி நிற்கவேண்டி வருமோ என்பதைச் சிந்தித்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருந்தாள். அன்றிரவு அவள் சாப்பிடவேயில்லை; அவளது மாமியும் அவளைச் சிறிதும் கவனிக்கவுமில்லை.

அன்றிரவு வீட்டு வேலைகளையெல்லாம் விரைவில் செய்துமுடித்துவிட்ட கமலம், இரவு எட்டு மணிக்கே தனது அறைக்குட்சென்று தரையின் மேல் படுத்துக்கொண்டு நீண்ட ஆலோசனையில் ஆழ்ந்தாள்:—

"அவனன்றி ஓரணுவும் அசையாது"—எனும் முதுமொழியும் பொய்யாமோ! எனது மாமி—எனது இன்னுயிரினும் இனிய என்னாதனை ஈன்றெடுத்த எனது மாமி—இவ்வாறு நடந்துகொண்டாலுமே எனக்குப் பல வருடங்கள் மூத்தவரன்றோ! இதுவரை அம்மாமியால் எவ்வித மனக்கலக்கமும் அடையாது வாழ்ந்துவந்த எனக்கு, இனியும் அத்தகைய வாழ்வை அளித்தருள இறைவனுக்கே திருவுள்ளம் இல்லாமற் போய்விட்டால், பேதைப்



பெண்ணாகிய என்னால் என்ன செய்ய இயலும்? அவரது கருத்திற்கிணங்க நடந்துகொண்டுவர என்னால் இயன்றவரை முயன்று வந்தாலும், என்பால் எனது மாமிக்கு உண்மை அன்பென்பது என்றுமே இல்லாமற் போய்விட்டால், அதற்கு யான் என்ன செய்யக்கூடும்? அவரது கொடுமைகள் பலவற்றிற்கும் உட்பட்டு உள்ளம் கலங்கி நிற்கவே, என் தலையில் பிரமன் எழுதியனுப்பியிருப்பின்—அவற்றினின்றும் விடுதலைபெற ஏங்கி நிற்பதால் என்ன பயன்? 'அவரவர் விதிவழி அடைய நின்றனரே!'—என்றார் சடகோபர். என் தலைவிதியை நோவதின்றி, எனது இன்னுயிர்க் காதலனை ஈன்றெடுத்துப் பாலூட்டிப் பரிந்து வளர்த்துவந்த என் மாமியை எதிர்த்து நிற்பேனாயின், எனது ஆருயிர்த் தலைவனையன்றோ ஆறாத்துயரில் ஆழ்த்தி நிற்பவளாவேன்! சிறந்த கல்வியறிவின்மையாலோ செருக்கினாலோ அதிகாரத் திமிரினாலோ எனது மாமி எனக்கு இழைக்கும் கொடுமைகளைப் பொறுமையுடன் சகித்து நடப்பதை விட்டு விட்டு, யானும் எதிரம்பு கோத்துச் சொற்சண்டை செய்து நிற்பேனாயின் எனது பெற்றோர் எனக்குப் புகட்டிவந்த சீரிய கல்வியால் யான் பெற்ற பயன் யாதாகும்? "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண—நன்னயம் செய்துவிடல்"—எனும் பொய்யா மொழியைப் படித்திருந்தும், செயலளவில் அம் மெய்ம் மொழியைக் கடைபிடித்து நில்லேனாயின் யான் படித்த படிப்பனைத்தும் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' எனும் முதுமொழிக்கு இணங்கியதாகவே முடியுமன்றோ!

இவ்வாறு அவள் நெடிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த வேளையிலே, அதுவரையில் கலாசாலைப் பாடங்களை படித்துக் கொண்டிருந்த அவளது கணவனான கோபாலன், உறக்க மயக்கம் உற்றதன் பயனாகத் தனது பள்ளியறையை நாடிவந்து சந்தடி செய்யாது உள் நுழைந்து தரையில் குப்புறப் படுத்துக் கிடந்த தனது காதலியைக் கண்டு திடுக்கிட்டு நின்றான். கதவை உட்பக்கம் தாழிட்டுவிட்ட பின்னர், தனது ஆருயிர்க் காதலியை ஆர்வத்தோடும் வாரியெடுத்து முத்தமிடப் போனவன், அவளது முகம் இருந்த நிலையைக் கண்டு பெரிதும் திடுக்கிட்டவனாய் அவளைக் கட்டிலின் மீது அமரச் செய்து தானும் அவளருகில் அமர்ந்துகொண்டான்.



"கேவலம் புத்தகப் பூச்சியாய்ப் பொழுது முழுவதும் பல நூல்களையும் படித்தும் சிந்தித்தும் அகம் குழம்பிக் கிடக்கும் எனக்கு, தெய்விகக் காதலின் பத்தைச் செவ்விதில் ஊட்டும் நினது செந்தாமரையை ஒத்த செவ்விய திருமுகம், வழக்கம்போல் குறுநகையோடுகூடி மலர்ந்திராமல் உரைப்பருங் கவலையால் பெரிதும் வாடிச் சோர்ந்து காணப்படுவதன் காரணம் என்னவோ? என்னைப் போல் அமெரிக்கா தேசத்தின் ஆற்றோரங்களின் வளத்தையும் இங்கிலாந்தில் ஆட்சிசெலுத்திய அரசர்களின் சரித்திரங்களையும் படித்துப் படித்து மூளையில் ஏற்றிக்கொள்ள முயன்று கொண்டிருக்கும் ஒரு மாணவனது கல்வியறிவைப்

போலின்றி, இல்வாழ்வில் பெரிதும் பயன்படும் விஷயங்களையும் உயிர்நலத்திற்கு உறுதுணை செய்யும் உயரிய வேதாந்த விஷயங்களையுமே நீ கற்றிருப்பவனாதலின், 'நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்—பெருமை உடைய' இவ்வுலகின் இயல்பையும் மண்ணுலக மாந்தர் மனத்தில் மலிந்து கிடக்கும் செருக்கு, பகைமை, பொறாமை முதலிய தீய குணங்களையும் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்ததன் பயனாக அடைந்த கவலையோ இது?"—என்று கோபாலன் தனது காதலியை நோக்கி வினவினன்.

அவனது அன்பு ததும்பும் அம்மொழிகளைக் கேட்டவளவில், தனது மனச் சஞ்சலம் முழுவதையும் மாற்றிக்கொண்டு வழக்கம்போல் நகைமுகத்துடன் அவனுடன் உரையாட முயன்ற கமலத்திற்கு, இதன்முன் என்றும் இல்லாவாறு தனது மாமி பகலில் அளித்த குட்டு, இடி, அடி எனும் மூப்பரிசுகளும் நினைவுக்கு வரவே, அகத்துயரை முற்றும் அகற்றிவிடும் திறமை அச்சமயத்தில் வாய்க்காது போய்விட்டது. தனது அன்னையின் வீட்டில் தான் செல்வமாக வளர்க்கப்பட்டு வந்ததையும் அன்று தான் தனது மாமியால் நடத்தப்பட்ட விதத்தையும் நினைத்துப் பார்த்த மறுகணமே, அவளது கண்களில் கலங்கிநின்ற நீர்த்துளிகளுள் சில அவளையும் அறியாது கன்னங்களின் மேல் இழிந்து வழிந்து விழுந்தன. தனது அகத்துயரை ஒருவாறு கொஞ்சம் அடக்கிக்கொண்ட அவள், தனது கணவனை நோக்கி "நீண்டகாலம் பல நூல்களையும் படித்துப் படித்துப் பற்பல பொருள்களையும் மூளையில் ஏற்றிக்கொள்வோர், பிற்காலத்தில் தாம் கற்றவைகளுள் சிலவற்றையேனும் செயலளவில் கடைப்பிடித்து நடந்துகொள்ளக்கூடிய உள்ள உறுதி உடையவர்களாக இல்லாவிட்டால், அவர்கள் தாம் கற்ற கல்வியால் பெற்ற பயனாவது என்னவோ?"—என வினவினள்.

அவளது கேள்வி கோபாலன் அகத்தில் சுருக்கென்று தைத்தது. தன்னைக் குறித்தே அவ்வினாவை எழுப்பினளோ எனவும் ஐயமுற்றான். "ஏன்? சற்றும் தயங்காது அவர்களைக் கற்றறிமோழைகள் என்றே கூறுவேன். உயர் பொருள்களை ஓதி உணர்ந்தும் அவற்றை அனுஷ்டானத்தில் கொண்டுவரப் போதிய மன உறுதி இல்லாதவர்களை விட, கல்வி வாசமே வீசப்பெறாத கயவர்களே மிக நல்லவர்கள் என்னலாம்"—என்று அவன் பதிலுரைத்தான்.

"இல்வாழ்க்கையிலே சதி பதிகளது மன ஒற்றுமை கலங்கா உறுதி உடையதாக இருப்பின், ஏனையோர் எவ்வளவு கொடுமைகள் செய்தாலும் அதனால் அவர்களது இன்பத்திற்கு ஏதேனும் பங்கம் நேரிடக்கூடுமோ?"—என்றாள் அவள்.

"கேவலம் இளமை நிலையாத உடம்போடு கலந்த பாசமாக இல்லாது, உயிரோடு கலந்த உண்மை அன்பு என்னும் உயரிய காதலாக இருப்பின், அதை உடைய காதலர்களது குலைக்கமுடியாத அன்புக்கு பங்கம் விளைவதும் உண்டோ? ஆனால், தனது காதலிக்கு ஏற்படும் துன்பம் தன்னால் நீக்கக்கூடியதாக இருப்பின், அதை நீக்காது வாளா பார்த்துக்கொண்டிருப்பவன், கேவலம் ஆண்மையற்ற பேடியையே ஒப்பன்; அவன் ஒரு பெரும் கோழையே ஆவன். இந்நேரத்தில் இந்நினைவு உன் அகத்தில் தோன்றியதற்கு காரணம்

வேண்டாப் பெண்சாதியின் கைபட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்.



என்னவோ? அது யான் அறிந்துகொள்ளக்கூடாத இரகசியமாக இருக்கலாமோ?"

'தாங்கள் அறியாவண்ணம் யான் ஒளித்துவைக்கும் இரகசியமும் ஒன்றுளதோ! ஆயினும், இப்பொழுது அதனை விவரிப்பது இருவருக்கும் நலம் தரக்கூடியதாக இருக்குமென்று எண்ணுகின்றேனில்லை. தாங்களே இன்னும் சிறிது காலத்திற்குள் அதை உணர்ந்துகொள்வீர்கள். அதுவரை கருணை கூர்ந்து பொறுத்துக் கொண்டிருங்கள். இச்சமயம் அடியேனைத் தாங்கள் மன்னித்தருளவே வேண்டும்!" —என்று கூறி, அவனைத் தனது அன்புததும்பும் அழகியகடைக் கண்களால் ஆர்வத்தோடு நோக்கினள்.........பின் இருவரும் படுத்து உறங்கிவிட்டனர்.

* * * *

மேற்குறித்த சம்பவம் நடைபெற்று ஆறுமாதங்கள் கழிந்தன. சுப்புலட்சுமியின் கொடுமை வளர்பிறையே போல் அதிகப்பட்டுக்கொண்டு வந்ததேயன்றிக் குறைந்தபாடில்லை; அதுவரையில் அவளது கொடுமையைக் குறித்து கமலம் தன் கணவனிடம் ஒரு மொழியும் முறையிட்டுக் கொண்டவளுமில்லை. தனது ஆருயிர்க் காதலி, வியக்கத்தக்க பொறுமையினால் தனது அன்னையின் கொடுமைகளை ஆறுமாதகாலமாகச் சகித்துக்கொண்டுவந்திருப்பதை உணர்ந்துகொள்ளும்சந்தர்ப்பங்கள் செலவும், கோபாலனுக்கு வாய்க்காமலும் போய்விடவில்லை. அவ்வாறு வாய்த்தும்—அவனால் எப்பரிகாரமும் செய்ய முடியவுமில்லை. ஒரு வார்த்தையேனும் தன் அன்னையை எதிர்த்துப்பேச அவனுக்கு தைரியம் உண்டோ?

'பொறுமைக்கும் ஓரளவு உண்டன்றோ!'—ஒருநாள் அவன் தன் அன்னையை நோக்கி, "தள்ளாத காலத்தில் தங்களுக்கு ஏனம்மா இவ்வளவு கவலை? நமது அகத்தில் ஒரு வேலைக்காரியை வைத்துக்கொள்ளக்கூடிய வருமானம், சுவாமி கிருபையால் எனக்கு வந்துகொண்டிருக்கிறது. பாவம்! கமலமும் கொஞ்சம் நிம்மதியாய் காலம் கழிக்கலாமல்லவா? எனக்கு ஒரு வேலைக்காரியை பிடித்திருக்கின்றது. நாளைக்கு அழைத்து வரட்டுமா?"—என்று பயமாகவும் நயமாகவும் பகர்ந்தான்.

அவ்வுரைகள் சுப்புலட்சுமியின் செவிகளில் விழுந்தனவோ இல்லையோ, ஆவேசம் கொண்டவன்போல் எழுந்துநின்ற அவள், "நோக்குத் தாண்டா ஊரிலில்லா ஆம்படையான் வந்து வாச்சா! இனிமே, அவளை நாக்காலியில் ஒக்காத்திட்டு நீ காலடிலே ஒக்காந்துண்டு சேவகம் பண்ண வேண்டியதுதான் குறச்சல்! எங்க காலத்திலெல்லாம் இல்லாத ஆத்துவேலை, உன் கண்ணாட்டி இந்த ஆத்திலே கால் வச்சதும் ஒச்ச ஒழிவில்லாததாய்ப் பெருத்துப் போச்சு போலிருக்கு! அந்த சின்னஞ்சிறுக்கி—நீலிக்கண்ணி—சுவடிசுவடியா படிச்சிக் கிழிச்சுட்டவள்.

வெளியே ஒழுங்கு, உள்ளே ஒக்காளம்.

"மாய்மாலக்காரி மருமகளே! கோழிக் கறிக்குப் பதம்பாரடி!
கொக்கோ என்குது! கொத்த வருகுது! அத்தே நான் மாட்டேன்!"



என்று சொல்லுகிற வசனத்தைப் போல நீலிவேஷம் போடறதிலே நன்னா தேர்ந்த சித்திரக்குள்ளி உன் காதிலே தலையணை மந்திரம் ஓதிட்டாள் போலிருக்கு! ஏண்டா! உன் கட்டையிலே ரோஷமில்லே! வெக்கமில்லே! மானமில்லே! நீ ஒரு ஆண்பிள்ளை இல்லே! உன் புத்தியே எங்கே பறிகொடுத் துட்டே? இத்தன வயசுக்கு மேலே—சாகப்போர காலத்திலே ஏதோ நாராயணா கோவிந்தான்னு இருக்கிற காலத்தைக் கழித்துட்டுப் போறதுக்கு இல்லாமே, வேலைக்காரியை வச்சிண்டு எத்தையும் தொடறதுக்குக்கூட யோக்யதை இல்லாமே, பட்டினி கிடந்து சாகவேண்டிய நிலைமை எனக்கு வந்துடலே! உனக்கிஷ்ட மிருந்தால், இந்த க்ஷணமே உன் கண்ணான ஆம்படையாளோடே நீ மகாராஜனா வேறே உலை வைச்சுக்கோ. ஆத்துப் பண்டங்களையெல்லாம் என் கண்ணெதிரே, வேலைக்காரி தாறுமாறா பாழாக்கிண்டிருப்பதை பாத்துண்டுருக்க எனக் கென்னமோ மனம் வராது. வேறே குடுத்தனம் பண்ணப் போயிட்டா வேலைக்காரி கூட வேண்டியதில்லே. நீயே அவளுக்கு தாஸாதிதாஸனா இருந்து, மனம்போல் ஊழியம் செய்யலாமே! உங்களை கேக்காத்துக்கு மேலே ஆர் இருக்கப்போரா?"—என்று ஆத்திரத்துடன் பேசினாள். அவற்றைக்கேட்ட கோபாலன், எதிருரையாட இயலாது மௌனமாக எழுந்து சென்றான்.

ஒருநாள் கமலம், தனது தாயிடமிருந்து கிடைத்த கடிதத்திற்கு பதில் எழுதிக்கொண்டிருந்தாள். அவ்விடத்தில் அச்சமயத்தில் ஏதோ ஒரு வேலையாக வந்து சேர்ந்த அவளது மாமி,—"ஏண்டி! சின்னஞ் சிறுக்கியானாலும் சித்திரக் குள்ளியா இருக்கியே! எந்த கள்ளப் புருஷனுக்கடி இந்தக் கடுதாசி எழுதரே? இதுக்குத்தான் நீ சுவடி சுவடியா படிச்சுக் கிழிச்சுதோ? குடுத்தனம் பண்ரவாளுக்கு புருஷனிருக்க வேறு யாருக்கு கடிதாசி எழுதக் கிடக்கிறது?"—என்று சொல்லிக்கொண்டே அவளை நெருங்கி, கையில் வைத்துக்கொண்டிருந்த பென்ஸிலையும் காகிதத்தையும் வாங்கிக் கிழித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

***

தினந்தோறும் வீட்டிலுள்ள எல்லோருக்கும் பரிமாறிவிட்டுக் கடைசியாக—பற்று அலம்புவதற்கு முன்பாக—சட்டியில் என்ன மிகுந்திருக்குமோ அதுவே கமலத்தின் ஆகாரமாக இருந்து வந்தது. குழம்போ ரசமோ மிகுந்தது எவ்வளவு கொஞ்சமாயிருந்தாலும், அதில் தன்னிஷ்டப்படி தாராளமாகத் தண்ணீர் கலந்துகொண்டு உண்ண அவளுக்குப் பூரண சுதந்தரம்

பாவம் ஒருபக்கம் பழி ஒருபக்கம்.



உண்டு. அவ்விதம் காலம் கழித்துவந்த அவள், நாளுக்குநாள் பலஹீனம் அடைந்து வந்தாள் என்பதைக் கூறவும் வேண்டுமோ? எனினும், அவளைப் பொறுத்தமட்டில் அதைப்பற்றி அவளுக்குக் கொஞ்சமும் கவலையே இல்லை. ஏன்? தனது இன்னுயிர் நாதனுக்கு, எவ்விதக் குறைவும் ஏற்படாதிருந்தால் அதுவே தனக்குப் போதுமென்பது அவளது எண்ணம். அத்தகைய அவளது நிலையைக்கண்டு, உணவு விஷயத்தில் தகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ளுமாறு கோபாலன் தனது காதலியைச் சிலமுறை பெரிதும் கடிந்து கொண்டதும் உண்டுதான். அவன் கடிந்துகொண்டு ஆவது என்னவோ? சுப்பியின் மனம் இரங்கும்வரையில், கமலத்தின் கஷ்டம் குறையப்போவது ஏது? அவள் அகம் இரங்குவதும் எந்நாளோ?

ஒரு நாள் கோபாலன் மாலையில் கல்லூரி விட்டவுடன் கடற்கரையை நாடிச் சென்றான். இறைவனது அருட் குணங்கள் எல்லையின்றிப் பரந்து விரிந்திருப்பதே போல், எங்கும் பரந்து அமைந்து மனத்திற்கு மகிழ்வூட்டும் நீலநிற வானமும்; இன்பங்களும் துன்பங்களும் மாறி மாறித் தோன்றிக் கொண்டே இருத்தல்போல், பற்பல நிறங்களும் வடிவங்களும் உடையனவாக மாறி மாறிச் சென்றுகொண்டிருக்கும் அற்புதமுடைய அழகிய மேகங்களும்; மோதி எழுந்து விழுந்து தவழ்ந்து வந்து கரையினைக் கரைத்துச் செல்லும் அலைகளும் அவனது கருத்தைக் கவர்ந்து களிப்பூட்டவும், கடந்த தொலைவை உணராதவனாய் நடந்து சென்ற அவன் ஏகாந்தமாக இருந்ததொரு



இடத்தில் அமர்ந்து கடற் காட்சியைக் கண்டு களிப்புற்றிருந்தான். அவ்வாறு களிப்பில் கழிந்த க்ஷணங்கள் சிலவற்றின் பின், அவனது அகத்தில் வீட்டு நினைவுகள் தோன்றின.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்—இல்லவள் மாணாக் கடை?" என்ற பொய்யா மொழி, என் விஷயத்தில் மட்டும் பொய்ப்படுவதோ? மாதங்கள் ஆறு கழிந்தும் மனையில் பழைய அமைதியான இன்ப வாழ்வைக் காணோமே! அதிகாரத் திமிரும் செல்வாக்கில் செருக்கும் ஊர்வம்பில் பேரன்பும் உடைய எனது அன்னையால், தினந்தோறும் பலவகைத்

பிறர்பொருளை இச்சிப்பான் தன்பொருளை இழப்பான்.

துன்பங்கட்கும் உட்பட்டு வந்திருந்தும் அதுபற்றி என்னிடம் ஒருநாளும் ஒரு மொழியும் முறையிட்டுக் கொள்ளா திருந்துவரும் பொறையில் தலைசிறந்த காதற்கண்மணி எனக்குப் பத்தினியாக—இல்லை—பத்தினிக் கடவுளாக இறைவன் அமைத்திருந்தும், அட்பேதைப் பெண் பட்டுவரும் அல்லலை அகற்ற வகை தெரியாது கலங்கிவரும் யானும் ஒரு ஆண்பிள்ளையோ? பெண்மனம் புண்பட்டு புழுங்கி வந்தால், அது வீணுமோ? அது அவளது அகத்துயரை அகற்ற வேண்டிய கடமை உடைய என்னையன்றோ பாதித்து நிற்கும்! ஓ! உணர்ந்தேன்! அன்று அவள் பள்ளியறையில், என்னை வினவிய வினாக்களின் பொருளை இன்றே உணர்ந்தேன்!

ஆம்! பெண்களின் முன்னேற்றத்தை வலியுறுத்தும் எண்ணிறந்த நூல்களை நீண்டகாலமாக படித்துப் படித்து என் மூளையில் ஏற்றிக்கொண்டு வந்திருந்தும், இன்று என் சொந்த மனைவி—ஆருயிர்க் காதலி—அதிகாரத் திமிரும் செருக்குமே மிகுந்த ஒருத்தியின் கொடுமைகட்குட்பட்டுப் பெரிதும் பரிதபிக்கத் தக்க வண்ணம் வருந்தி நிற்பதைத் தடுக்கவே எனக்கு ஆற்றல் இல்லையே! யான் கற்றவை அனைத்தும் என்னாயின?" ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது"—என்பதாகவன்றோ முடிந்தது என் கதை! எனது ஆங்கிலப் படிப்பின் பயனோ இது? என் காதலி ஓதி உணர்ந்த—இந்நாட்டு நாகரிகத்திற்கு இயைந்த—சீரிய கல்வியறிவே யன்றோ அவளை இதுவரை இத்துணைப் பொறுமையர்கச் சகித்துக்கொள்ளச் செய்து வந்திருக்கின்றது! அயல்நாட்டுக் கல்விமுறையின் புன்மையையும் இந்நாட்டுக் கல்விமுறையின் ஏற்றத்தையும் இன்றன்றோ உணர்ந்தேன்!

இதுவரை இல்லாமல், இனிமேல் எனது தாயை—அவளது அந்திய காலத்தில்—எதிர்த்துக்கொண்டு நிற்பேனாயின், அவள் சிந்தை நொந்து சினந்து எவ்வெவ்வாறு எங்கெங்கெல்லாம் என்னைப் பழிதூற்றித் திரிவாளோ? அதற்கு அஞ்சி எனது ஆருயிர்க்காதலி, இடையறாத் துன்பங்கட்கு உட்பட்டு இரங்கத்தக்கவாறு கலங்கிநிற்பதை இன்னும் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதோ? அன்னையின் அறியாமைக்கு இரங்குவதோ? காதலியின் அருந்துயர்க்கு இரங்குவதோ? "யான் எவருக்காகப் பரிவதோ?"


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.


மனதிலிருக்கும் ரகசியம் மதிகேடனுக்கு வாக்கிலே.




## உலகத்தினியல்பு.

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

"நாம் வசித்தற் கிடமாகவுள்ள இவ்வுலகம் எத்தகையது? நிலைபேறுடையதா? அன்று?" என்று ஆராயின் அழியுந் தன்மையதே யென்பது ஐயமற விளங்கும். எது எது தோற்றமுடையது அது அது அழிந்தே தீரவேண்டும் என்பது நியதி. "பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்" என்கிறார் பட்டினத்தடிகளும். ஆகவே, இவ்வுலகம் எப்பொழுதேனும் அழிவதே என்பது திண்ணமாம். அங்ஙனம் அழிவதென்றே வைத்துக் கொள்ளுவோம். அவ் வழிவிற்கு முன்னதாகிய நிகழ் காலத்திலேனும் உள்ளதுதானே. ஒரு குடம் தோன்றுதற்குமுன் இருந்ததில்லை. அழிவிற்குப் பின்னும் இராது. அத் தோற்ற வழிவுகளுக் கிடையில் அது உள்ள பொருளேயன்றோ? அவ்வாறே இவ்வுலகும் தோற்ற அழிவுகளுக் கிடைப்பட்ட காலத்து உள்ளது தானே என்றாராயுமிடத்து, அக் காலத்தும் அது உள்ள பொருளன்று; இல்பொருளே யென்று ஆன்றோர் வாக்காலறியக் கிடக்கின்றது. இவ் வுலகத்தைப் பொய்—மித்தை—இந்திரஜாலம்—சொப்பன வுலகம் என வான்றோர் அருளி யிருக்கின்றனர். இதற்குப் பிரமாணமாக வுள்ளவற்றுட் சில பின்வருமாறு,

"கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நாகர் கனவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்சமெல்லாம் பொய்யே." (கைவல்லியம்)

"உலகெலாம் அலகைத் தேராம்." (சிவஞானசித்தி)

"இந்திரசா லங்கனவு கானனீ ரெனவுலக மெமக்குத் தோன்ற"

"ஜகம் பொய்யெனத் தம்பட்ட மடியே."

"உண்டுபோ லின்றும் உலகைத் திரமென வுட்கொண்டு
நான்பெற்ற பலன்கூறாய்." (தாயுமானர்)

"சத்தியமே சத்தியமே சகமே யில்லை." (ரிபுகீதை)

மனமிருந்தால் மலையும் சாயும்.

"ஜகத்தை இந்திர ஜாலமாய்ப் பார்ப்போன்" (சாமவேதம்).

இவ்வாறு கூறுவதன் கருத்து யாது? அழிந்துபோகு மியல்பின தென்னுங் கருத்தை இங்ஙனம் கூறினரோவெனின்: இன்று. மூக்காலத்து மில்லை யென்பதே அவர்தம் கருத் தென்பது தெளிவு. இஃதெவ்வாறு பொருந்தும்? இவ்வுலகம் பிரத்தியக்ஷமாக யாவராலும் பார்க்கப்படுகின்ற தன்றே. இதனை அசத்தியம் (பொய்) எனக் கூறுவ தெப்படி?

உலகம் சத்தியமெனக் கூறுவோர் யாவர்? அசத்தியமெனக் கூறுவோர் யாவர்? சாமானிய ஜனங்கள் யாவரும் சத்தியமெனச் சாற்றுகின்றனர். வேத சாஸ்திரங்களும் அவற்றைக் கற்றுணர்ந்த பெரியோரும் அசத்திய மென் றறை கின்றனர். இவ் விருவருள் எவர் வார்த்தை சிறந்தது? யாவராலும் சத்திய மானதெனப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கப்படுகின்ற வொன்றைப் பொய்—அசத்தியமென்று இவர்கள் கூறுவது ஏன்? ஆனால் சில பொருள்கள் அசத்தியமாயினும் சத்தியம்போல் காணப்படுவது முண்டு. அத்தகைய பொருள்களைச் சத்திய மெனவே பாமரர் நம்பிவிடுவர். பூமி தட்டை வடிவமாகக் காணப்படுகின்றது. சூரியன் மிகச் சிறியதாகக் காணப்படுகின்றது. பாமரர் அவற்றைத் தட்டையாகவும் சிறியதாகவுமே யிருக்கின்றன வென்று நம்பி யிருப்பார்கள். ஆனால் நூல்களும் பெரியோரும் பூமி உருண்டை வடிவினதெனவும் சூரியன் பூமியைவிடப் பெரியதென்றும் பேசியிருக்கின்றனர். இவற்றுள் பெரியோர் வார்த்தையே நம்பத் தக்கதாம். "பிரத்தியட்சமாகச் சத்தியம் போலக் காணப்படுகின்றவைகளை யெல்லாம் சத்தியமென் றெண்ணி விடுவது விவேகிகள் செய்கை யாகாது; அசத்தியப் பொருள்கள் சத்தியம்போல் காணப்படுவதுமுண்டு. அசத்தியத்தை யசத்தியமாகவும் சத்தியத்தைச் சத்தியமாகவும் காண்பதே விவேகமாம். இதற்கு மாறாகக் காண்பது மருளாம்" என்று தெய்வப் புலவர்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

"பொரு ளல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு."

என்னும் அமுத மொழிகளால் அருளிப்போந்தார். இனி, இதனுண்மையைச் சிறி தாராய்வோம்.

பொய் நான்கு வகைப்படும். மலடி மகனும் பொய்; கயிற்றரவும் பொய்; கானல் நீரும் பொய்; கனவுலகும் பொய். இவற்றுள் உலகம் பொய் எனப்படுவது எந்த வகையில் எனின்: உலகம் சத்தியமென் றெண்ணுவாரை நோக்கி அசத்திய மெனக் கூறப்படினும் முழுதும் இல்லாததன்று; ஆகலின் மலடி மகன் ஆகாயத் தாமரை இவற்றைப் போன்றதெனக் கூறலியையாது. கயிற்றரவு போன்றதெனக் கூறலமையுமோ வெனின், பொய்யாகக் காணப்படுகின்ற தென்பதுவரையில் கயிற்றரவு திருஷ்டாந்தம் பொருந்து மாயினும், கயிற்றரவு பொய்யெனக் கண்டபின் காணப்படாதது போலின்றி, உலகம் பொய்யெனக் கண்டவிடத்தும் காணப்படுதலின் கயிற்றரவுபோலப் பொய்

வைவார்க்கு இன்பம் இல்லை, பொறுத்தார்க்குத் துன்பம் இல்லை.



யென்பதும் கூடாது. கானற் சலம்போலப் பொய் யெனலாமோவெனின், கயிற்றரவு போலின்றிப் பொய்யெனக் கண்டவிடத்தும் தோற்றுகின்ற தென்பதற்குப் பேய்த்தேர் திருஷ்டாந்தம் பொருந்துவ தெனினும், உலகம், கானல் நீர் அருந்துதற் குபயோகப்படாம லிருப்பது போலின்றி, அனுபவிக்கத் தக்கதா யிருத்தலின் கானல்நீர் திருஷ்டாந்தமும் சரியன்று. இனி இறுதியாக வுள்ளது சொப்பன வுலகமே. சாக்கிர வுலகமும் அதைப் போன்றதோ? வெனின்; ஆம். என்னை? சொப்பன வலகம் பொய்யோவெனின் அன்று. பொய்யெனின் மலடிமகன் போலத் தோற்றாதிருத்தல் வேண்டும். ஆதலின் முற்றும் பொய் (அசத்து) எனக்கூறுதற்கு மிடமில்லை. மெய்யோவெனின்; அஃதுமன்று. மெய்யானால் மூக்காலத்து மிருத்தல்வேண்டும். இல்லாமையின் மெய் (சத்து) எனற்கு மிடமில்லை, மெய் பொய் (சத சத்து) எனவிரண்டினையும் சேர்த்துச் சொல்லலாமோ வெனின்: ஒன்றற் கொன்று நேர் விரோதமான இரண்டு தருமங்கள் ஒரு பொருளினிடத்திரா வாகலின் அவ்வாறு கூறுதலு மமையாது. ஆகவே, இன்னதன்மைத் தெனக் கணிக்கப் படாதது எனவே கூறல்வேண்டும். இதையே நூல்கள் சத சத்விலக்ஷண அநிர்வசனீய மெனச் செப்புகின்றன.

சொப்பன வுலகிற்குக் காரணமாயிருப்பது மனமாம். அம்மனத்தின்கண் சொப்பன வுலகைத் தோற்றுவிக்கும் வன்மை வாய்ந்த ஓர் சக்தி, குடத்தைத் தோற்றுவிக்கும் சக்தி மண்ணினிடத்தும், அரவைத் தோற்றுவிக்கும் சக்தி கயிற்றினிடத்தும் இருப்பதுபோல இருக்கின்றது. அது மனத்திற்கு வேறானதன்று. ஆனால் மனமுமன்று. அது பின்னசத்தி, அவாந்தர சத்தி என்று மறையப்படும். ஏனெனில், சொப்பன வுலகிற் காணப்படும் ஜீவர்களுக்குளவாகும் இன்ப துன்பங்கள் மனத்தைத் தாக்குவதில்லை யாகலின். மேலும், அது சத்துமல்ல; அசத்துமல்ல; சதசத்துமல்ல; அநிர்வசனீயம் (இன்ன தன்மையதென்று இயம்ப முடியாதது). அங்ஙனமாயினும் அதை மனத்திலடக்கிச் சொப்பன வுலகிற்கு மனம் முதற் காரணமெனச் சொல்லவிடமாகின்றதோடு, சொப்பன வுலகு சத்துப் பொருளாயிராமையின் சொப்பன வுலகிற்கு மனம் விவர்த்தோபாதான காரணமென்றும் சொல்ல விடமாகின்றது. அதுபோல, பிரமத்தி (கடவுளி)னிடத்தும் ஓர் சத்தியிருக்கிறது. அது பிரமத்திற்கு வேறுமல்ல; ஆனால் பிரஹ்மமுமல்ல. அது பின்ன சத்தி. மாயா சத்தி யெனவும் கூறப்படுகின்றது. அச்சத்தியினின்றே இந்த (சாக்கிர உலகமுண்டாயிற்று, இச்சாக்கிர வலகிற் காணப்படும் ஜீவர்களுக்குண்டாகும் இன்ப துன்பங்கள் பிரஹ்மத்தைச் சாராமையின் பின்னசத்தி யெனப்படுகின்றது. ஆயினும் அச்சத்தி பிரஹ்மத்தினும் வேறாயிராமையின் அதனைப் பிரஹ்மத்திலடக்கிச் சாக்கிரவுலகிற்குப் பிரஹ்மம் முதற்காரணமென்று கூற இடமாகின்றதோடு, சாக்கிரவுலகம் சத்துப் பொருளாயிராமையின் இவ்வுலகிற்கு பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணமா மெனவும் சொல்வதற் கிடமாகின்றது. ஆகவே, மனத்தின்கணுள்ள இன்ன தன்மையானதென வியம்ப வொண்ணாத சத்தியின் விரிவே சொப்பன வுலகாதல் போல, பிரஹ்மத்தின்கணுள்ள இன்ன தன்மையானதென வியம்ப வொண்ணாத சத்தியின் விரிவே சாக்கிரவுலகமாம் எனப் பெரியோர் அனுபவவாயிலாய்

வாய் கரும்பு, கை இரும்பு.

அறிந்து கூறியிருக்கின்றமையின், இச்சாக்கிரவுலகு சொப்பன வுலகுபோன்றதே என்பது பெறப்படுகின்றது. இதனால் பெரியோர் இவ்வுலகத்தைச் சத்தென்றும் அசத்தென்றும் சதசத்தென்றும் கூறாது இன்னதன்மையினதெனக் கூறற்கியலாததெனக் கூறியுள்ளார் என்பதும் மலடி மகன்போலப் பொய்யெனக் கூறவில்லை என்பதும் போதரும்.

சத்துமல்லாது அசத்துமல்லாது சதசத்துமல்லாது இருக்கு மொன்றை அசத்தென்று (பொய்யென்று) ஏன் சொல்லல் வேண்டும்? சத்து (மெய்) என்றுதான் சொல்லலாகாதோ? வெனின்: அங்ஙனம் கூறுதற்கு நியாயமில்லையே, திருஷ்டாந்தமாகக் கானல் நீரைப் பார்ப்போம்: கானல் நீர் முதலில் (விசாரியாத காலத்து) சத்தாகவுள்ளது, ஆராய்ச்சி செய்த பின் இலதாயினமையின் அசத்தாயிற்று. இந்தச் சத்து அசத்து என்னுமிரண்டனுள் பேய்த்தேர் (கானல் நீர்) சத்தின்பாற்படுமா? அசத்தின்பாற்படுமா? அசத்தின்பாற்படுமென்றே சொல்லவேண்டு மல்லவா? அதுபோலவே, உலகையும் அசத்தின்பாற் படுத்துவதே ஏற்புடைத்தா மென்க. நிற்க,

உலகம் காரணமா காரியமா? என்றாராயுமிடத்து காரணமன்று; காரியமே என்பது புலனும். "காரண மென்பது காரியத்திற்கு நியதமாய் (இன்றியமையாததாய்) முன்னிற்பதாம். காரியமென்பது முன்னின்மைக்கு எதிர்மறையாம்" என்பது காரண காரியங்களினிலக்கணமாம். உலகம் காரியமாதலின் காரியத்தினிலக்கணம் இதனிடத்து மிருத்தல் வேண்டும். திருட்டாந்தமாகக் குடத்தைப் பார்ப்போம். குடம் காரியம்; அதற்குக் காரணம் மண். குடம் மண் என்னு மிவ்விரண்டில் இருப்பது குடமா? மண்ணா? எனின்: மண்ணென்றே சொல்லவேண்டும்; ஆனால் குடமில்லையோ வெனின் சொன்மாத்திரமாகவே—வியாவகாரிக சத்தையாகவே இருக்கிறது. உண்மையில்—பாரமார்த்திக சத்தாக—குடமெனுமோர் பொருளில்லை யெனவே சொல்லவேண்டும். குடமெனும் பெயர்மாத்திர மிருக்கிறதே யன்றி இருக்கும் பொருள் மண்தானே. தோற்றம் பொருளன்றே. ஆதலால் காரியம் சொன்மாத்திரமும் தோற்றல் மாத்திரமுமா யிருப்பதா மென்பதும் பொருளாயிருப்பது காரணமே யென்பதும் தெளிவாகின்றது. ஆனால், குடத்தைப் பொய்யெனலாமோ வெனின்: மலடி மகன்போலப் பொய்யு மன்று; மெய்யோவெனின் மண்போல முக்காலத்தும் இருத்தலின்மையின் மெய்யுமன்று. விநோத விலக்கண முடைமையின் பொய் மெய்யுமன்று. ஆனால் என்ன வென்று சொல்வது? சதசத் விலக்ஷணமென்றும் அநிர்வசனீயம் என்றுந்தான் சொல்லவேண்டும். இதனை வியாவகாரிக சத்தென்றுங் கூறுவர். இந்தத் திருஷ்டாந்தத்தின்படி தாஷ்டாந்தமாகிய உலகையும் காரணமாயிருத்தலின் வியாவகாரிக சத்து அல்லது சத்துப்போலி யென்பர் ஆன்றோர். இனி மற்றொரு திருஷ்டாந்தமும் பார்ப்போம்.

நமது உடலை எடுத்துக்கொள்வோம். உடலெனப்படுவது எது? என ஆராய்வோமாயின் கை கால் மார்பு தலை முதலிய உறுப்புக்களைத் தவிர உடலெனப்படும் பொருளொன்றில்லவேயில்லை. அவ்வுறுப்புக்களெல்லாம் சேர்ந்ததே உடலென்னின்: உறுப்புக்கள் சேர்ந்தால் உறுப்புக்களாகவே யிருக்குமன்றி வேறொன்றெப்படிவரும்? தனித்தனி உறுப்புக்களாகப் பார்க்கினும்

வெளுத்ததெல்லாம் பாலா? கருத்ததெல்லாம் தண்ணீரா?



உறுப்புக்களே; ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தபோதும் உறுப்புக்களாகவேயிருக்கின்றனவன்றி உடல் என ஒரு பொருள் இல்லையே. ஆனால் உடல் காணப்படுவதுண்மையே. ஆயினும் அது மெய்யோ? பொருளில்லாமையின் மெய்யன்று. (மெய்யாகிய உடலை மெய்யென்பது (மெய்=உடல்) மங்கல வழக்கு என்று இலக்கணம் கூறுவதும் "பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொதித்துவைத்த பொய்யுடலை—மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே." என்று தாயுமானவர் கூறுவது மீண்டாராயத் தக்கனவாம்.) பொய்யோ? மலடி மகன்போல முற்றும் அபாவமாயிராமையின் பொய்யுமன்று. மெய் பொய்யோ? வெனின்; ஒன்றிற்கொன்று எதிர் மறையான இலக்கணமமைந்த பொருள்யாண்டு மின்மையின் அநிர்வசனீயம் அல்லது வியாவகாரிக சத்தை என்பதைத் தவிர வேறு வழியில்லை.

"காரண மதனலன்றிக் காரிய முளவாய்த் தோன்றா
காரண மொழியவேறு காரிய மின்மையாலே
காரிய மனைத்திலுக்குங் காரணமதுவே யுண்மை
ஏர்தர விரண்டும் வேறென்றியம் பிடலியல் பின்றாமால்."

எனச் சாந்தோக்கிய வுபநிடதம் காரண காரிய வியல்பை விளக்குதல் காண்க.

"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

## தெலுங்குப் பதிப்பு.

—(o)—

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0
வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.




# திலகவதியார்

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

இப் பெண்மைத் தெய்வம் சைவ சமய குரவர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளின் மூத்த சகோதரியாராக அவதரிக்கும் பேறுவாய்த்த பெருந்தவத்தினர் என்பதைத் தமிழ்நில மாந்தர்கட்கு எடுத்துக் கூறவேண்டுவதில்லை. நடுநாட்டில் திகழும் திருவாமூரில் புண்ணியமிகுந்த புகழனார்க்கும் மாண்புமிக்க மாதினியார்க்கும் தலைமகவாகத் தோன்றினர்.

> "திகழுமலர்ச் செங்கமல திரையிதழின கவயினிற்
> றிகழவருந் திருவனைய திலதவதியார்"

எனத் தெய்வப் புலமைச் சேக்கிழார் திருவாய் மலர்ந் தருளினர். இதனால் திலதவதியாரை முழுமங்கல மடந்தையாகவே ஆசிரியர் போற்றி மகிழ்ந்தமை ஆராயத்தக்கது.

இவரை மணமுடிக்க விசைந்து போந்த கலிப்பகையார் எனும் வெஞ்சமருழவர் தாம் கடமை மேற்கொண்ட மன்னவர்க்காக வடபுலம் நண்ணிப் பகைவரொடும் வெஞ்சமர் புரிந்து வெற்றிமாலை சூடி இறுதியில் போர்க்களத்திலேயே உயிர் நீத்தனர். இதற்கிடையிலேயே இவரைப் பயந்த தந்தையார் வினையின்படி விண்ணுல கெய்தக் கற்பருங்கலமாகிய மாதினியாராகிய தாயும் உடனுயிர் விடுத்து மீளாவுலக மேவினர். தந்தை தாய் இருவர்களையும் ஒருங்கே யிழந்த நமது திலகவதியாரோ இக்கொடுஞ் செய்தி கேட்டுத் தரியாராகிப் பெற்றோர் இருவரும் எவருக்கு எனையளிக்க முடிவு செய்தனரோ, அக் கலிப்பகையாருடன் உயிர்விடுவதே கடன் எனத் துணிந்தனர். எனினும் தன்பின் வந்த மருணீக்கியார் எனும் பிள்ளைத் திருநாமமுடைய சகோதரர் அவ்வாறு உயிர்விடாம லிருக்குமாறு வேண்டிக் கொண்டதுடன் அவ்வாறு தமக்கையார் உயிர் துறந்தால் தாமும் உயிர்விடத் துணிவுகொண்டனர்.

இதை யுணர்ந்த திலகவதியார் தம்பியார் உயிர் வாழவேண்டுமெனும் தயையினால் உயிர்விடும் கருத்தை மாற்றி "அம் பொன்மணி நூல் தாங்காதனைத் துயிர்க்கும் அருள்தாங்கி, இம்பர் மனைத்தவம் புரிந்து திலதவதியார் இருந்தார்" என விளக்கினர். இனி யிவரைப் பின்னரும் "செம்மலர் மேற்றிருவனைய திலதவதியார்" என ஆசிரியர் அருளினர். இதனால் மங்கலம் என்பதன் பொருள் என்னை? என நோக்குதல் அறிவுடைமை. கணவனையுடைய நாரிகையாரே மங்கலமகளிர் எனக் கொள்ளுதல் உலக மரபு. கணவனுடன் இல்லறம் புரியாமல் கலாம் விளைப்பவரும் மங்கலப் பெண்டிரே யாவர். கணவனால் கைவிடப்பட்டவர்களும் மங்கல மகளிரே. உடைக்கும் உணவுக்கும் வழியின்றிக் கற்பை யிழப்பவரும் அம்மங்கலப் பட்டத்திற்குரியவரே. பிறர் மனை நாடித் தன்மனை புகாத ஆடவனை மணந்த துர்ப்பாக்கிய மடந்தையரும் மங்கலவதிகளே. இதுவே அனுபவத்தில் உள்ள கொள்கை. இதுவே சமூகச் சட்டம். பெரிய புராண ஆசிரியர்க்கு இப்போலிக் கொள்கைகள் உடன்பாடில்லை என்பதை மேலே காட்டிய குறிப்புக்களால் நன்குணரலாம். மங்கலமென்பது சிற்றின்பவாழ்விற் சின்னாள் திளைப்போர்க்கே பொருந்துவதாயின் பேரின்ப வாழ்விற் றிளைக்கும் அழியா வாழ்வினரை எந்தப்பொன் மொழியாற் போற்றுவது? புன்மையாகிய உடலின்பத்தில் ஈடுபட்டுச் சவலையுறாது, வன்மையாகிய உள்ள நிறை வாய்ந்து வீரவேள் வளையாத செங்கரும்பு போன்றும், அம்மாரன் வில்லின்கண் நாரியாக அமைந்த வண்டுக்களால் சுவைக்கப்படாத புதுமலர் போன்றும், கறைபடாத மதியம் போலவும் கரிய மேகத்தினிடையில் தோன்றா மின்னலைப் போலவும், காளம் பிறந்த கடலிற் பிறவாத இனிய அமுதம் போன்றும், வேர் இலாத பூங்கொடி போன்றும், துளைபடாத முத்தம் போன்றும் புன்னிலைச் சிற்றின்ப வெண்ணம் புகுதப்பெறாதவராய், அழியாப் பேரின்ப நன்னிலை நாட்டம் கொண்டு பிறவித் துறவு பூண்ட தவமடந்தையாம் நம் திலதவதியாரே முழுமங்கலமுடையவர். இவரே மெய்த் திருமகளுமாவர் என்பதே ஆசிரியர் துணிபெனல் மேலே காட்டிய சான்றுகளால் நிலைபெறுயிற்று. இக்குறிப்புத் தோன்றவே திருவருட் பிரகாச வள்ளலார் ஓரிடத்தில் ஞானானந்த வல்லியை "கோய்யாது குமையாது துவியாது மண வீசும் கோமளம்" என்றருளிச் செய்தனர் போலும்.

மாதர்க்கில்லை மனவுறுதி எனச் சுயநல மிகளாய்ப் பிறர் நலம் காணத்தரியாத ஒரு சிலர் கூறும் கருத்து மாய்ந்துபடவே அம்மையார்தம் மனவுறுதியும் தவநெறியும் வளர்ந்து பொலிவுற்றது.

அம்மையார் செந்நெறியின் ஆற்றல் சார்ந்தோர் தமையும் பரிசவேதி போல் தன்மயமாக்கவல்ல தாகும். அவர்பின்வந்த மருணீக்கியாரும் பின்னர் அருள் ஆக்கத்தினராய்ச் சிறந்ததும் கவனித்தல் வேண்டும். அம்மையார் கருத்தால் அன்றோ திருநாவுக்கரசராகத் திகழ விருந்த தம்பியார் திருநீறு பெற்றனர். அவ்வாறன்றோ வீரட்டேசர் ஆணைபிறந்தது. தற்காலத்தில் பெண்மையின் உள்ளத் தன்மை இயற்கைத் தூய்மையுடையதென மகாத்மா காந்தியடிகளாரும் வாய்ப்பு நேர்ந்துழி வழுத்துகின்றனர்.

திலதவதியாரின் அகவை பன்னிரண்டின் முன்னாக, ஒத்த குல முதல் வேளாண் குடித் தலைவர், மின்னார் செஞ்சடை யண்ணல் மெய்யடிமை விருப்புடையார் எனக்கண்ட கலிப்பகையார் எனும் தக்க வரனுக்கு மணமுடிக்க இசைவுற்றனர்.

திலகவதியாரின் உறுதியும் களங்கமற்ற உள்ளமும், செல்வத்தால் பெறும் எல்லாச் சுகங்களையும் அவ்விளமையிலேயே, பன்னிரண்டகவையிலேயே வெறுத்துத் தள்ளிய தீரமும், வறுமை வாழ்வும் அதிக வீரட்

மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது.

டரின் ஆலயப்பணியில் அமைந்த தொழிற்பாடும், பின்னர் தம்பியார் குடரைமுறுக்கும் சூலைநோயினால் கொடுந்துயருழந்து யாவராலும் கைவிடப் பட்டாரென ஒற்றராற் கேட்டபோதும் "நன்றறியார் அமண்பாழி நண்ணுகிலேன் எனு மாற்றம் சென்றவனுக் குரை" யென்று கலங்காமல் பதறாமல் விடை பகர்ந்த திட்பமும், சமயப்பற்றும் மாதர் உலகத்திற்கே பெருமை தருபவைகளாகும். எவர் பொருட்டுத் தாம் உயிர்விடும் கருத்தினை யொழித்துத் துறவு பூண்டும் உலகிலிருக்கத் துணிந்தனரோ, அவர் பொருட்டே மேற்கண்ட விடை பகர்ந்தனர் எனில் அம்மையாரது தவறு செய்தோரைத் திருத்தும் விஷயத்தில் சீரிய ஆண்மைக் குணத்தினை எவ்வுரைகொண்டு வழுத்துவது.

"நன்றறியார் அமண்பாழி நண்ணுகிலேன்
எனுமாற்றம் சென்றவனுக் குரை"

என்று கூறியதே யன்றி "அவனை யீண்டு வரும்படி சொல்" எனவும் கூறினாரில்லை, தம்பியார்பால் எல்லையற்ற அன்புபூண்டு உயிரையும் ஓம்பி, அத்தம்பியார் பாசமயப் படுகுழியிலிருந்தும் மீளுமாறு அருள் புரிவீர் என அதிகை வீரட்டரை அல்லும் பகலும் இடையறாத் துயரினோடும் வழிபட்டு வந்த இத் திலதவதியார் தமது அன்பினையோ, இரக்கப் பாட்டினையோ, உள்ள நெகிழ்ச்சியையோ சிறிதும் புறத்தே காட்டாமல் கண்டிப்பான பதில் அளித்ததை உன்ன உன்ன விறல்மந்திரி மதியுடையார் பெண்கள் என ஔவையார் கூறிய அருள் வாக்கு வற்றா வியப்பினை யளிக்கின்றது. தம்பியாரிடம் தமக்குச் சிறு மதிப்பும் இல்லையென அவ்வொற்றர் நம்புமாறு அவர் என்று அன்னியர் பால் கூறும் இயற்கை வழக்கினையும் விடுத்து அவனுக்கு உரை என ஏக வசனமாகக் கூறியதும், பின்னர் தம்பியார் தன்னை நாடிவந்து தாள்மீது விழுந்து "உய்ந்து கரையேற நெறியுரைத் தருளும்" என்று வேண்டிய போழ்து "கோளில் பாசமய நெறிக்குழியில் விழுந்து அறியாது மூளும் அருந்துயர் உழந்தீர் எழுந்திரீர்" என அன்னியர் பால் காட்டும் உபசார வழக்கின்படி உரை பகர்ந்தமையும் நன்கு சிந்தித்தல் வேண்டும். பாசமயப் பற்றுள்ள வரையில் அலட்சியமாக நோக்கிய குறிப்பும், அதிலிருந்தும் மீண்டு தம்பாலடைந்து உய்யு நெறியுரைத்தருளும் என அடைக்கலம் புக்கவுடன் அறியாது துயர் உழந்தீர் எழுந்திரீர் என மரியாதை வழக்கில் ஆறுதல்பெற உரை பகர்ந்தார். அதற்கடுத்தாற்போல் இச் சூலைநோயின் வரவு உய்திக்குக் காரணமென அதிகை வீரட்டர் தமக்குக் கனவின்கண் அருளிய உண்மையைக் குறிப்பால் உணர்த்துதல் விரும்பி,

கற்றை வேணியர் அருளே காணும் இது எனவும் உணர்த்தி, அதுபற்றி அப்பரமனையே பணிந்து பணிசெய்வீர் எனவும் உபதேசித்தனர். இங்கு பரமன் என்று பகராமல் பற்றறுப்பான் என்றமை மிக்க பொருட் செறிவுடைய தொன்றாம்.

பாசமயப்பற்றினை அறுப்பவன் என்பது ஈண்டு உட்கருத்து. தமது உடன் பிறந்த தமக்கையாரிடம் இழந்த பற்றினை மீண்டும் பெற்று நாடிவந்த இந்நிலையில் பற்றறுப்பான் என்றமை செந்நெறிப்பற்றைக் கைக்கொள்ளுதல் வேண்டத் தக்கதென்பதும் தீநெறிப்பற்றே ஒழிக்கத் தக்கதென்பதும் தெளிவுபடுத்தும் குறிப்பாகும். பின்னர் அன்னையார்,





"கயிலைக்குன் றுடையார் திருநீற்றை
அஞ்செழுத் தோதிக் கொடுத்தார்"

என்றமை தம் செயலால் நிகழ்வது ஒன்றுமில்லை யென்றுணர்ந்த முனைப்பகன்ற அடக்கமும் அம்மையாரின் உயரிய பண்பினை யுணர்த்துகின்றது. "நாம் பெரியர் என்னுமதை நாடா திருக்குமவர் தாம்பெரியர்" என்னும் ஆன்ற வாக்கிற்குச் சான்றாயிலகுவதென்பதே பொருந்தும். பிறந்தவுடன் பெண் மகவோ, என்று அலட்சியமாகக் கருதும் பலர் இன்றும் உளர். அத்தகையார் எண்ணம் ஏங்கும் வண்ணம் நமது திலதவதியாரை வந்தடைந்து வணங்கிய தம்பியாரே.

"நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின்
பயன் அனையீர்"

என அழைத்ததாக ஆசிரியர் அமைத்து வைத்தனர். நற்றவத்தினால் பெண் பிறவி வாய்ப்பதில்லை யென்பது கடவுள் சம்மத மன்று. தம்பின் வந்த தம்பியாரை உய்விக்க ஈசன்பால் குறைநயந்து அரனருள் பெறத் திருநீ றளித்து அவரால் தமிழ்மொழி-தமிழ்நாடு-சைவசமயம் ஆகிய மூன்றுமே தலைநிமிர்ந்து தழைத் தோங்கச் செய்த தவத்தரசியாரை ஈன்றெடுத்த இருமுது குரவரும் அவர் வந்த மரபும் மீளாக்கதி புகுந்த தென்னில் அதில் வியப்புளதோ?

இதனை வலியுறுத்தும் உதாரணமாக மகாசுவேதையைக்கண்ட கந்தர்வ அரசிளங் குமரன் கூறியதாக ஆதிவராக கவி என்னும் அறிஞர் திலகம்

"ஓருட்ட நின்றிருவவ தாரத்தினாற் றெய்வகணத் தியாருடைய
திருமரபோ வீடேற விட்டது காண்"

என்று அமைத் தருளினர். மனவடக்க மில்லாச் சில ஆண்பாற் புலவர்களும் மாதர்கள் தங்கள் மனநிலை சிதறுவதென மனம் போனபடிக் குறைகூறிச் செய்யுள்களாகவும் புனைந்துரைத்தனர். பெண்பாலரிற் கவிபாடும் ஒரு சிலர் இருந்தார்கள் எனினும் இத்தகைய பழியை ஆடவர் மீதேற்றித் தூற்றினாரில்லை. தூற்றி யிருந்தாலும் அது உண்மை யாகுமேயன்றிப் பொய்ம்மொழியாகாது. இருந்தும், பெண்கவிகள் பிழையைப் பிறர் மீதேற்றினார் இல்லை யென்பதே பெண்ணுலகின் இயற்கைப் பெருந்தன்மையை யுணர்த்தும் குறிப்பாகும்.

வைதவ்யத்தின் பெருமை என மகுடமிட்டு நமது மகாத்மாகாந்தி அடிகளார் ஸ்ரீஜத் தேசபந்து சித்தரஞ்சனதாஸ் காலகதி யடைந்தபின் அவர்தம் நாயகியாரான ஸ்ரீமதி வஸந்தாதேவியார் மங்கலமிழந்து அணிபல துறந்து நின்ற நிலையில் கண்டு உளம்பொறா துருகிக் குழைந்து ஓர் கட்டுரை யௌவன இந்தியாவில் எழுதினர். அது எப்பொழுதும் உத்தமர்களால் சிரத்தால் வணங்கத்தக்க தொன்றாம். உலக சிரேஷ்டர் எனும் அடிகளின் பெருமைக்கு இதுவுமோர் தக்க காரணம் என்பது மிகையாகாது. தவிர நமது கட்டுரைத் தலைவியார் கல்வியுடையவ ரெனும் குறிப்புச் சரிதத்தில் இல்லை. அம்மையாரது பெண்மைக் கியற்கையான தன்மைக்குணமே தவநிலையாகப் பரிணமித்த தென்பது பொருந்தும். அம்மையார் பண்புகளை அறிஞர்கள் வழுத்துவார்களாக.

பண்டைய ரிஷிகள் வகுத்த

# நான்கு தருமங்கள்

(அவதாரிகன் எழுதுவது.)

எல்லாவற்றிற்கும் அதீதமாய் ஸ்திதி செய்துகொண்டிருக்கிற
அகண்ட சச்சிதானந்தத்தின் மின்னல் பிரபையானது சராசரங்
களாகவும், அவ்வகண்ட ஜோதியினுடைய தேஜஸே மனுஷனுகவும் கணிக்கப்
படலாகும். ஆனல் பாரமார்த்திகத்தில் மனிதன் அபரிமிதப் பொருளாக
இருக்கிருன். —விவேகானந்தர்.

தேவர்களுக்கும் அசுர்களுக்கும் நடந்த யுத்தங்களைப்பற்றி புராணங்க
ளில் விவரப்படுத்தியிருப்பதை நாம் படிக்கிரோம். சில சமயம் தேவர்களும்,
சிலசமயம் அசுரர்களும் வெற்றியடைந் திருக்கின்றனர். உண்மையில் இவ்
விருதிறத்தினரும் அந்யோந்ய விரோதிகளான இரண்டு மஹா சக்திக
ளுடைய பிரதிநிதிக ளென்றே சொல்லவேண்டும். பிரகிருதியின் சராசரங்க
ளுடைய விவித அவஸ்தைகளில் இவ் விரண்டு சக்திகளும் மனித புத்திக்கு
எட்டாதகால முதற்கொண்டு போர் நடத்திக்கொண்டுதா னிருக்கின்றன.
இவ் விரண்டு சக்திகளில், ஒன்று ஆத்ம சக்தியும், மற்றொன்று பௌதீக சக்
தியுமாகும். மனித ஜீவியத்தில் இவை மிகவும் தெளிவாய்க் காணலாம்.
மனிதர்களில் சில சமயம் ஆத்ம சக்தியும் சிலசமயம் பௌதிக சக்தியும் அதிக
மாய் விளங்கியதுண்டு. எப்பொழுது லௌகிக சத்தியானது, ஆத்ம சக்திக்
குக் கீழடங்கி நிற்குமோ, அப்பொழுதுதான் தரும போதத்தினுடைய காலம்
ஆரம்பமாகும்.

மனிதர்களிற் சிலருக்கு அவர்களுடைய ஜீவியத்தில் ஒவ்வொரு கட்டத்
தில் சில மாற்றங்க ளுண்டாகின்றன. பிரகிருதியினுடைய செயல் அவர்க
ளுக்கு வேறுவிதமாய்த் தோற்றுவிக்கப்படுகின்றன. அவர்களுக்கு நானுவித
சுகாநுபவங்களோடு கூடிய ஜீவியமானது உற்சாக சூனியமாய்த் தோன்றுகின்
றது. சாதாரண தினசரி வாழ்க்கையிலும் பெரிய தடைகள் வந்து சேர்கின்
றன. முடிவில் தங்களுக்கு அரிய சோதனையாகப் போய்விடுகிறது. இதனல்
மனிதன் "பிரகிருதியின் இஷ்டம்போல், யாதொரு விவஸ்தையுமின்றி அங்
கும் இங்கும் அலைந்து திரியத்தக்கவண்ணம் ஒரு அடிமையாகி, எத்தகைய
மகத்தான காரியமும் செய்யாமல் என்றும் உண்டும், குடித்தும், குற்றங்க
ளுக்கு ஆளாகியும் காலம் கழிப்பதற்காகவோ இந்த ஜன்மம் எடுத்தது என்று
எண்ணுகிருன்.

இவ்வித எண்ணங்கள் மனதி லுண்டாகும்பொழுது லௌகிக காரியங்க
ளில் அதிருப்தி உண்டாகி பஞ்சேந்திரியங்களுக்கு அப்பால்சென்று அங்குள்ள

குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டும் என்ன?

உத்கிருஷ்ட அவஸ்தையை அடையவேண்டுமென்ற மோகம் ஏற்படுகின்றது.
இப்போதுதான் தருமபோதம் ஆரம்பமாகிறது. இந்திரியங்களுடைய அடிமை
த்தனத்திலிருந்து விடுபடுவதும் பௌதிக விஷயங்களிலிருந்து வெற்றி
யடைவதும் ஆத்மாவின் செயலாகும். அதுவே தரும போதத்தின் இலக்க
ணம்.

தருமபோதமென்ருல், துர்ப்பலங்களும், தோஷ ஏதுக்களும் மன
திற் படுவதோ அல்லது லௌகிகத்திலுள்ள எல்லா தத்துவ சாஸ்திரங்களி
லும் பண்டிதனுவதோ, அல்லது அற்புதமான சில சித்திகளில் லாபமடை
வதோ அல்ல; எல்லா வஸ்துக்களிலும் நிறைந்துநிற்கும் ஈஸ்வர சக்தியை பிர
காசப்படுத்தி நம்மிலுள்ள யதார்த்த மனிதனை காண்பித்துத் தருவதே தரும
போதமாகும். அது மனிதனுக்கு அதி உன்னதமான ஆத்ம சுகமார்க்கங்களைத்
திறந்துகொடுக்கும்; வெறும் லௌகிக ஞானத்தில் திருப்திப்படாமல் முன்
னேறிச்சென்று பரிபூரண தசையை அடைவதில் உற்சாகப்படுத்தும். இத்
தருமமானது மனிதனை தெய்வமாக்கி விடும்.

மனிதனுடைய இலக்ஷியம் ஒன்றுதான். ஆனல் அடையும் மார்க்கங்கள்
மட்டும் பலவாகும். மனோகதியும் பலதரத்தில் தானுள்ளது. இந்த உண்
மையை நல்லவண்ணம் உணர்ந்த புராதன ரிஷிகள் அவரவர்களுடைய வாச
னையையும் சுபாவத்தையும் அநுசரித்து ஒவ்வொரு மார்க்கத்தை அங்கீகாரஞ்
செய்யலாமென்று உபதேசம் செய்தனர், தருமப் பிராப்திக்காகப் பிரயத்தனம்
செய்பவர்கள் எல்லாரும் இவற்றை அநுசரிக்கவேண்டும். ஆனல் தாஞெரு
மார்க்கத்தை அநுசரிக்கும்போது மற்ற மார்க்கங்களைப்பற்றி தூஷணை செய்
யக்கூடாது. அங்கீகரிக்கப்பெற்ற மார்க்கத்தில் கடைசிவரை வைராக்கியம்
கொள்ளவேண்டும்.

எவ்வித ஞானத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்ருலும், ஒரு உபகாரண
மின்றி முடியாது. ஆகையால் தரும அப்பியாசத்திற்கும் ஒரு ஆத்ம தரிசி
யாகிய குரு அவசியம். அப்பேர்ப்பட்ட குருவானவர், சம்சார பந்தங்களில்
அநுபவப்பட்டுத் தேரி அவைகளில் பட்டும் படாமல் உலகத்தில் சஞ்சரிக்கக்
கூடியவராகவும் உணமையை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். ஆன்ம
வளர்ச்சி உண்டாக வேண்டுமென்ருல் ஆத்ம ஞானிகளுடைய சகவாசமின்றி
முடியாது. "மகாத்மாக்களுடைய சகவாசம் ஒரு விநாடிப் பொழுதிருந்தா
லும், அது சம்சார பந்தங்களி லிருந்து விடுபடுவதற்கு ஒரு தோணியாகும்"
என்று ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் சொல்லியிருக்கிருர்.

சற்குருவைத் தெரிந்தெடுப்பது சாத்தியமான காரியமல்ல. (ஆத்மிக)
சற்குருவென்று சொல்லிக்கொண்டு எத்தனையோ வஞ்சகர்கள் திரிகின்றனர்.
இவர்களுடைய சகவாச தோஷத்தினுல் உத்தமர்களான பலர் கெட்டுவிடு
கிருர்கள். ஆகையால் ஆத்மிக குருவைக் கண்டுபிடிப்பதிலும் சில விஷயங்
களை உணர்ந்திருக்க வேண்டும். சாதாரணமாக வெறும் அஞ்ஞானிகளான
ஜாலவித்தைக்காரர்களைக் கண்டு பெரிய மகாத்மியமுள்ளவர்கள் என்று
எண்ணி ஏமாந்து விடுகின்றனர். சிலசமயம் சடையும், தாடியும் வளர்த்துச்
சாதுவாக நடிப்பவனும் நோய்களையோ பேய்களையோ தீர்ப்பவனுகச் சில

சாமி காட்டும், எடுத்தூட்டுமா?

அற்புதங்களைச் செய்பவனுமான ஒருவனைப் பெரிய மகான் என்று நினைத்துப் போற்றுகின்றனர். இறுதியில் ஏமாந்து நம்பிக்கையும் இழக்கின்றனர். ஒரு பரமார்த்த குருவானவர் மிகவும் பரிசுத்தரும், உண்மைத் தத்துவம் கிரகித்தவரும், யாதொருவித லௌகிக காமியங்கள் இல்லாதவருமா யிருக்கவேண்டும்.

பலவிதமான மனோபாவனையுள்ள மனிதர்களைப்பற்றி நான்கு விதமாய்ப் பிரித்து நமது பண்டைய ரிஷிகள் எழுதி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் ஞானி, பக்தன், ராஜயோகி, கர்மயோகி எனப்படுவார்கள்.

(1) ஞானி பிரகிருதி தத்துவ சாஸ்திரத்தில் பூராஞானமும் அடைந்திருக்கவேண்டும்; சகல வஸ்துக்களிலும் தனது பார்வை சென்று அவைகளிலுள்ள சாரங்களைக் கிரகித்திருத்தல் வேண்டும்; அப்படிக்கின்றி வெறும் விசாரணை கொண்டு திருப்தியடைதல் கூடாது. தத்துவ சாஸ்திரங்களைப் பற்றி தானறிந்தவாறு நடந்து ஒழுகிக்காட்டிய பிறகே பிறருக்குப் போதித்தல் வேண்டும். அப்படிக்கின்றி போதனைமட்டும் செய்து செயலில் ஒழுகாதவர் ஞானியே யல்லர்.

(2) பக்தன் மனமானது விகாரங்களுக்கு அதீதமாய் நிற்றல்வேண்டும். பிரமை நீங்கி ஈஸ்வர அநுபூதி உண்டாவதற்குச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும். களங்கமற்ற பக்தியும், நிச்சலமான விசுவாசமும் ஒரு பக்தனுடைய நிதியாகும். ஈஸ்வர லாபமின்றி வேறொன்றிலும் பற்றிருத்தல் கூடாது. ஒரு உண்மையான பக்தன் பிரத்தியேகமாய் அறிந்திருக்க வேண்டிய ஒரு காரியம் உண்டு. தன் முன்பு வைக்கப்பட்ட புத்தி பூர்வமான ஆலோசனைகளுக்குரிய குருமூர்த்தியாக விருக்கவேண்டும். இந்த விசாரணையை வெறுத்துத் தள்ளினால் ஆபத்துண்டாகும். பிறகு உத்தமமான பக்தனாவதற்குப் பதிலாக ஒரு மதப்பிராந்தனாக மாறிவிடுவான்.

(3) ராஜயோகி பரிபூரணனாயிருத்தல் வேண்டும். ராஜயோகாப்பியாசத்தினால் பலவித திடசக்திகளும் சித்திக்குமென்ற விசுவாசம் வேண்டும். அற்புத கிருத்தியங்கள் செய்யவேண்டிய சித்தி சம்பாதிக்கிறதற்கும், அஷ்டாங்க யோகம் அப்பியசிப்பதற்கும் ஜனங்கள் பல சமயங்களில் விருப்புக் காண்பிக்கிறார்கள். உத்தமமான யோகிக்குப் பல தெய்விக சக்திகள் உண்டாகும் என்பதில் யாதொரு தடையும் இல்லை. ஆனால் மனதானது அவ்வகை யோகசித்திகளில் பதிந்துவிட்டால் பதிந்தவர் செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லமுடியாது. ஒரு பரமார்த்தயோகி இவ்வகைச் சித்திகளொன்றுக்கும் சிரத்தை வைப்பதில்லை. முடிவில் பரிபூரணம் சித்திக்கும்வரை ஸ்திரசித்தனாக விருத்தல் வேண்டும்.

(4) கர்மயோகி ஒரு உண்மையான கர்ம யோகிக்குக் கிரியாமார்க்கம் உரிமையாகும். முக்தனாவதற்கு அதிகாரமுள்ள விசாரணைகளை அவன் ஆராய வேண்டும். தைரியத்தைச் சாந்தமாய்ப் பிரவிர்த்திகள் செய்வதில் செலுத்த வேண்டும். வெற்றி தோல்விகளைக் குறித்துச் சிந்திக்கலாகாது. அபஜயத்தாலும் பிறருடைய யத்தினத்தா லேற்பட்ட தடைகளாலும், மனசு குன்றுதல் கூடாது. ஜயத்திற்கும் பிறருடைய துதிக்கும் மகிழ்ந்து விடவும் கூடாது.





இந்நான்குவித தருமங்கள் (மார்க்கங்கள்) பண்டைய காலத்து ரிஷிபுங்கவர்களால் நமக்குக் காண்பிக்கப்பட் டிருக்கின்றன. இவைகளுள் சஞ்சரித்தால் முடிவில் உத்தமமான பதத்தில் சேரலாம். சாதகன் தன்னுடைய விவேகசீலத்தைக் கையாளுவதில் மிகவும் சிரத்தை யுள்ளவனாக யிருத்தல்வேண்டும். ஒன்றையும் வெறும் நம்பிக்கையில் சுவீகரித்தல் கூடாது. அவற்றிலுள்ள உண்மைகளைக் கண்டாராய்வதில் திருஷ்டி வைத்தல் வேண்டும்.

தருமபோதம் ஒருவனிடத்தி லிருந்தால் அவன் ஒரு உண்மையான மனிதனாய்விட மாட்டான். உண்மையான மனிதன் ஒரு பாரமார்த்திக ஞானியாவானே யன்றி ஒரு பண்டிதனாகமாட்டான; அவன் ஒரு உத்தம பக்தனாவானே யன்றி மதப்பிராந்தனாகான். அவன் ஒரு விசிஷ்டயோகியே யன்றி வெறும் இந்திரஜாலக்கார னல்லன். அவன் ஒரு உண்மையான கருமயோகியே யன்றி வாக்குச் சாதுரியக்கார னல்லன்.


## 'ஆனந்தபோதினி' வாரப் பத்திரிகை.

நமது 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பின் மூன்றாவதாண்டு பிறந்துவிட்டது. 16 பக்கங்களுடன் வெளியான நமது பத்திரிகை இவ்வாண்டு முதல் 20 பக்கங்களுடன் வெளியாகின்றது. நம் தேசமக்கள் அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தக்க அறிவும், அபிவிருத்தியும் பெறுவதற்காகவே பற்பல அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அதில் வெளியாகின்றன. நம் நாட்டிலும், உலகில் இதர தேசங்களிலும் நடைபெறும் எல்லாச் செய்திகளும் திரட்டி வெளியிடப்படுகின்றன. தினசரிப் பத்திரிகை படிக்கவில்லையே என்னும் கவலையின்றி உலக விஷயம் முழுவதையும் நமது வாரப் பத்திரிகையினின்றும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையலாம். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபா மூன்றுதான். வெளிநாடுகளுக்கு ரூபா நான்கு. உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.

# கனவின் பலன்

(வி. சங்கா ஐயர்.)

(667-ம் பக்கத் தொடர்ச்சி)

59 எருமைக்கடா, காண்டாமிருகம் இவைகளைப் பார்ப்பது கெடுதி.

60 எருமைக்கடாவின் மேல் ஏறிப்போவதாகக் கனவானால் மரண காலம் சமீபத்திலிருக்கிறது என்று அறியவும்.

61 (a) ஒருவன் தன் பசுக்களை, பசுமையுள்ள வயலில் மேய்த்துக் கொண்டிருக்கும்போது வேறொருவன் ஓட்டிக்கொண்டு போவதாகக் கண்டால் நஷ்டம்.

(b) பசு துரத்திக்கொண்டு வருவதாகக் கண்டால் வேறொரு ஸ்திரீயினால் அபகீர்த்தி. ஒரு ஸ்திரீக்கு இவ்வித கனவானால் தன்னுடைய புருஷனை வேறொரு ஸ்திரீ வசஞ் செய்து கொள்வாள்.

(c) பசுவின் நான்கு கால்களையும் கட்டி, தான் பால் கறக்கவோ, மற்றொருவன் கறப்பதைத் தான் பார்க்கவோ செய்தால் பெரும் வியாதிவரும். அது வெகுகாலம் நீடித்திருக்கும். இக் கனவு கர்ப்பஸ்திரீக்கானால் வியாதி வரும்; கர்ப்பத்தில் குழந்தை இறந்து பிறக்கும்.

62 (a) எருது துரத்துவதாக சொப்பனம் புருஷனுக்கானால் விரோதிகளால் கெடுதி. ஸ்திரீக்கானால் தன் புருஷன் விரோதம்.

(b) எருது முட்டினதாக அல்லது பாய்ந்ததாகவோ, பாய எத்தனித்ததாகவோ, அல்லது உதைக்கவோ, அல்லது மிதிக்கவோ, அல்லது தூக்கிப்போடவோ செய்தால் தன் சுதந்திர மிழந்துவிட நேரிடும். விரோதிகள் தன் அதிகாரத்துக்கும் கௌரவத்திற்கும் கெடுதி செய்வார்கள்.

63 (a) குதிரையின் பேரிலிருந்து விழுந்ததாகக் கனவானால் அதிக சீக்கிரத்தில் கஷ்டம் சம்பவிக்கும்.

(b) கழுதை தன்னைத் துரத்துவதாகவோ உதைப்பதாகவோ கனவானால் சில விரோதிகளால் அபகீர்த்தி.

(c) கழுதைச் சவாரி செய்வது, கழுதை கட்டிய வண்டியிலேறுவது மரணபயம்.

64 (a) புலி, சிங்கம், முதலை, கரடி, காண்டாமிருகம், காட்டுப் பன்றி, முள்ளம்பன்றி, கலைமான், இவைகளைக் கண்டால் பலவான் பகை.

(b) அவை தன்னைக் கடித்ததாகக் கண்டால் ஆபத்துக்களும் காரிய ஹானியும் பலன்.

65 (a) பாம்பு, தேள், அட்டை, உண்ணி இவைகள் வீட்டில் நுழைவதாகக் கண்டால் விரோதம்.

காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு.



(b) அவைகள் படுக்கையைச் சுற்றிக்கொண் டிருக்கவோ, தன்னைத் தொந்திரவு செய்யவோ செய்தால் நோய், அல்லது சிறை; கடன்காரர்களுக்கும் விரோதிகளுக்கும் பயந்து ஒளிந்திருக்க நேரிடும்.

66 (a) பூனையைக் காண்பது கெடுதல், அபகீர்த்தி.

(b) அது தன் வீட்டிலிருப்பதாகக் கனவானால் தன் பந்துக்கள், அல்லது வேலைக்காரர்களால் தனக்குப் பொருள் நஷ்டம்.

(c) ஸ்திரீகள் பூனையைக் காண்பது தன் புருஷனால் அபகீர்த்தி.

67 (a) எலிகளைக் காண்பது கெடுதி.

(b) எலிகள் வீட்டில் வளை தோண்டுவது தன நஷ்டம்.

(c) கடிக்கவோ உதைக்கவோ செய்தால் வியாதியோ பெரிய ஆபத்தோ உண்டாகும்.

(d) தன் வீட்டைச் சுற்றிக்கொண்டிருந்தால் சிலர் துரோகம் செய்யச் சிலர் தன்னை சினேகிப்பர்.

68 (a) நாய் தன்னைப் பார்த்துக் குலைப்பதாகக் கனவானால் பிராண சினேகிதனுக்கு விரோதம் ஏற்படும்.

(b) கடிப்பதாகக் கனவானால் அகாரணமாய் முக்கிய சிநேகிதர் விரோதம்.

69. நரிகளைக் காண்பது தீங்கு.

70 (a) குரங்கைப் பார்த்தால் கலகம் உண்டாகும்.

(b) தன் வீட்டில் இருப்பதாகப் பார்த்தால் கெடுக்க எண்ணமுள்ள சிநேகிதர் நட்பு.

71 (a) கனவிற் பிராமணனைக் காண்பது வியாதி.

(b) மடிகட்டிக் கொண்டிருக்கும் பிராமணன் அல்லது புரோகிதனைப் பார்ப்பது அக்கினி பயம்.

72. தன் மதத்திற்கு விரோதமான மதங்களைப் பார்த்தால் பயம்.

73. நீசர்களைப் பார்ப்பது துக்கம்.

74. ஸங்கர ஜாதியாரைப் பார்த்தால் கஷ்டம்.

75. அதிக குள்ளனைப் பார்ப்பதால் துக்க சமாசாரம் தெரியவரும்.

76. மந்திரக்காரனைப் பார்ப்பது மோசம்.

77. சிறு குழந்தையை ஸ்திரீகள் கண்டால் வியாதி.

78. அப்ஸர ஸ்திரீகளைப் பார்த்தால் பொருள் நஷ்டம்.

79. ஸ்திரீயைப்போல் நீண்ட மயிருள்ள புருஷனை பேடியைக் கண்டால் பயம். ஸ்திரீயினால் மோச முண்டாகும்.

80. மொட்டைத் தலையனை அல்லது காவி வஸ்திரதாரியைப் பார்த்தால் க்ஷாமமாவது, தரித்திரமாவது, வியாதியாவது, நஷ்டமாவது ஏற்படும்.

81. அழுக்குத் தேகமுள்ள குழந்தைகளைப் பார்த்தால் அன்பர்களால் துரோகம் நேரிடும்.

குலம் குப்பையிலே பணம் பந்தியிலே.

82. குழந்தைகள் சாவதாகக் கனவு கண்டால் பெரிய ஆபத்துகள் உண்டாகும்.

83. சுடுகாட்டில் பிணத்தை எரியவிடும் காஷ்டத்தைப் பார்த்தால் தன் பந்துமித்திரர்களில் ஒருவருக்கு மரணமாவது, சிறையாவது ஏற்படும்.

84. கல்யாணத்தைப் பார்த்தால் மரண சமாசாரம் வரும், அல்லது வியாதி வரும்.

85. சத்துருக்களைப் பார்த்துப் பேசினதாகவாவது விரோதிகளுடன் சண்டை போடுவதாகவாதது, கனவு கண்டால் கஷ்டங்கள் நேரிடும்.

86. பிசாசுகளை—பேய்களைக்கண்டால் காரிய பங்கம்.

87. தனக்குக் கண்தெரியாமற் போனதாகக் கனவு கண்டால் சினேகிதர்களால் மோசம். அல்லது தன் பெண்சாதி வியபசாரம் செய்து அபகீர்த்தி கொண்டுவருவாள்.

88. தன் காது கேட்காமல் போனதாகக் கனவுகண்டால் சிலர்கள் கபடமனதோடு தன்னோடு சினேகிதமாக இருப்பதாக எண்ணவேண்டியது.

89. தான் அதிலோபியாகப் போனதாகவும், விசேஷ லோபகுணம் உள்ளவர்களோடு கூடினதாகவும் கனவுகண்டால் கெடுதி நேரிடும்.

90 (a) தன் கால் முடமானதாகக் கனவுகண்டால் தீராத கஷ்டங்கள் உண்டாகும்; அது நீங்குவதும் அசாத்தியம்.

(b) கால் சுளுக்கினதாக, அல்லது ஒடிந்ததாகக் கண்டால் தன் சம்சாரம் பந்து மித்திரர்களுடைய யோசனைக் குட்பட்டு தன் ஐசுவரியத்தை போக்கிக் கொள்வான்.

(c) தானாவது, அன்னியர்களாவது மரக்கால் கட்டிக்கொண்டு நடப்பதாகக் கண்டால் தனக்காவது தன் பந்துக்களுக்காவது வியாதி ஏற்படும்.

91. தான் வஸ்திரமில்லாமல் இருப்பதாகக் கண்டால் தரித்திரம் அபகீர்த்தி.

92 (a) தன் கைகள் ஒடிந்ததாகவோ, வெந்துபோனதாகவோ, வியாதியுள்ளதாகவோ கண்டால் தரித்திரம்.

(b) ஸ்திரீ இவ்விதம் கண்டால் தன் புருஷனுக்கோ, புத்திரனுக்கோ மரணம், அல்லது பெரிய வியாதி; அதுவும் நீடிக்கும்.

(c) உள்ளங்கை நிறைய மயிர் வளர்ந்திருப்பதாகக் கண்டால் சிறையுண்டாகும்.

93. தன் மார்பிலிருந்து ரத்தம் வடிவதாகக் கண்டால் கஷ்டம் உண்டாகும்.

94. யாருக்காவது கொம்பிருப்பதாகக் கண்டால் அவர்களுக்கு நோய் உண்டாகும்.

95 (a) வியாதியஸ்தர்கள் தன் தலை பெருத்து உயரமாக இருப்பதாகக் கண்டால் தலைநோயும் ஜ்வரமும் அதிகரிக்கும்.

(b) இதரர்கள் தன் தலையை வெட்ட வந்ததுபோல் கண்டால் தன் மனைவியோ குழந்தையோ மரணம்.

---

சாகிற வரைக்கும் சங்கடம்—ஆனால் சந்தோஷம் எக்காலம்?




## கராச்சி காங்கிரசின் முடிவு

### முக்கிய தீர்மானங்கள்

மக்களின் ஜீவாதாரமான உரிமைகளாவன:—

அவரவர் விருப்பம்போல் யாருடனும் சேர்ந்துகொள்ளும் உரிமை.

பேச்சுரிமை—பத்திரிகை உரிமை.

மனச்சான்றின்படி நடத்தல், விருப்பம்போல் சமயங்களை அநுஷ்டித்தல் முதலிய விஷயங்களில் உரிமை. ஆனால் அந்த உரிமை பொதுஜன அமைதிக்கும், ஒழுக்கத்துக்கும் இடையூறு விளைத்தல் கூடாது.

சிறுபான்மையோரின் கலை, மொழி, எழுத்து—இவைகளைப் பாதுகாக்க வேண்டும்.

மக்கள் எல்லோருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து—ஆண் பெண் என்ற வேற்றுமை இல்லை.

தொழில், சர்க்கார் உத்தியோகம், அதிகாரம், கௌரவம் முதலியவைகளை அடையச் சாதி சமயங்கள் தடையாக இருக்கக் கூடாது.

பொதுக்கிணறு, பொதுச்சாலை முதலிய எந்தப் பொது இடத்திலும் எல்லாருக்கும் அநுபவிக்க உரிமை உண்டு.

ஆயுதம் வைத்துக்கொள்ளல் சம்பந்தமான விதிகட்குட்பட்டு ஆயுதம் வைத்துக் கொள்ள உரிமை இருக்கவேண்டும்.

யாருடைய உரிமைகளிலும் அநாவசியமாய்ப் பிரவேசிக்கக் கூடாது.

மத விஷயங்களில் சர்க்கார் நடுநிலைமை வகிக்கவேண்டும்.

உடம்பால் உழைத்துத் தொழில் செய்கிறவர்கட்கு வாழ்க்கைக்குத் தக்க சம்பளம் இருக்கவேண்டும். அவர்கள் வேலை செய்யவேண்டிய நேரத்தை வரையறுத்துவிட வேண்டும். உடல் நலத்துக்குக் கேடு விளையும் முறையில் அவர்கள் வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்தப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

---

ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உள்ளவை.

தள்ளாத காலத்திலும் பிணியினால் வருந்தும்போதும், வேலை அகப்படாத காலத்திலும் அவர்கட்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடிமைத்தனத்தினின்றும் தொழிலாளிகளை மீட்கவேண்டும்.

பெண் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். சிறப்பாக அவர்கள் கருப்பமாயிருக்கும் காலத்தில் போதிய விடுமுறை அளிக்கவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய காலத்தில் குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலைக்கு வைத்துக்கொள்ளப்படாமல் செய்யவேண்டும்.

தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகத் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்ள உரிமை இருக்கவேண்டும். மத்தியஸ்தம் மூலம் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள ஏற்பாடுசெய்ய வேண்டும்.

நிலவரியும் வாரமும் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும். போதுமான வருவாய் இல்லாத காலத்தில் தகுந்த காலம் வரும் வரையில் வாரம் கேட்காமல் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தின்மீது சலுகையான வருமான வரி போடவேண்டும்.

தாரவாரியாக வார்சு வரி விதிக்க வேண்டும்.

யுக்தவயது வந்துவிட்டவர்களுக் கெல்லாம் ஓட்டுரிமை வேண்டும்.

இலவச ஆரம்பக் கல்வி வேண்டும்.

ராணுவச் செலவு குறைந்த பக்ஷம் இப்பொழுது செய்யப்படும் செலவில் பாதியாகவாவது குறைக்கப்பட வேண்டும்.

அரசாங்கச் செலவு குறைக்கப்பட வேண்டும். ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளமே இருக்கக்கூடாது.

சுதேச ஆடைகளைப் பாதுகாக்க வேண்டும். அந்நிய நாட்டு ஆடைகளை வெளியேற்ற வேண்டும். அந்நியநாட்டு நூலையும் வெளியேற்றிவிட வேண்டும்.

கள், சாராயம், அபின் முதலிய லாகிரிவஸ்துக்களை யெல்லாம் முற்றிலும் தடுக்க வேண்டும்.

உப்பு வரி கூடாது.

இந்தியத் தொழில்களுக்குச் சாதகமாகவும், பாமர ஜனங்களுக்கு உபகாரமாகவும் பரிவர்த்தனை விகிதம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

கடுமையான வட்டி வாங்கப்படாமல் தடுக்க வேண்டும்.

## காந்தி—இர்வின் ஒப்பந்தம்

இந்தியா கவர்ன்மெண்டுக்கும் காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கும் தற்காலிகமாக ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் ஆராய்ந்து பார்த்தது. அதை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் காங்கிரஸின் லக்ஷியம், 'பூரண சுயராஜ்யம்' அதாவது, பூரண சுயேச்சைதான் என்பதையும் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறது; இந்த ஒப்பந்தத்தால் அதற்கு மாறுதல் ஏற்படாது.

போதனை பெரிதா, சாதனை பெரிதா?



எந்த மகாநாட்டிலாவது காங்கிரஸ் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளோடு கலந்து கொள்ள நேர்ந்தால் அவர்கள் இந்த லக்ஷியத்தைத்தான் வற்புறுத்துவார்கள். அதிலும் முக்கியமாகராட்டினருக்கு ராணுவ விஷயமாகவும் வெளிநாட்டு விஷயமாகவும் செல்வநிலை விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் ஆதிக்க மிருக்கவேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள பணசம்பந்தமான காரியங்களைப் பக்ஷபாதமற்ற விசாரணை சபையார் பரிசிலனை செய்து இந்தியா எவ்வளவுதூரம் பொறுப்பேற்றுக் கொள்வதென்றும் இங்கிலாந்து எவ்வளவுதூரம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதென்றும் அபிப்பிராயம் கூற அதிகார மிருக்கவேண்டும். இருதரப்பாருக்கும் அவரவர்கள் விரும்பும்போது சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளவும் அதிகாரம் இருக்கவேண்டும். இதற்கிடையில் காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்தியாவின் நன்மைக்கேற்ற வழியில் அவ்வப்போது செய்யப்படும் அவசியமான ஏற்பாடுகளையும் அங்கீகரிக்க உரிமை வகிப்பார்கள். காங்கிரஸ் சார்பாகக் காரியக்கமிட்டி நியமிக்கும் மற்ற பிரதிநிதிகளுடன் சர்வகக்ஷி மகாநாட்டில் கலந்துகொள்ளக் காங்கிரஸ் காந்திஜியை நியமித்து அவருக்கு அதிகாரம் கொடுக்கிறது.

## மற்றுமுள்ள தீர்மானங்கள்

கராச்சி காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் மிக மிகச் சிறந்தவை. காந்தி யடிகளின்பால் முழு நம்பிக்கை காட்டி அவரது தலைமையில் லண்டன் சர்வ கக்ஷி மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும், கான்பூர் கோர சம்பவத்தைக் குறித்து விசாரணை செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும் என்றும், எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து விடவேண்டும் என்றும், பகத்சிங்கு முதலியோரின் தைரியத்தையும் தேசபக்தியையும் பாராட்டுவதாகவும், சட்ட மறுப்பு இயக்கத்தில் கஷ்டப்பட்டவர்களையும் முக்கியமாகப் பெண்களையும் பாராட்டுவதாகவும், அதிகப் பிரசாரம் செய்து அந்நியத் துணி பகிஷ்காரத்தையும், பூரண மதுவிலக்கையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதாகவும், கீழாப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா இவற்றில் குடியேறியுள்ள இந்தியருக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதாகவும், வடமேற்கு எல்லைப் புற மாகாணச் சீர்திருத்த சம்பந்தமாகக் காங்கிரஸுக்குள்ள சந்தேகங்களைப் போக்கவேண்டும் என்று கோருவதாகவும், பர்மாப் பிரிவினை சம்பந்தமாக நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பர்மியருக்கே விட்டு விடவேண்டும் என்றும் மற்றும் பல தீர்மானங்களைக் கராச்சி காங்கிரஸ் நிறைவேற்றியிருக்கிறது.

தீ இல்லாமற்போனால் புகை கிளம்பாது.

# யசுர்வேதத்திலுள்ள சாரீரகோபநிஷத்.

(அவதாரிகன் மொழி பெயர்ப்பு.)

பூமி முதலான மகா பூதங்களின் செய்கையே நமது சரீரம். அதாவது பிருதிவி, அப்பு, அக்நி, வாயு, ஆகாசம் என்பனவே. இச் சரீரத்தில் எது கடினமோ, அது பூமி, எது திரவமோ அது ஜலம், எது உஷ்ணமோ, அது அக்நி, எது சஞ்சரிக்கின்றதோ அது வாயு, எது துவாரம் உள்ளதோ அது ஆகாசமாகும். சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்கு சப்த-பரிச-ரூப-ரச-கந்தங்கள், விஷயங்களாகும். இவை முறையே பூமி முதலானவற்றிலிருந்து உண்டானவை. வாய், கை, கால், குதம், உபஸ்தம். இவை கருமேந்திரியங்களாம். இவைகளின் தொழில்கள் முறையே மொழிதல், எடுத்தல், நடத்தல், ஜலமலம் விடுதல், ஆநந்தித்தல், என்பனவாகும். இவைகளும் முறையே பூமி முதலான மகா பூதங்களிலிருந்து உண்டானவையே. மனம், புத்தி, அகங்காரம், சித்தம், இந்த நான்கும் அந்தக்காரணங்கள் எனப்படும். இவைகளுடைய காரியங்கள் முறையே சங்கற்பம், விகற்பம், நிச்சயம், அபிமானம், அவதாரணம் இவைகளாகும். சங்கற்பம் விகற்பமிரண்டும், மனதினுடைய காரியங்கள், நிச்சயம் என்பது புத்தியினுடைய காரியமாகும். அபிமானம் என்பது அகங்காரத்தினுடைய காரியமாகும். அவதாரணம் என்பது, முன் செய்த காரியங்களிலுள்ள விசாரம்; இது சித்தத்தினுடைய காரியமாகும்.

மனதினுடைய இருப்பிடம் கண்டம். புத்தியினுடைய இருப்பிடம் முகம், அகங்காரத்தின் இடம் இருதயம். சித்தத்தின் இருப்பிடம் நாபிஸ்தானமாகும். அஸ்தி, தொலி, நாடி, ரோமம், மாம்சம் முதலியவைகள் பூமியாம்சமும், மூத்திரம், கபம், இரத்தம், சுக்கிலம், வியர்வை முதலானவை ஜலாம்சமும், தாகம், மடி (ஆலசியம்), மோகம், மைதுனம் முதலியவை அக்நியாம்சமும், நடத்தல், எழுதல், கண்களை மூடுதல் திறத்தல் முதலானவை வாயுவாம்சமும், காமம், குரோதம், லோபம், மோகம் முதலானவை ஆகாசாம்சமுமாகும்.

## இவைகளின் குணங்கள்

சப்த-ஸ்பரிச-ரூப-ரச-கந்தங்கள், பூமியினுடைய குணங்களும், சப்த ஸ்பரிச-ரூப-ரசங்கள் ஜலத்தினுடைய குணங்களும், சப்த-ஸ்பரிச-ரூபங்கள்

ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவேண்டும்.



அக்நியினுடைய குணங்களும், சப்த-ஸ்பரிசங்கள் வாயுவினுடைய குணங்களும், சப்தம் ஒன்று மாத்திரம் ஆகாசத்தினுடைய குணமுமாகும். சாத்வீக-ராஜஸ-தாம்ஸ குணங்கள் மூன்றாகும்.

ஜீவஹிம்சை செய்யாதிருத்தல், உண்மை பேசுதல், பிறர் பொருளை இச்சியாதிருத்தல், பிரமசாரிகளுடைய விரதம் அநுஷ்டித்தல், தானம் வாங்காதிருத்தல், கோபமில்லாதிருத்தல், சந்நியாசிகளையும், குருமார்களையும் பூசித்தல், உபசரித்தல், தேகத்தினையும் மனதினையும் சுத்தமாக்கிக் கோடல், சந்தோஷமும், திருப்தியு முடையவர்களா யிருத்தல், சுபாவத்திற்கு விரோதமின்றி யிருத்தல், ஆத்மஸ்துதி செய்யாதிருத்தல், தெய்வ விஸ்வாச முடையவரா யிருத்தல், உபத்திரவம் செய்யாதிருத்தல், நினையாதிருத்தல், இவைகள் சத்துவ குணமுடையவர்களுடைய முக்கிய இலக்ஷணங்களாகுமென்று அறியவேண்டும்.

நானே கர்த்தா, நானே எஜமான், நானே ஞானி, நானே அபிமானி என்று தன்னையே பெருமைப்படுத்திக் கொள்கிறவன் ராஜஸ குணத்தையுடையவனென்று பிரம வித்துக்களால் சொல்லப்படுகிறது. நித்திரை, ஆலசியம், மோஹம், பரஸ்திரீ கமனம். மைதுனம், களவு, இவைகள் தாமஸ குணங்கள் என்று பிரம வாதிகள் கூறுகின்றனர்.

சத்துவகுணமுள்ளவர், வானுலகத்தில் (சுவர்க்காதி லோகங்களில்) பிறப்பார்கள். ராஜஸ குணமுள்ளவர்கள் மத்திய உலகமாகிய பூலோகத்தில் ஜனிப்பார்கள். தாமஸகுணமுடையவர்கள் பாதாள (நரகாதி) லோகத்தில் பிறப்பார்கள். இவ்வாறாக, குணத்திரயங்களுடைய வித்தியாசத்தால் ஜன்மங்களுக்கு உயர்வு தாழ்வ சமானத்துவம் சித்திக்கிறதென்பது பெறப்படுகிறது. சாஸ்திரானுடவமாய் பிரமத்தை அறிகிற ஞானம், சாத்வீகமும், தருமாதருமங்களிலிருந்து தருமத்தை அறிகிற ஞானம் ராஜஸமும், அஞ்ஞானமாகிய அந்தகாரம் தாமஸமுமாகும்.

சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி துரியம் எனப்பட்ட அவஸ்தைகள் நான்காம். ஞானேந்திரியங்கள் ஐந்தும் கருமேந்திரியங்கள் ஐந்தும் அந்தக்கரணங்கள் நான்கும் ஆகப் பதினான்கு காரணங்களோடு கூடியதே சாக்கிரமாகும். அந்தக்கரணங்கள் நான்கோடு கூடியதே சுவப்பனமாகும். சித்தம் ஒன்றோடு கூடியதே சுழுக்தியாகும். ஜீவனோடு மாத்திரம் கூடியது துரியமாகும்.

ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்தும், பிராணன் ஐந்தும், மனது புத்தி இரண்டும் ஆகப்பதினேழும் கூடியது சூட்சுமதேகம், அல்லது லிங்க தேகமென்று பேராகும். மனம், புத்தி, அகங்காரம், வாயு, அக்நி, ஜலம், பூமி, ஆகாசம் இந்த எட்டும் பிரகிருதிகள். குதம், உபஸ்தம், கைகள் கால்கள், வாக்கு, சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் முதலிய பல தத்துவங்கள் கொண்டது இச் சரீரம்.

உண்மை சொல்லிக் கெட்டாரும் இல்லை, பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.

## லைப் அஷ்யூரென்ஸ் என்கிற

# ஜீவிய ஊர்ஜிதம்.

(இன்ஷியூரென்ஸ்.)

மனிதருக்கு உதவி செய்பவர் மனிதரே யாவர். ஆங்கிலத்தில் "கடவுள், தமக்கே உதவிசெய்து கொள்ளும் மனிதருக்கே உதவி செய்வார்" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. ஆனால் மனிதர் தமக்கே உதவி செய்துகொள்வது பிறரைக்கொண்டே. உலகத்தில் ஒவ்வொரு மனிதரும் தனித்தனியே ஜீவிக்க முயன்றால் ஒரு காரியமும் நடைபெறாது. ஒருங்கேகூடி பிரயத்தனஞ் செய்தாலே காரியங்கள் கைகூடுவது கடினமாகவிருக்கிறது. இக்காலத்தில் ஜனங்கள் சிநேக பாவத்துடன் ஒருவரையொருவர் அடைந்து தங்களின் கஷ்ட நஷ்டங்களை யெடுத்துரைத்து அவைகளைப் போக்கிக்கொள்ள வழி தேடுகின்றனர். மனிதர்தான் மனிதர் கஷ்ட சுகத்தை நன்கறிந்து வசதியான முறைகளை அனுஷ்டிக்கத் திறமை வாய்ந்தவர். ஒரு ராஜதானியில் பஞ்சம் உண்டாயிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். மற்ற ராஜதானிகளிலிருக்கும் ஜனங்கள் தங்களால் இயன்றவரையில் பொருளுதவி செய்கிறார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்னும் இம்மாதிரி சகாயம் செய்துவந்தார்களென்றால், இப்போது இருப்புப்பாதை, நீராவிக் கப்பல்கள், ஆகாய விமானங்கள் முதலிய வசதிகள் ஏற்பட்டிருக்கும்போது இம்மாதிரி சகாயம் அதிகரித்திருக்கிறதென்பது வியப்பையுண்டாக்குமோ? புதிய கருவிகளையும் விஷயங்களையும் கண்டுபிடிப்பது மனிதருடைய நன்மைக்காகத்தான் என்று வற்புறுத்தவும் வேண்டுமோ? உலகத்தில் ஞானம் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்களுக்குச் சௌகரியங்களும் அபிவிருத்தியாகின்றன. மூலைக்கு மூலை யிருக்கும் மனிதர் ஒருவரையொருவர் காணவும் அவர்களுடைய நடையுடை பாவனைகளை ஆராய்ந்து அறியவும் சுலபமாகவிருக்கிறது. இப்படி அவர்களை நன்றாய் அறிந்தபின்னர் அவர்களுக்குத் துன்பம் நேரிட்டால் அதை நிவர்த்திக்கப் பிரயத்தனஞ்செய்ய ஒரு தூண்டுதல் வேண்டுவதில்லை. ஒரு கிராமத்தில் இருப்போருக்குள்ளும் ஒற்றுமையிருக்குமாகில் எவருக்கேனும் பொருள்நஷ்டம் ஏற்பட்டால் மற்றோர் அவருக்கு உதவி செய்வர். ஒரு குடும்பத்திற்குத் தூண் போன்றவனாகிய தலைவன் இறந்து விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனால்தான் குடும்பம் ஏனையோரிடம் செல்வாக்குடன் பழகி வருகிறது. அவன் சம்பாதிக்கும் பொருளைக்கொண்டுதான் அக் குடும்பம் உண்ண உணவும் கட்டத்துணியும் பெறுகிறது. அவன் ஆதரவில்தான் குடும்பத்தில் பிறக்கும் சிறுவர்களும் சிறுமிகளும் வித்தியாப்பியாசம் செய்து வருகிறார்கள். அவன் பலத்தினால்தான் அவனுடைய மனைவிக்கு ஒரு அந்தஸ்து ஏற்படுகிறது. அவனை நம்பிதான் அவன் தாய் தகப்பன் கவலைகளைவிட்டு சிலகாலம் புத்திரன் சம்பாதிக்கும் பணத்தை வைத்துக்கொண்டு சந்தோஷமாகவிருக்கிறார்கள். இப்படியிருக்கும் மனிதன் திடீரென்று பால்யத்தில் இறந்துவிட்டால் குடும்பத்தின் கதி என்ன? அதன் அந்தஸ்து என்னாகும்? அவன் மனைவி



யாரைக்கொண்டு உயிர் தரிப்பாள்? அவனுடைய குழந்தைகள் எவ்வாறு கல்விகற்று முன்னுக்கு வரமுடியும்? அவனுடைய தாய் தகப்பன் அந்திய காலத்தில் புழுவாகத் துடிப்பர். இக்குடும்பத்தைப் பாதுகாக்க யாரால் முடியும்? மற்ற குடும்பத்தார் எவ்வளவுதான் கொடுக்கமுடியும்? திக்கற்ற கைம்பெண் தன்னுடைய குழந்தைகளுடன் தாய்வீடு சென்றாலும் அங்கே இவளுக்கு என்ன மரியாதை யிருக்கும்? தாயும் பிள்ளையு மானாலும் வாயும் வயிறும் வேறு என்று சொல்வதுபோல் அவரவர்களுக்குப் பணமிருந்தால்தான் கௌரவம். பணமில்லாமல் பிறர் கையை எதிர்பார்ப்போர் தாயானாலும் பெண்ணானாலும் கௌரவமில்லாமல் பிழைக்கவேண்டியதுதான். இது கண்கூடு. மிகைபடச் சொல்வதல்ல. இம்மாதிரி நிலையில் இருக்கும் மனிதருக்கு என்ன வழி? புருஷன் சம்பாத்தியமே இவர்களுக்கு ஐவேஜாதலின் அச் சம்பாத்தியத்திற்கு பங்கமில்லாமல் இருந்தால் போதுமானது. அதாவது புருஷன் இறந்துவிட்டாலும் அவன் மாத வருமானம் இவர்களுக்குத் தட்டாமல் வர ஒருமுறை இருக்கவேண்டும். அப்போது அவன் இறந்த கவலை யொன்று தவிர மற்றபடி சௌகரியக் குறைவு ஏற்படாது. அதிர்ஷ்ட வசமாக இம்மாதிரி முறையொன்று மேனாடுகளில் சென்ற 200-வருஷங்களாக மேன்மேலும் அப்யசிக்கப்பட்டு இந்தியாவிலும் சென்ற 80-வருஷங்களாகப் பரவி வருகின்றது. இம்முறைக்கே 'இன்ஷியூரென்ஸ்' அல்லது 'ஜீவிய ஊர்ஜிதம்' என்று பெயர்.

நாம் தபாலில் விலையுயர்ந்த பொருளையோ பணத்தையோ அனுப்பினால் இன்ஷியூர் செய்து அனுப்புகிறோம். பணம் சாதாரணமாக அனுப்பினால் கெட்டுப் போய்விடாது. இருந்தாலும் ஜாக்கிரதையாயிருப்பதன் பொருட்டு கொஞ்சம் அதிகமாகப் பணஞ் செலவழித்து பத்திரம் செய்கிறோம். கோடைகாலத்தில் மழை யில்லாதபோதிலும் குடையை எடுத்துச் செல்லுகிறோம். முன் ஜாக்கிரதையாக இருப்பது மனிதரின் இயல்பே. முக்கிய தஸ்தாவேஜுகளை மற்ற காகிதங்களோடு வைத்தால் அவை கெட்டுப்போகா. இருந்தாலும் அவைகளைப் பாதுகாப்பின் நிமித்தம் பெட்டியில் பூட்டி வைக்கிறோம். கப்பலில் போகும்போது காப்புப் படகுகள் (Life boats) எடுத்துச் செல்கிறார்கள். பிரயாணஞ்செய்யும் ஒவ்வொரு கப்பலும் விபத்துக்குள்ளாவதில்லை. இருந்தாலும் முன் ஜாக்கிரதையைக் கைவிடாமல் மாலுமி பாதுகாப்பு முறையை யனுசரிக்கிறான். இப்படியே குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனும் தான் திடீரென்று ஒருகால் இறந்துவிட்டால் என்ன செய்வது என்பதை யோசித்து குடும்பப் பாதுகாப்பிற்காக லைப் இன்ஷியூரென்ஸ் செய்யவேண்டும். அனேக ஜனங்கள் ஒன்று சேர்ந்து வருஷத்திற்கு இவ்வளவென்று ஒரு நிதியில் பணம் சேகரித்து வருகிறார்கள். அவர்களில் எவருக்கேனும் விபத்து நேர்ந்தால் பொருளுதவி செய்ய இந்நிதி சாதகமாகிறது. இந்நிதியில் சேர்த்து எத்தனை காலமாயினும் அவர்களுடைய குடும்பத்தைப்பாதுகாக்க எவ்வளவு தொகை வேண்டுமென்று உத்தேசித்தார்களோ அவ்வளவு தொகை தவறாது கிடைக்கும். அவர்கள் செலுத்திய தொகை எவ்வளவு சொற்பமாயினும் அக்கறையில்லை. பெறும் நிதி யொன்றே. இது மந்திரமல்ல, தந்திரமல்ல, இந்திரஜாலமல்ல, சூதாட்டமல்ல. செல்வமுற்று இன்புற இது ஒரு மேலான முறையே யாகும். இதைக் குறித்து இன்னொரு கட்டுரையில் ஆராய்வோம். (தொடரும்)

[குறிப்பு:—லைப் அஷ்யூரென்ஸைப்பற்றி விவரமாக அறிய விரும்புவோர் ஆனந்தபோதினி வாரப் பதிப்பில் வெளியாகும் கட்டுரைகளைப் படிக்கலாம்.]

# நேயர்கட்கு ஒரு வேண்டுகோள்.

## 17-வது ஆண்டின் முன்னறிக்கை.

மாட்சிமிக்க அன்பர்களே!

**நா**ளிது பிரஜோற்பத்தி௵ ஆடி௴ 1உ (16-7-31) நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகைக்கு 17-வது ஆண்டு பிறக்கப்போகிறது. நாம் சென்ற ஆண்டின் தொடக்கத்தில் வாக்குறுதி செய்தபடி நமது "ஆனந்தபோதினி" பற்பல சிறப்பியல்களுடன் பருவத்துக்கேற்ப வளர்ச்சிபெற்று 80 பக்கங்களில் வெளிவந்து உங்களை இன்புறச் செய்துகொண்டிருக்கும் உண்மையை நீங்கள் அநுபவத்தில் அறிவீர்கள். எல்லாத் துறைகளிலும் முன்னேறிச் செல்லுமாறு தமிழ் மக்களைத் தட்டி எழுப்புவதையே "ஆனந்தபோதினி" முதற்பெருங் கடமையாக மேற்கொண்டிருக்கிறது. மக்களின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத பழம் பெரும் பொருள்களும் புதுப்பொருள்களும் "ஆனந்தபோதினி"யில் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. விகட சம்பாஷணைப் படங்களும், தனிப்பட்ட விகடப் படங்களும், படங்களுடன் கூடிய சிறு கதைகளும், அறிவியல் கட்டுரைகளும் தாங்கி நமது "ஆனந்தபோதினி" உங்களை இன்பக் கடலில் திளைக்குமாறு செய்துகொண்டிருக்கிறது. 17–வது ஆண்டில் இன்னும் சிறந்த முறையில் வெளியிட ஏற்பாடு செய்து வருகிறோம். ஆகையால் "ஆனந்தபோதினி"யின்பால் அன்பு பூண்டு ஆதரித்து வரும் அன்பர்கள் எல்லாரும் 17-வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளிது பிரஜோற்பத்தி௵ வைகாசி௴ **24-ந்தேதி (6-6-31)**க்குள் மணியார்டர் வாயிலாகவோ நேரிலோ எங்களுக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும். பத்திரிகையை நிறுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் ஷை 6-6-31-ம் தேதிக்குள் எங்களுக்குக் கடிதவாயிலாகவோ நேரிலோ தெரிவித்துவிடவேண்டும். ஷை சந்தாத் தொகையை முன்பணமாகச் செலுத்திவிடும் நேயர்களுக்கு வழக்கப்படி ஆனிமாத சஞ்சிகையையும் அதற்குப் பின் வரும் சஞ்சிகைகளும் சாதாரணத் தபாலில் அனுப்பப்பட்டு வரும்.





பத்திரிகையை நிறுத்திவிடும்படி தெரிவித்தவர்கட்கு ஆனிமாத சஞ்சிகைமட்டும் சாதாரணத் தபாலில் வந்துவிடும்.

நாம் மேற்குறிப்பிட்டுள்ளபடி சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பாதவர்கட்கும், தங்களுக்குப் பத்திரிகை தேவை இல்லை என்ற விவரம் தெரிவிக்காதவர்கட்கும் அடுத்த 17–வது ஆண்டின் சந்தாத் தொகைக்காக பிரஜோற்பத்தி௵ ஆனிமாத சஞ்சிகையை வி-பி-யில் அனுப்பப்படும். எங்கள் வேண்டுகோட்படி 17-வது ஆண்டின் சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பாமலும், பத்திரிகையை தேவை இல்லை என்று விவரம் தெரிவிக்காமலும் சும்மா இருந்துவிடும் நேயர்கட்கு "மௌனம் சம்மதம்" என்ற நியாயத்தை அனுசரித்து, அவர்கள் வி-பி-யில் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறார்கள் என்று நாங்கள் தீர்மானித்து, ஆனி௴ சஞ்சிகையை 17-வது ஆண்டின் சந்தாவுக்காக வழக்கம்போல் வி-பி-யில் அனுப்பிவைப்போம். இந்த நண்பர்களை வி-பி-யைத் திருப்பிவிடாமல் தயைகூர்ந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம். இவ்வாறு வி-பி-யைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கட்கும் சஞ்சிகைகள் வழக்கம்போல் அனுப்பிவைக்கப்படும். வி-பி-யில் அனுப்புவதால் மூன்றணா அதிகச் செலவும் சஞ்சிகை வந்து சேர வீண் காலதாமதமும் ஆகும். இதில் இன்னொரு முக்கியமான சங்கடம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. வி-பி. வந்தால் மூன்று நாளைக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்கமாட்டார்கள். அதற்குமேல் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றவர்கள்-தாங்கள் எத்துணை நாள்வரை இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்களோ அத்துணை நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு இரண்டணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்தாலும் பத்து நாட்களுக்குமேல் வைத்திருக்கமாட்டார்கள். இந்தச் சங்கடங்களையெல்லாம் நோக்கும்போது அன்பர்கள் எல்லோரும் சந்தாத் தொகையை முன்பணமாக மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரிப்பதே நலம்.

பினாங்கு, சிங்கப்பூர், மலேயா முதலிய வெளி நாடுகளுக்கும் இதர வெளி நாடுகளுக்கும் வி-பி-முறை இல்லையாதலால் அவ்விடங்களிலுள்ள சந்தாநேயர்களெல்லோரும் சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் முன்பணமாகவே அனுப்பிவிடவேண்டும்.

அன்பு நிறைந்த நண்பர்களே! யாம் மேலே எடுத்துக் காட்டிக் குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் எல்லாம் உங்களுக்கும் எமக்கும் அநுகூலமானவை

களாகும். வீண் குதர்க்க விவாதம் செய்து எமக்கு அநாவசியமான சிரமத்தை உண்டாக்காமல் நேயர்கள் எல்லாரையும் அனுகூலப்படி நடந்துகொள்ளு மாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். விவாதத்தை நன்கு ஊன்றி உணராமல் வெறும் தர்க்கஞ் செய்து கடிதங்கள் எழுதி எமக்கு வேதனையை உண்டாக்கு வோரின் மனப்போக்கைப்பற்றி யாம் ஆண்டுதோறும் குறிப்பிட்டு வந்திருக் கின்றோம். அவற்றை உணர்ந்திருக்கிற புத்திமான்களுக்கு அவர்களுடைய செய்கை நன்மை பயக்காது என்பதும், யாம் செய்திருக்கும் ஏற்பாடே இரு பாலாருக்கும் நலந்தரத்தக்க தென்பதும் நன்கு விளங்கும். ஆகையால் பேரன்புடைய நண்பர்கள் விஷயங்களை நன்கு ஆராய்ந்து வீண் தர்க்கம் செய்யாமல் எம்முடைய ஏற்பாட்டின்படி நடந்து கொள்ளுவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

## முக்கிய குறிப்பு

முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால் மணி யார்டர் கூபனில் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டு "17-வது ஆண் டுக்கு" என்று விவரம் எழுதியனுப்ப வேண்டும். புதிய சந்தாதாரர்களாகச் சேருகிறவர்கள் "புதிய ஆண்டுக்கு" என்ற விவரம் எழுதியனுப்பவேண்டும். பழைய சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் உரிய சந்தா நம்பர் ஒவ்வொரு மாதத்திலும் வரும் சஞ்சிகையின் மேல் உறையில் வலது பக்கத்தில் எழுதப் பட்டிருக்கும். அல்லது அவரவருடைய விலாசத்திற்குமேல் அச்சிடப்பட்டிருக் கும். சந்தா நம்பர் குறிப்பிடுவோர் அதைப் பார்த்துக் கடிதங்கள், மணி யார்டர் முதலியவற்றில் எழுதவேண்டும். M. 1190 என்ற ரிஜிஸ்டர் நம்பர் சந்தா நம்பரல்ல. ஆகையால் அதை எழுதிவிடக்கூடாது. மேலே விவரித் தபடி கையால் எழுதப்பட்டிருக்கும் மேல் விலாசங்களில் கையால் எழுதப் பட்ட நம்பரையும், அச்செழுத்துக்களில் உள்ள விலாசங்களில் அச்செழுத்து நம்பரையும் குறித்தெழுத வேண்டும். பழைய சந்தாதாரர்களில் சந்தா நம்பர் தெரியாதவர்கள் முன்பணம் அனுப்பாமல் வி-பி-யிலேயே சஞ்சிகை பெற்றுக் கொள்வது நலம்.

பழைய சந்தாதாரர்களில் சஞ்சிகையை நிறுத்திவிடும்படி எழுதுவோரும் மேற் குறித்தபடி தங்கள் சந்தா நம்பரைக் குறித் தெழுத வேண்டும்.

பத்திராதிபர்.

---

உழுகிற மாடானால் உள்ளூரில் விலையாகாதா ?




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(717-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமீ முதலியார்.

கற்பகம்:—"ஓ! நானே முதலில் கூறவேண்டும். நான் முனியன் என் சகோதரன் என்று கூறியது உண்மையல்ல. ஆனால் சொற்ப காலத்திற்கு முன்வரையில் நான் அப்படியே நினைத்திருந்தேன். ஆயினும் அவன் இந்த சதியாலோசனையைப்பற்றிய எல்லா விஷயங்களையும் உன்னிடம் கூறிவிடுவதாய்க் கூறியிருக்கிறான்" என்று கூறிவிட்டு முனியனை விளித்து "என் நான் சொல்லுவது உண்மைதானே?" என்றாள்.

முனியன் "ஆம் உண்மையே" என்றான்.

ஆனந்தஸிங் அவனை நோக்கி "இப்போது உன் நண்பர்களையும் காட்டிக் கொடுத்துவிடும்படியான அவ்வளவு யோக்கியதை திடீரென்று எப்படி உனக்கு உண்டாய்விட்டது?" என்றான்.

கற்பகம்:—"தாங்கள் அப்படி வெறுப்பாய்ப் பேசலாகாது. இவனைக் கெட்ட வழியிலிருந்து அடியோடு திரும்பிவிடும்படி உதவி செய்யவேண்டும்" என்றாள்.

ஆனந்த:—"எனக்கும் முனியனுக்கும் இதுவரையில் நடந்த அனுபவத் தால், நான் அவனுடைய விஷயத்தை எவ்வளவுதூரம் நம்புவே"னென்று அவனுக்கே தெரியும். "என் முனியா?" என்றான்.

முனியன்:—"உனக்கு எல்லாம் தெரியும்; நான் கூறவேண்டியது என்ன விருக்கிறது?" என்றான்.

ஆனந்த:—எனக்கு எவ்வளவு தெரிந்திருந்தாலும் இருக்கட்டும். இந்த முழு சதியாலோசனையையும் கூடியவரையில் சுருக்கமாய்க் கூறு.

முனியன்:—தாயாருக்கு எப்போதும் உலகநாதம்பிள்ளையின் மனைவி மேல் வெறுப்பே. அப்போதே நீ கடிதம் வைத்துக்கொண் டிருக்கிறா யல்லவா?

ஆனந்:—ஆம்.

முனி:—அந்தக் காலத்திலேயே தாயாருக்கு அவள்மேல் வெறுப்பே. அப்போதவள் ஜெயராமன் மனைவியா யிருந்தாள்.

ஆன:—அவனை மணம் செய்து கொண்டாளோ?

முனி:—ஆம். அதுகூட வுனக்குத் தெரியுமே.

---

அறிவு பெருத்தோன் அல்லல் பெருத்தோன்.

ஆனந்:—பெரும்பாலும் தெரியும். அப்புறம் கூறு. ஜெயராமன் எங்கிருந்தான்.

முனியன்:—அவன் இறந்து போய்விட்டான். அவனுக்கும் சுந்தரம்மாளுக்கும் இரகசியமாய்க் கல்யாணம் நடந்தது. அவன் இறந்த பின் அக் கலியாணம் பொய்க் கலியாணமென்று அவள் நம்பும்படியாய்த் தாயார்செய்துவிட்டார்கள். அதனால் குழந்தை பிறந்தபோது சுந்தரம்மாள் அதைத் தாயாரிடம் கொடுத்து எங்காவது தர்மசாலையில் விட்டுவிடச் சொன்னாள். அதன் பிறகு அவள் இந்த பாங்கிக்காரனை மணம்புரிந்து கொண்டாள். அப்போதுதான் "எனக்கு விரோதமாய்க்கிளம்பி சாட்சி சொல்லும்படி அக்குழந்தையை வளரவைக்கவேண்டாம்" என்று தாயாருக்கெழுதினாள். அவளுடைய அர்த்தமாவது ஒருபோதும் அப்பெண்ணுக்கு அவள் தாயார் யாரென்று தெரிவிக்க வேண்டாமென்பதே. இதற்கிடையில் அக்குழந்தை இறந்துபோயிற்று. ஆனால் தாயார்தான் அவள் கடிதத்தை வேறுவிதமாய் அர்த்தம் செய்துகொண்டு அவள் எழுதியபடியே அக்குழந்தையை வளரவிடாது கொன்று விட்டதாகவும் அவளிடம் கூறினார்கள். உண்மையில் ஆதிமுதல் அவள் முழுதும் நிரபராதியே. ஆனால் மேற்கண்ட சங்கதிகளால் அவள் தன் முதற் கலியாணத்தைத் தன் கணவனிடம் கூறாமல் மறைத்துவிட நேர்ந்தது. அதனால்தான் இப்போது இந்த இக்கட்டில் சிக்கிக்கொண்டாள். ஏனெனில் அவள் கொலையாளியென்றும் கலியாணம் செய்துகொள்ளாமலே குழந்தையைப் பெற்றாளென்றும் நிரூபிக்க இக்கடிதம் இருக்கிறது. அதனால்தான் அவள் இவ்வளவு சுலபமாய் சிக்கிக்கொண்டாள். பிறகு இரண்டாவதாய் அவள் உலகநாதம் பிள்ளையை மணந்து இரண்டாவது குழந்தையைப் பெறும்வரையில் தாயாருக்கும் அவளுக்கும் ஒரு சம்பந்தமு மில்லாதிருந்தது. அச்சமயம் உலகநாதம் பிள்ளை நாட்டிலில்லை. அப்போது தாயார்போய் அவளைக் கண்டார்கள். தாயார் ஒரு குழந்தையை மறைத்து எடுத்துக்கொண்டு போயிருந்தார்கள். அவள் கண் முன்பாகவே அக் குழந்தையை அங்குவிட்டு அவள் குழந்தையையெடுத்து வந்துவிட்டார்கள். கூச்சலிட்டால் பழைய சங்கதிகளை வெளியிட்டு விடுவதாய்ப் பயமுறுத்தவே அவள் பேசாமலிருக்க வேண்டியதாயிற்று. அக் குழந்தையும் மடிந்தது. ஒருசமயம் தாயார் அதற்குக் காரணமா யிருந்திருக்கலாம். எப்படியோ கற்பகம் அக் குழந்தையல்ல. தாயாருக்கு அவள் வாழ்நாட்கள் முழுமையும் சுகமின்றி யழித்து விடவே பிரியம். இவ்வளவெல்லாம் நடந்தும் அவள் சுகமாகவும் சந்தோஷமாகவுமே யிருப்பதைக்காண தாயாருக்கு மனம்பிடிக்கவில்லை. அதன்மேல்தான் இச் சதியாலோசனை செய்யப்பட்டது. இதற்குமுன்பே இது நடத்தப்பட்டிருக்கும்; ஆனால் தாயார் கள்ள நாணயம் செய்யும் கூட்டத்தாரோடு சிக்கிக்கொண்டு தண்டனை யடைந்தாள். பிறகு விடுதலைபெற்று வந்ததே கிட்டுவின் சினேகம் ஏற்பட்டது. உடனே அவன் யோசனையின் உதவியால் இந்த ஏற்பாடுகளனைத்தும் நடத்தப்பட்டன. நாங்கள் செய்த காரியங்களனைத்தையும் கூறட்டுமா?" என்றான்.

ஆனந்:—வேண்டாம் அவை யாவும் எனக்குத் தெரியும்; சில விவரங்கள் தெரியவேண்டும். நீயும் கற்பகமும் நோட்டை மாற்றப் பாங்கிக்கு ஏன் சென்றீர்கள்?

இதைக்கேட்ட முனியன் தடுமாற்றத்தோடு கற்பகத்தின் முகத்தை நோக்கினான்.



கற்பகம்:—ஆகட்டும் கூறு. அது ஏதோ கெடுதிக்கே யென்று நான் அறிவேன். ஆயினும் நான் உன்னை மன்னித்து விடுகிறேன்.

முனியன்:—மனோன்மணி யோடிவிட்ட சங்கதியைக் கேட்டதே எங்களுக்குக் கொஞ்சம் கலவரமாய்விட்டது. ஏனெனில் எங்கள் ஆலோசனையின் ஓர்பாகம் நான் அவளை மணம்புரிந்து கொள்ளவேண்டுமென்பது. நாங்கள் பணத்தை யெடுத்ததற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது பணம் எங்களுக்கு வேண்டும். அதில் உலகநாதம் பிள்ளையின் மனைவி எங்களுக்கு உதவி செய்யும்படி செய்து விட்டால் இதில் அவளையும் சிக்கிக் கொள்ளும்படி செய்து விடலாம். அதோடு அக்களவை இராஜவேல்மேல் சுமத்தி யவனை நமது வழிக்குக் குறுக்கே வாராதபடி ஒழித்து விடலாம் என்று கிட்டு யோசனை கூறினான்.

ஆனந்:—பணம் அங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

முனி:—குள்ளன் வேவு பார்த்திருந்து அதை யறிந்து வந்தான்.

ஆனந்:—மனோன்மணியின் தாயாரை யுதவி செய்யும்படி எப்படிச் செய்தீர்கள்.

முனி:—தாயார்போய் அவளை மிரட்டினார்கள். முதலில் அவள் பூட்டின் இரகசியம் தெரியாதென்றாள். கட்டாயப்படுத்தப் பட்டபோது தன்னிடமே அந்த இரகசிய விவரம் இருப்பதாய் ஒப்புக்கொண்டாள்.

ஆனந்:—மனோன்மணி வீட்டை விட்டோடிவிட்ட காரணம் உனக்குத் தெரியுமா?

முனியன்:—தாயாரும் அவள் தாயாரும் பேசிக்கொண்டிருந்தபோது ஒத்துக்கேட்டிருந்து, தான் உலகநாதம் பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் பிறக்கவில்லை யென்றும், அவர் மனைவி கொலைபாதகி யென்றும் அப்பெண் அறிந்துகொண்டு ஓடிவிட்டாள் என்று சந்தேகிக்கிறோம். அவள் ஓடிவிட்டாளென்றும் துப்பறியும் கிருஷ்ணாவலிங் இதைக் கண்டுபிடிக்க அமர்த்தப்பட் டிருக்கிறானென்றும் அறிந்ததே கிட்டு எங்கள்மேல் சந்தேக முண்டாக்காம லிருக்கச் செய்ய ஒரு சூழ்ச்சி செய்தான். ஏனெனில் கிருஷ்ணாவலிங் யாவும் கண்டுபிடித்து விடுவானென்று அவனுக்கு மிக்க பயம். அவன் பயந்தது சரிதானென்று பின்னால் நடந்த சம்பவங்களால் தெரிந்தது. நான் இராஜவேலை நன்றாய்க் கவனித்துப் பார்த்துக்கொண்டேன். ஆனால் மனோன்மணி வேடம் போட்டுக்கொள்ள ஒருவர் வேண்டும். கிட்டு கற்பகமே யதைச் செய்வேண்டும் என்றான். அவன் பிசாசைப்போல் சதியாலோசனை செய்வதில் கெட்டிக்காரன். அவள் தான்செய்வது இன்னதென்று அறியக்கூடாது என்று தக்கஏற்பாடு செய்தான். அதன்படி நான் ஒரு தந்திரம் செய்தேன். அதாவது, மனோன்மணியின் படத்தைக் கொண்டு வந்து அவள் மேஜைமேல் வைத்து, இப்பெண் என் காதலியென்று கூறினேன். பிறகு மெதுவாய் அவள் குணங்களைப் புகழ்ந்து கூறினேன். கற்பகத்திற்கு அப்படத்தைப் பார்த்ததே மிக்க பிரியமுண்டாய் விட்டது. அதன் பிறகு நான் "மனோன்மணி யுன்னை மிக்க விருப்பங்கொண்டிருக்கிறாள். நீ நாடகத்தில் இருப்பது அவளுக்கு மிக்க பிரியம். அதிலும் நீ உருமாறுவதில் இணையில்லாதவள் என்று நான் கூறிவிட்டேன்; அதையே பார்க்க வேண்டுமென்று என்னைத் தொந்திரவு செய்கிறாள். அதற்காக அவளையே திடுகிட்டுச் சந்தோஷமடையும்படும்படி செய்ய நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன்" என்றேன்.




**கடலில் மிதக்கும் நகரம்:—**

பிரான்சுதேச எஞ்ஜினீயர் லியோன் வோயென்கொனே என்பவர் ஒரு பெரிய கப்பலைக் கட்ட முயற்சித்து வருகிறார். அது கடலில் மிதக்கும் பெரிய நகரம் போலக் காணப்படுகிறதாம். அதில் இரண்டு லட்சம் ஜனங்கள் வசிக்கலாம். இது வரை செய்யப்பட்ட எல்லாக் கப்பல்களைவிட இதுவே மிகப் பெரிய கப்பல். அதைச் செய்துமுடிக்க 80 கோடி பவுன் செலவாகும்.

**ஜார்ஜ் மன்னர் பதவிக்கு போட்டி:-**

இங்கிலாந்தில் அரசர் பிரானைகவுள்ள ஜார்ஜ் மன்னரின் பதவிக்கு ஸ்ரீ. ஹால் என்பவர் ஒருவர் போட்டி போடுகிறார். அப் பதவிக்கு ஹால் என்பவரே வாரிசு பாத்தியதை யுடையவ ரென்று விவாதிக்க ஆரம்பித்திருக்கிறார். அவர் சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்திலும் தன் பாத்தியதையைப் பற்றிப் பேசினாராம். ஆனால் கூட்டத்தில் சிலர் குழப்பம் விளைவிக்கவே போலீசார் வந்த போது அவர் ஓடி மறைந்துவிட்டாராம்.

**உலகில் பெரிய மணி:—**

மாஸ்கோ தேவாலயத்தில் பிரம்மாண்டமான மணி யொன்று இருக்கிறதாம். அதன் வாய் அறுபதடி சுற்றளவுள்ளது. உலகத்தில் அதுவே மிகப் பெரிய மணியென்று சொல்லப்படுகிறது.

**எழுத்தில் ஆண் பெண் வித்தியாசம்:-**

ஜப்பான் பாஷையில் ஆண்கள் எழுத ஒருவகை, பெண்கள் எழுத ஒருவகை ஆக இருவகை எழுத்துகள் இருக்கின்றனவாம்.

**ஜர்மன் குட்டிக் கப்பல்:—**

ஜர்மன் தேசம் கட்டிவரும் குட்டி யுத்தக் கப்பல்களைப் பூர்த்தி செய்யத்தக்க வேலை செய்யப்படும்படி ஜர்மன் பார்லிமெண்ட் அனுமதித்து விட்டதாக பர்லினிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. பொதுவுடமைக் கட்சியினர் இதை எதிர்த்தனர். ஆனால் அவர்களுடைய ஓட்டு குறைவாக இருந்ததால் தோற்று விட்டனர்.

**குழந்தைகளை விற்ற மாது:—**

பிரேக் என்னும் தேசத்தில் சுமார் நாற்பது வயதான ஒரு தாதி இருந்தாள். அவளிடம், திருட்டுத்தனமாகக் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை ரகசியமாக விட்டு வைத்து அவைகளைக் காப்பாற்றுவதற்காக மாதவாரி சந்தா செலுத்துவது வழக்கம். அவள் அக் குழந்தைகளை வளர்த்துப் பிறகு குழந்தைகளே இல்லாத மாதர்களுக்கு குழந்தை ஒன்றுக்கு 60-பவுன் வீதம் வாங்கிக்கொண்டு விற்றுவிடுவது வழக்கம். அவள் இவ்வாறு குழந்தைப் பண்ணைவைத்து நடத்திருன் என்பது ருஜுவாகவே ஐந்து வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டாள்.

**கிச்சிலிப்பழம் திருட்டுக்கு மூன்றுமாதம்:—**

பம்பாயில் சமீபத்தில் ஒரு விசித்திர கேஸ் நடைபெற்றது. அதாவது உஜ்டாலி என்னும் ஒரு மகம்மதியர் ஒரு கிச்சிலிப் பழத்தை அதுவும் அழுகிப்போன ஒரு பழத்தைத் திருடியதற்காக அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. அவர் இதற்கு முன் பலமுறை சிறை சென்றிருப்பதைக் காரணமாகக் கொண்டு மாஜிஸ்ட்ரேட் அவருக்கு மூன்றுமாத கடினகாவல் தண்டனை விதித்தார்.

**74-வயதான குழந்தை:—**

வெஸ்ட் போலியா என்னும் தேசத்தைச் சேர்ந்த லிப்ஸ்டாட் என்னும் இடத்தில் 103-வயதான அன்னா பிச்சார்ட் என்னும் விதவை ஒருத்தி இருக்கிறாள். அவளது மூத்த குமாரனுக்கு வயது 74. அவன் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றான். அவன் வெளியில் போனால் இரவில் திரும்பி வருகிறவரையில் தாயார் தூங்குவதே இல்லை. தன் குழந்தை வரவில்லையே என்னும் கவலையுடன் இருக்கிறாள்.

**இருபது ஆடவரை மணந்த மாது:—**

வியன்னா நகரிலுள்ள மேரி எர்சலீன் என்னும் மாது 1920-ஆம் வருஷத்தில் முதல் முதலாக ஒருவரை விவாகம் செய்து கொண்டாள். அவருடன் நான்கு மாதங்கள் வாழ்ந்த பின்னர், அவர் பல்லொன்று உடைந்ததால் அவர் அழகாயில்லை யெனச் சொல்லி விவாகரத்து செய்து கொண்டாள். பிறகு வேறு ஒருவரை விவாகம் செய்து கொண்டதில் அவர் மற்றொரு மாதைப் பார்த்துச் சிரித்தார் என்பதற்காக அவரையும் விலக்கிக் கொண்டாள். இவ்வாறாக 1930-ஆம் வருஷத்துக்குள் 19-கணவன்மாரை மணந்து ஒவ்வொருவரையும் விலக்கிவிட்டாள். இறுதியாக இப்போது, தன்னுடன் பால்யத்தில் படித்த ஒரு சினேகிதரை விவாகம் செய்து கொண்டிருக்கிறாள். இனி ஒருவரையும் மணந்து கொள்ள மாட்டேன் எனச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாள். அவளுக்கு இவ்விருபது கணவர்களாலும் நான்கு பெண் மக்கள் பிறந்திருக்கின்றனவாம்.

**மாதர்களின் மதுபானக் கடைகள்:-**

வங்காளத்தைச் சேர்ந்த மிதுனபுரி ஜில்லாவில் சில மதுபானக் கடைகள் மாதர்களுக்கு ஒப்பந்தத்துக்கு விடப்பட்டிருக்கின்றன என்பதை வங்காள சட்டசபையில் சில தினங்களுக்கு முன் ஒப்புக் கொண்டதாகவும், அவ்வாறு செய்தால் மதுபானம் அதிகம் விற்க முடியுமென அவர்கள் நினைத்திருக்கலா மென்றும் கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'அட்வான்சு' பத்திரிகை கூறுகிறது.

**ஈராண்டு குழந்தையின் அபார சக்தி:-**

கல்கத்தாவைச் சேர்ந்த அஹிரிதோலா என்னுமிடத்திலுள்ள ஸ்ரீ. நந்தலால் ராயின் இரண்டாவது குமாரனை சுமார் இரண்டு வயதுள்ள அணில்பூஷணராய் சங்கீதக் கருவிகளில் ஒன்றான தபேலா வாசிப்பதில் மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவனாக இருக்கிறான். அவன் இதற்குள் பல மெடல்களைப் பெற்றிருக்கிறான். அவனது மூத்த சகோதரனும் ஐந்தாவது வயதிலேயே எத்தகைய பழக்கமுமின்றி ஹார்மோனியத்தை மிக அழகாக வாசிக்கிறான். இச் சகோதரர்களின் அற்புத சக்தியைக் கண்டு அனைவரும் ஆச்சர்யப் படுகின்றனர்.

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பிரஜோற்பத்தி௵ வைகாசிமீ—கலியுகாதி 5033, சாலிவாகனம் 1854,
பசலி 1340, கோல்லமாண்டு 1106, ஹிஜரி 1349-50,
இங்கிலீஷ் 1931௵ மேமீ—ஜூன்மீ

| வைகாசி | மேயீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | [விஷ்ணுபதிபுண்யகாலம் |
| 1 | 14 | வியா | து28-10 | ரே58-23 | சி58-23அ | ரிஷபரவி நா-31-23-வி, |
| 2 | 15 | வெ | திர32-38 | அஸ்60 | அயி60 | மாசசிவராத்திரி |
| 3 | 16 | சனி | சது35-53 | அஸ்3-48 | சித்60 | மூலிகை உபயோகிக்க |
| 4 | 17 | ஞா | அ●37-58 | பர·✕·7-53 | சித்60 | அமாவாசை, கிருத்திகை |
| 5 | 18 | திங் | பிர38-23 | கிரு10-48 | ம10-48அ | ஜேஷ்ட சுத்தம் |
| 6 | 19 | செவ் | துதி37-43 | ரோ12-18 | அ12-18சி | சந்திர தரிசனம் |
| 7 | 20 | புத | திரி35-58 | மிரு12-45 | சித்60 | கரிநாள், ரம்பாதிரிதிகை |
| 8 | 21 | வியா | சது33-15 | திரு12-18 | ம12-18அ | மாசசதுர்த்தி விரதம் |
| 9 | 22 | வெ | பஞ்29-45 | புன10-53 | சி10-53மா | மிதுனயனம் நா-1-50-வி |
| 10 | 23 | சனி | சஷ்25-40 | பூச8-50 | சி8-50மா | சஷ்டி,ஆரண்யகௌரி விர |
| 11 | 24 | ஞா | சப்20-58 | ஆயி6-13 | சி6-13மா | ஆயுதம் வாங்க [தம் |
| 12 | 25 | திங் | அஷ்15-48 | மகம்3-3 | மா3-3சித் | அவமாகம்,சித்திரம் எழுத, |
| | | | | பூரம்59-30 | | மாடுவாங்க [தா |
| 13 | 26 | செவ் | நவ10-13 | உத்55-35 | அ55-35சி | தசஹராவிரதம்,கங்காவ |
| 14 | 27 | புதன் | தச4-15 | அஸ்51-28 | மா51-28சி | ஸ்மார்த்த ஏகாதசி, அவ |
| | | | ஏகா58-10 | | | மாகம் [தரி முடிவு |
| 15 | 28 | வியா | து52-3 | சித்47-20 | சி47-20அ | வைஷ்ணவ ஏகாதசி, கத் |
| 16 | 29 | வெ | திர46-8 | சுவா43-18 | சித்60 | கரிநாள், சுப முகூர்த்தம் |
| 17 | 30 | சனி | சது40-38 | விசா39-45 | சித்60 | கரிநாள், நரசிம்ம ஜயந்தி |
| 18 | 31 | ஞா | ○35-45 | அனு36-58 | மா60 | பௌர்ணமி |
| 19 | 1 | திங் | பிர32-13 | கே35-10 | சித்60 | |
| 20 | 2 | செவ் | துதி29-48 | மூல34-43 | அ34-43சி | |
| 21 | 3 | புதன் | திரி29-0 | பூரா35-53 | அயி60 | |
| 22 | 4 | வியா | சது29-50 | உத்38-38 | சித்60 | |
| 23 | 5 | வெ | பஞ்32-30 | திரு43-10 | மா43-10சி | |
| 24 | 6 | சனி | சஷ்36-45 | அவி49-5 | சித்49-5அ | |
| 25 | 7 | ஞா | சப்42-10 | சத56-13 | சித்60 | |
| 26 | 8 | திங் | அஷ்48-15 | பூரட்60 | மா60 | |
| 27 | 9 | செவ் | நவ54-35 | பூரட்3-50 | மா3-50அ | |
| 28 | 10 | புத | தச60 | உத்11-23 | சி11-23மா | |
| 29 | 11 | வியா | தச0-48 | ரே18-13 | சி18-13அ | |
| 30 | 12 | வெ | ஏகா4-35 | அஸ்23-48 | அ23-48சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 31 | 13 | சனி | துவா7-38 | பர27-53 | சி27-53அ | யமுனா புஷ்கரம், கடன்தீர் |
| 32 | 14 | ஞா | திர8-55 | கி✲30-20 | சித்60 | கிருத்திகை [க்க |

1931௵ ஜூன்மீ

| ராகு சுக் | புத | சூரி | குரு |
|---|---|---|---|
| | 2-மேஷ-சுக் 14-சிம்ம-செ 15-தனு-சனி | | செவ் |
| சனி | 24-ரிஷ-புத 26-ரிஷ-சுக் 31-கட-குரு | | |
| | | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.


## எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்து.




ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையுள்ளது!!!

வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தரக்கூடியது நமது

### (புட்டி 1-4-0) தேவரசம் (புட்டி 1-4-0)

எல்லாவித ஜுரங்கள், க்ஷயம், காசம், கோழை சம்பந்தப்பட்ட சகலவித மான இருமல், மூச்சு திணறுதல், ஜலதோஷம், தலைவலி, மண்டை இடி, ஒருத்தலைவலி, கைகால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, வாய்வு சம்பந்த மான வியாதிகள், வாதரோகம், பிளேக்கு, காலரா, அஜீரணம் வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி, ஜன்னி முதலிய திடீர் என்று ஏற்படும் எல்லாவித வியாதிகளுக் கும், உள்ளுக்கும் மேலுக்கும், துளிக் கணக்கில் உபயோகிக்க நிமிஷக் கணக் கில் சுகமடையலாம். தேவரசம் புட்டி 1-க்கு ரூபா 1–4–0 வி. பி. வேறு. வியாபாரிகளுக்கு கமிஷன் கழித்து அனுப்பப்படும்.

### மதன சிந்தாமணி லேகியம்.

ஆண்மையும், அபாரமான தாதுபுஷ்டியும், நீடித்த போக சக்தியும், நல்ல பசியும், அதிக சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். உயர்ந்த முறையில் தயார் செய்தது. 1-சேர் 24 தோலா டின் ஒன்றுக்கு விலை ரூ. 3. (ஸ்பெஷல்) மேற்படி லேகியத்தில் தங்கபற்பம் உயர்ந்த கஸ்தூரி சேர்த்தது ஒரு சேர் ரூபா 10 (கால் சேர் ரூபா 3.) V. P. வேறு.

### தேவாமிர்தம்.

பித்தம், மயக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்று வலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, மார்வலி, மண்டை இடி, ஒத்தைத் தலைவலி, மேகம் வாதம், கீல்வாய்வு, ஓடுவாய்வு, கீல் பிடிப்பு, கீல் வீக்கம், முழங்கால் வாய்வு, பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலா தார உஷ்ணம், மூல முளை மூலத்தில் இரத்தம் விழுதல் முதலிய இன்னும் காண்பட்ட அநேக வியாதிகளும் போகும். 1 சேர் டின் ரூபா 2. V.P. வேறு.

சந்தனாதி தைலம் 5 பலம் டின் ரூபா 1—1—0.

பற்பொடி டின் 1-க்கு அணா 3.

அன்னிய நாட்டார் தபால்செலவு உள்பட முன்பணம் அனுப்பவும்.

**டாக்டர். எஸ். பி. வைத்தியசாலை,**

தபால்பெட்டி நெ. 169, 149, பிராட்வே, மதராஸ்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

